டிசம்பர், 1957

ஹேவிளம்பி - மார்கழி

40 நயா பைசா

மஞ்சரி

மறு பிறவி அற்றவர்

வறுத்த விதை விளைவதில்லை. அறிவென்னும் தீயில் காய்ந்த செயலும் அதுபோலவே விளைவற்றுவிடுகிறது. ஞானத் தீயில் மோகத்தைக் கொளுத்தித் தம் செயலை நிறைவேற்றியவர்கள் மீண்டும் இந்த உலகுக்கு வர வேண்டிய தேவை இல்லை.

—நாகசேனன்.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர் :
என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர் :
தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கௌரி அம்மாள்
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்
கி. தாமோதரன்

ஓவியர்கள் :
ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை-4. பிரதி ஆங்கில மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 40 நயா பைசா (6½ அணா). வருஷ சந்தா ரூ. 4/75 (ரூ. 4-12-0). சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புங்கள். விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.
'மஞ்சரி'யிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 10] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: டிசம்பர் 1957 [இதழ் 12

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

கைதிகள் மகாநாடு: லக்னௌ நகரில் கைதிகள், மாஜி - கைதிகள் இவர்களின் மகாநாடு ஒன்று நடந்திருக்கிறது. இந்தப் புதுமையை உலகப் பிரசித்தி பெற்ற அமெரிக்க 'நியூயார்க் டைம்ஸ்', பிரிட்டிஷ் லண்டன் 'டைம்ஸ்' இரண்டு பத்திரிகைகளுங்கூடப் பாராட்டியிருக்கின்றன. குற்றவாளிகளைப் பெரும் பாவிகள் என்று மதிக்கக்கூடாது என்பது சமூக நூலார் பலருடைய அபிப்பிராயம். என்னவோ காரணத்தால் மனம் பேதலித்துத் தவறு செய்தவர் என்றே அவர்களை மதிக்க வேண்டும் என்பது அந்த நிபுணர்களின் கருத்து. தவறு செய்வோரைச் சீர்திருத்த வேண்டும்; அந்த முறையில் சிறைச்சாலை நிர்வாகம் நடைபெற வேண்டும். இந்த நோக்கத்தைச் சென்னை, உத்தரப் பிரதேசம் இரண்டு ராஜ்யங்களிலும் சிறைச்சாலை நிர்வாகத்தில் ஓரளவு அநுஷ்டிக்கிறார்கள். உத்தரப் பிரதேசத்தில் கைதிகள் செய்யும் வேலைக்கு, பிற தொழிலாளருக்கு எப்படியோ அந்த விகிதத்திலே சம்பளம் கொடுக்கிறார்கள். நல்ல நடத்தையோடு இருந்தால், தண்டனைக் காலத்தை வஜா செய்கிறார்கள். இதே தாராளத்துடன் சென்னைச் சிறைச்சாலைகளிலும் கைதிகளை நடத்துகிறார்கள். உத்தரப் பிரதேசத்தில் இந்த முறையை நுழைத்தவர் டாக்டர் ஸம்பூர்ணானந்தர். ''ஸம்பூர்ணானந்தர் நாளில், கைதிகள் சிறையை விட்டு வெளிவரவே விரும்ப மாட்டார்கள். வெளியில் வந்து திண்டாடுவதைவிட உள்ளே இருப்பதே சுகம் என்று தீர்மானித்துவிடுவார்கள்'' என்று குறை கூறுவோர் உண்டு. சென்னையில் இப்படி எந்தக் கைதியும் இது வரைக்கும் தீர்மானித்ததாகத் தெரியவில்லை. சர்க்கார் ஆதரவில் நடந்த லக்னௌ கைதிகள் மகாநாட்டில் சில தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள். (1) கைதிகளே தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளின் கமிட்டி சிறை நிர்வாகம் புரியவேண்டும்; (2) கைதிகளுக்குக் கல்விப் பயிற்சியும் தொழில் பயிற்சியும் அளிக்க வேண்டும்; (3) வருஷத்துக்கு ஒரு தரம் ஊருக்குச் சென்றுவர ஒரு வார லீவு தர வேண்டும்; (4) நாள் ஒன்றுக்கு ஆறு மணி என்று வேலை நேரத்தை நிர்ணயிக்க வேண்டும். இப்படிச் சுமார் நூறு யோசனைகளைக் கைதிகளின் தீர்மானங்கள் கூறுகின்றன. கைதிகள் சொல்லும் சகல யோசனைகளையும் பூர்த்தி செய்வது சாத்தியம் இல்லைதான். அதற்குப் பெருஞ் செலவாகும்; தவிர, வெளி நிலைமைகளைவிடச் சிறை வாழ்வை மேலாகச் செய்வதும் சரியல்ல. ஆயினும், ஓரளவு தாராள மனோபாவத்துடன், கைதிகளும் மனிதர்களே என்று பாவித்து நடத்துவது அவசியம். அப்படி நடத்துவதால் எல்லாரும் குற்றம் புரிந்து சிறை சென்றுவிட ஆசைப்பட்டுவிட மாட்டார்கள். ஆயிரந்தான் சொன்னாலும், சிறை சிறைதான். கூண்டுக் கிளிக்கு இயற்கை வாழ்வோ, இன்பமோ கிடையாது.

* * *

பஞ்சாயத்து நிர்வாகம்: ஸ்தல ஸ்தாபனச் சீர்திருத்த யோசனைகள் அடங்கிய வெள்ளை அறிக்கை

ஒன்றைச் சமீபத்தில் சென்னை சர்க்கார் வெளியிட்டார்கள். அது பற்றிச் சென்னைச் சட்ட சபையிலும் ராஜ்ய சபையிலும் விவாதங்கள் நடந்தன. பஞ்சாயத்துக்களுக்குப் போதியபடி வருமானத்தை அதிகப்படுத்தச் சர்க்கார் யோசனைகளில் ஒரு குறிப்பும் இல்லை. பஞ்சாயத்துச் சிறப்புற வருமானம் மிக முக்கியம். ஜில்லா போர்டுகளைக் கலைத்துவிட வேண்டும் என்பது சர்க்காரின் யோசனைகளில் ஒன்று. இதற்குப் பதிலாகச் சட்டப்படி நியமித்த ஜில்லா அபிவிருத்தி கவுன்ஸில், சர்க்காருக்கு யோசனை கூறுமாம். திட்டம் போடுவது, மதுவிலக்கு, பாய்ச்சலாதாரம் இவைபற்றி யோசனைகள் கூற ஜில்லாக் கமிட்டிகள் வெவ்வேறு நியமிப்பார்களாம். முனிஸிபாலிட்டிகளும் சென்னைக் கார்ப்பொரேஷனும் போக, மற்ற இடங்களிலெல்லாம் பஞ்சாயத்துச் சபைகளே அமைந்து, அதிகமான பொறுப்புகளை வகிக்குமாம். பஞ்சாயத்துச் சபைத் தேர்தல்களில் ரகசியமாக வோட்டுப் போடும் முறை இப்போது இல்லை. இதை இனியாவது கொண்டுவருவது அவசியம். கிராமங்களில், தனிப்பட்டவரின் தாட்சிண்யத்துக்கும் செல்வாக்குக்கும் பயந்தவர் பலர் இருப்பார்கள். தாட்சிண்யப்பட்டவரின் நேருக்கு நேரே அபேட்சகர் நிற்கும்போது, தம் இச்சைப்படி சுதந்தரமாக எந்த வோட்டர்தான் திறந்த வோட்டுப் போடுவார்? பஞ்சாயத்துத் தலைவரை இனி நேரே தேர்ந்தெடுக்கப் போவதில்லையாம். பஞ்சாயத்துச் சபை அங்கத்தினரே தலைவரைத் தேர்ந்தெடுத்துக்கொள்வது நல்லதுதான். ஸ்தல ஸ்தாபனச் சீர்திருத்தம்பற்றிய இந்தப் பல யோசனைகளும் அடங்கிய தங்கள் அறிக்கையை ஆராயும் வேலையை, சட்டசபையின் பல கட்சிகளும் அடங்கிய ஒரு கமிட்டியிடம் ஒப்படைக்கச் சர்க்கார் இசைந்திருக்கிறார்கள். பஞ்சாயத்து நிர்வாகச் சீர்திருத்தம், அரசியல் கட்சிப் பிரதி கட்சி விஷயம் அல்ல என்று சர்க்கார் மதிப்பதையே இது காட்டுகிறது. இது போற்றத் தகுந்ததே. அந்தக் கமிட்டியார் ஆராய்ந்து கூறும் முடிவுகள், எல்லாருமே பொதுவாக அங்கீகரிக்கக் கூடியவையாக இருக்கும் என்று நம்புகிறோம்.

மஞ்சரி

விசேஷ இதழ்

ஜனவரி 1958

தயாராகி வருகிறது!

★ கண் கவரும் மூவர்ண அட்டைப் படம்.
★ பல மொழிகளில் பாகவதம் வளர்ந்த வரலாறு.
★ இந்தி, வங்காளி, தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளிலிருந்து சுவையான கதைகள்.
★ தனிப் புத்தகச் சுருக்கம்.
★ இருவர்ணப் படங்கள்.

விலை அணா 12 ★ 160 பக்கங்கள்

மானேஜர் - மஞ்சரி, தபால் பெட்டி 604, சென்னை-4.

புறம் கண்ட பொன்னுலகம்

பழந் தமிழரின் லட்சிய நாடு

'புறநானூறு' என்ற பழமையான இலக்கியத்தில் காணும் சித்திரம் இது. இந்தக் கட்டுரைத் தொடரை எழுதி வருபவர் அறிஞர் ரா. ஸ்ரீ. தேசிகன்.

உலகம் போற்றக்கூடிய பண்டைய சங்க காலத்து இலக்கியத்தில், தமிழர்களின் வாழ்க்கை உயர்ந்த கவிஞர்களின் செஞ் சொற்களில் மிகக் கவின் பெறச் சிறைப்பட்டிருக்கிறது என்று அச்சமின்றிச் சாற்றலாம். வாடுகிற முல்லைக்குப் பரிவு காட்டித் தேரை ஈன்ற சிறந்த மனப் பண்பு ஒரு பால்; வெம்போரில் வழிந்தோடுகிற செங்குருதியில் திளைக்கிற அரக்கரின் கோர உணர்ச்சி தாண்டவம் ஆடுகிற தன்மை ஒரு பால் - இப்படிப் பல காட்சிகள் அதில் எழுகின்றன. இது மனிதனின் இயற்கை போலும்! வானளாவும் உயர்ந்த லட்சியங்களும் இந்திரியச் சேற்றில் உழல்கிற கீழான இயல்பும் அவனிடம் சேர்ந்து உறைகிறதைப் பார்க்கிறோமன்றோ?

ராமன் தோன்றினபொழுதே ராவணனுந்தான் தோன்றிவிட்டான். வெளிச்சமும் இருளும், மழையும் வெயிலும், புயலும் அமைதியும் மாறி மாறி வருவதை நாம் நோக்குகிறோம். காதலும் போரும் சங்க காலத்து இலக்கிய உலகத்தில் உலாவினாலும், ஒரு தெய்விகக் குரல் - காலத்தால் சிதைவுறாக் குரல் - தேய்ந்து மாயாத ஓர் அமர நாதம் - சிந்தையில் இடையறாது முழங்கக் கூடிய ஒரு புனித ஒலி - நம் செவிகளில் முரல்வதை உணர்கிறோம்.

அந்தக் காலத்துச் சான்றோர்களின் கண்முன் பெரிய கனவுகள் தாண்டவம் ஆடின. அத்தகைய கனவுகள் இன்னும் உருவாகவில்லையே என்று மனம் ஏங்கிக் கூற வேண்டிய நிலையில் நாம் நிற்கிறோம்.

அறிவு வளர்கிறது. சேண் விண்ணில் செயற்கைச் சந்திரனை எறிந்து வேடிக்கை பார்க்கிறார்கள். பயங்கரமான அணுக்குண்டுச் சோதனைகள் நடக்கின்றன. ஆனால் இவற்றுக்கு ஏற்ப அன்பு விரியவில்லை. அறிவு மிக்க விலங்குகளாய் நாம் திகழ்கிறோம். அன்பும் அறிவும் மணந்து நடனமாடினால்தான், உலகம் உலகமாகக் கருதப்படும். வெறும் விஞ்ஞான அறிவுக்கு நாம் வணக்கஞ் செய்யமாட்டோம். ராவணனின் லங்காபுரி போலவேதான், நவீன நாகரிகம் மின்னுகிறது. இது அழிவதற்கு முன்பு எரிகிற ஒரு சுடர்தானோ என்று நெஞ்சம் அயிர்க்கிறது. அறிவின் எல்லையை ராவணன் கண்டுவிட்டான் என்பது உண்மையே. இயற்கைச் சக்திகள் அனைத்தையும் மனிதன் தன் வசமாக்கிக் கொண்டான். ஆனால் ஒழுக்கம் தோய்ந்த அன்பு நெறியில் அவன் நிற்கவில்லை. 'பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கமும் அழுக்குடம்பும்' அவனைத் தீய நெறியில் தள்ளிவிட்டன. விசுவாமித்திரரும் ஆயுத பலத்தின் பிரயோசனமின்மையை நன்கு உணர்ந்து, அன்பும் அறிவும் தியாகமும் எல்லாஞ் சேர்ந்து ஓர் உருவான வசிஷ்டர் பொன்னடியில் விழுந்து உய்ந்தார். தோள் வலிவையும் கொடிய போர்க் கருவிகளின் ஆற்றலையும் சுட்டெரித்து

விட வேண்டுமென்று அவருக்குத் தோன்றியது. நீண்ட தவத்தால் ஐம் பகைகளை வென்று உள்ளொளி பெருக்கி அகவுயிரின் வெற்றிக் கொடியைத் தம் உள்ளமாம் கோட்டைமீது அவர் நாட்டிவிட்டார் என்பதைத்தான் ராமாயணம் கூறுகிறது.

ஒரு தனி லட்சிய உலகத்தையும் புறம் சித்திரிக்கிறது. இந்திரனுக்குரிய அமிர்தம் அருந் தவத்தாலும், தெய்வத்தாலும் கிடைத்தபோதிலும், பெரியோர்கள் அதைத் தனித்து உண்ண மாட்டார்கள். வெறுப்பை அவரிடம் காணமுடியாது. பிறர் அஞ்சத் தகுந்த துன்பத்துக்குத் தாமும் அஞ்சி இறக்கமாட்டார்கள். புகழுக்காகத் தம் உயிரையும் கொடுப்பார்கள்; பழியால் உலக முழுவதும் தாம் அடைவதாயிருந்தாலும் அதை மேற்கொள்ளார்கள், மனச் சோர்வில்லாதவர்கள். தமக்கென்று முயலாது பிறர்பொருட்டு முயலுவோர் ஒரு நாட்டில் இருந்தால் அதுதான் நாடாகும். நாடெல்லாம் அப்படி ஆகும்பொழுதுதான் உலகம் உலகமாகும்.

'உண்டால் அம்மவிவ்
வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ
தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும்
இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்; பிறர்
அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும்
கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும்
கொள்ளலர்; அயர்விலர்.
அன்ன மாட்சி
அனையர் ஆகித்
தமக்கென முயலா
நோன்றாட்
பிறர்க்கென முயலுநர்
உண்மையானே.'

இந்த அடிகளில் கோயில்கொண்டிருக்கிற லட்சியத்தைவிட வேறு சிறந்த லட்சியத்தை எங்கே நாம் காணப்போகிறோம்? தாம் பெற்றதை எல்லோரும் சேர்ந்து உண்ணவேண்டும் என்ற கனவு இன்னும் இந்த நூற்றாண்டில் உருவாகவில்லை. பழியால் ஓர் உலகம் வருவதாயிருந்தாலும், அது வேண்டாம் என்று மறுக்கிற பெரியோர்களை நாம் காண்டல் அரிதாகும். மேலும், தமக்கென்று வாழாது பிறர்க்கே வாழ்கிற உத்தமர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். 'செல்வம் பெரிதன்று, ஒழுக்கந்தான் சாலச் சிறந்தது' என்று கண்ட அந்தக் காலத்துச் சான்றோர்களின் பெருமையை என்னென்று சாற்றுவது! ஒழுக்கமாம் தெய்வச்சுடர்முன் அகில புவனங்களின் செல்வ ஒளி மழுங்கித் தேய்ந்து ஒடுங்கிவிடும் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை.

மேலும், கல்வியின் சிறப்பைப் பற்றிப் புறம் நமக்கு நன்கு எடுத்துக் கூறுகிறது. கம்பரும் கல்விதான் எல்லாவற்றிற்கும் வித்தென்கிறார். இதிலிருந்துதான் எல்லாம் விளைகின்றன என்று பால காண்டத்தில் அவர் நன்கு இயம்பியிருக்கக் காண்கிறோம். கல்விதான் முடிவில் அரசாங்கம் என்று வெல்லும் மொழிகிறார்.

ஒரு வயிற்றிலே பல பிள்ளைகள் தோன்றினாலும், கல்வியின் விசேஷத்தால் தாயின் மனமும் திரியும் என்று கவி கூறுகிறார். வயதில் மூத்தவனாக இருப்பதற்காகவே ஒரு சிறப்பு ஏற்படுமோ? அறிவில் சிறந்தவன் வழியிலேதான் அரசனும் செல்வான். அரசனுக்குத் தகுதியாய் உள்ளவன் கல்வி கற்றவனே என்றும் கூறிவிடலாம். கீழ்ச் சாதி மேல் சாதி என்று பாராமல், அறிவுக்கு வணக்கஞ் செய்யவேண்டும் என்று புறம் புகல்கிறது.

'பிறப்போ ரன்ன
உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால்
தாயுமனந் திரியும்.
ஒருகுடிப் பிறந்த
பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக
என்னா தவருள்
அறிவுடை யோனா
றரசுஞ் செல்லும்.
வேற்றுமை தெரிந்த
நாற்பா லுள்ளும்

கீழ்ப்பால் ஒருவன்
கற்பின்
மேற்பால் ஒருவனும்
அவன்கட் படுமே.'

சீன தேசத்தில் படிப்பில்லாதவன் ஒரு பதவிக்கும் வரமுடியாது. கல்வியை அப்படிப் போற்றி வருகிறார்கள். மேலும், சாதிச் செருக்கை விட்டு, நான்காம் வருணத்தைச் சார்ந்த நம்மாழ்வாரிடம் மதுரகவி என்ற வேதத்தில் வல்ல ஓர் அந்தணன் உண்மையான ஞானம் பெற்றதை நாம் அறிவோம். அந்தக் காலத்தில் மன்னனை உயிராகக் கருதினார்கள்.

'நெல்லும் உயிரன்றே
நீரும் உயிரன்றே;
மன்னன் உயிர்த்தே
மலர்தலை உலகம்.
அதனால் யானுயிர்
என்ப தறிகை
வேல்மிகு தானை
வேந்தற்குக் கடனே.'

உயிரை அளிக்கும் நெல்லும் நீரும் உலகத்தில் பெருகுவதற்குக் காரணம் மன்னன் தக்க நிலையில் நிற்பதே என்பது இதனால் விளங்குகிறதன்றோ? மேலும், வண்டி இன்பமாய் ஓடுகிற நிலை, ஓட்டுகிறவனைப் பொறுத்தது. அரசாம் கப்பலைச் சரிவர ஓட்டாமல் போனால், அது கண்ணுக்குப் புலனாகாத பெரும் பாறைகள்மீதும் அச்சத்தை விளைவிக்கும் திட்டுக்கள்மீதும் மோதி உடைந்து போய்விடும்.

ஒழுங்காகக் கழனிகளிலுள்ள நெல்லை அறுத்து யானைக்குத் தீனி போட்டால், அந்தத் தீனி நீண்ட காலம் நிற்கும்; ஆனால் யானையைக் கழனிகளில் தானே உண்ணும்படி விட்டால், கழனிகள் அழிந்துவிடும். அரசன் ஒழுங்கான முறையில் வரியை வாங்காது ஆடம்பர வாழ்க்கையை நடத்துவானாயின், யானை புக்க புலம் போல எல்லாம் அழிந்துவிடும் என்று புலவர் கூறுகிறார்:

'யானை புக்க
புலம்போலத்
தானும் உண்ணான்
உலகமுங் கெடுமே!'

முறை அறிந்து வேந்தன் எல்லாவற்றையும் செய்ய வேண்டுமென்பதைப் பண்டைய தமிழ் மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

காற்றைப் போல் கடிதில் செல்லுகிற குதிரைப் படை ஒரு நாட்டில் திகழலாம்; கொடிகள் ஆடும் தேர்கள் அதை அழகு செய்யலாம்; பல போர்க் கருவிகளைக் கையில் தாங்கிக் கடல் போலப் பொங்கி எழுகிற சேனை அங்கே ஏவல் புரியலாம். அதை நாம் மதிக்க மாட்டோம். முறை தெரிந்து நடக்கிற சிற்றரசர்களின் சிறந்த குணங்களை நாம் போற்றுவோம். நல்லறிவுடையோரின் நல்குரவை நாம் பெரிதாக மதிப்போம்.

'சான்றோர்களிடத்தில் சென்று நம்முடைய காரியம் நிறைவேறாது போனாலும், அது சாலச் சிறந்ததாகும். கயவர்களிடம் சென்று நம் காரியம் நிறைவேறுவதாயிருந்தாலும், அது மிக இழிவாகும்' என்று காளிதாசன் கூறுவது சிந்திப்பதற்குரியது. நாம் முடிவைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. அதை நிறைவேற்றுகிற முறை, அறத்தில் வேரூன்றி நிற்கிறதா என்றுதான் பார்க்கவேண்டும். வானளாவிய பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் மிகக் கவின் பெறக் காட்சி அளிக்கலாம்; ஆனால் தீய முறைகளிலே திரட்டிய பணக் குவியல்களாம் அஸ்திவாரங்கள்மீது அவை எழும்பியிருக்கலாமன்றோ? இத்தகைய கட்டிடங்கள் பார்ப்பதற்கு எவ்வளவு பெரிய நன்மைகளை அளித்தாலும் அவைகளை உண்மையான தூய பயன்களாகக் கருத இடமில்லை. வேரிலேயே தீச்செயல் புகுந்துவிட்டது. அதிலிருந்து விளைவதை நன்மையாகக் கருத இடமுண்டோ? உன்னிப் பாருங்கள். குணத்தை நாடுகிற பண்டைத் தமிழரின் மனப்பண்புக்கு நாம் வணங்கத்தான் வேண்டும். மேலும், ஒரு நாட்டின் செல்வம், அதன் கூட கோபுரங்கள் அல்ல; நல்ல நீர்ச் சுனைகள் அல்ல; வண்டினம் முரலும் பூஞ்சோலைகள் அல்ல. சுருங்

கக் கூறுமிடத்து, வழிந்தோடுகிற வெறுஞ் செல்வமே அல்ல அது.

'அதில் வாழ்கிற சான்றோர்களைப் பொறுத்தவை அதன் தாழ்வும் உயர்வும்' என்று ஔவை கூறுகிறாள்:

'நாடா கொன்றோ
காடா கொன்றோ
அவலா கொன்றோ
மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர்
ஆடவர்
அவ்வழி நல்லை
வாழிய நிலனே.'

நிலன் என் செய்யும்; அதில் வாழும் மாந்தரைப் பொறுத்ததன்றோ அதன் இயல்பு? லூயிஸ் மெம்ஃபோர்ட் (Lewis Mumford) என்பவர் தம்முடைய 'நகரங்களின் பண்பாடு' (The Culture of Cities) என்ற புத்தகத்தில் 'மனிதர்களின் பண்பாட்டைப் பொறுத்து நகரங்களின் அமைப்பு' என்று கவின் பெற மொழிந்துள்ளார். இந்தக் கருத்தை எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பே மிக்க அறிவு பாய்ந்த அந்த ஞானக் கிழவி மொழிந்துவிட்டாள்:

'செல்வத்துப் பயனே
ஈதல்;
துயப்பேம் எனினே
தப்புன பலவே.'

'செல்வத்தைத் தாமே நுகர்வது அழகன்று; அதைப் பகிர்ந்து கொடுத்தல்தான் நலமாகும்' என்பது இதன் கருத்து. கடல் சூழ்ந்த இந்த வையகத்தை ஆள்கிற வேந்தனுக்கும், பகலும் துஞ்சாது இரவும் துஞ்சாது பிறரை வருத்திப் பொருள் ஈட்டுகிற கல்வி இல்லாத ஒருவனுக்கும் உண்பது நாழி உடுப்பது நான்கு முழந்தான். செல்வம் ஒரு கருவியே தவிர அது ஒரு முடிவாகாது. இதை முன்பே அந்தச் சான்றோர்கள் கண்டுவிட்டார்கள்.

'நல்லது செய்யாமற் போனாலும், தீங்கு இழைக்காமல் இருந்தால் போதும்' என்று கவி ஏங்கிக் கூறுகிறார். அதுதான் நல்ல நெறியுமாகும்.

அந்தக் காலத்து வேந்தர்கள் இசையில் திளைத்தார்கள். பாவலரின் வறுமைப் பிணியை அகற்றும் மருத்துவர் இல்லமாய் அவர்களுடைய சபைகள் திகழ்ந்தன. இசையை நுகர முடியாத உள்ளம், கொலையையும் சதியையும் புரியுமென்று ஷேக்ஸ்பியர் மொழிந்திருக்கிறார். இசையிலே திளைக்கிற மன்னர்கள் சிறந்த மனப் பண்பு உள்ளவர்களாகத்தான் இருக்க வேண்டும். இவர்கள் ஒடுங்கா உள்ளத்தோடும் ஓம்பா ஈகையோடும் காட்சி அளிக்கிறார்கள். தங்களை ஓம்பாமலேயே பொருள்களை இவர்கள் வாரி வழங்கினார்கள்; பலன் கருதாது தானம் கொடுத்தார்கள். 'இம்மைச் செய்தது மறுமைக் காமெனும் அறவிலை வாணிகர்' அல்ல இவர்கள். இந்தச் சூழ்நிலையில் உயர்ந்த கருத்துக்கள் முளைத்ததில் வியப்பில்லை.

''பல ஆண்டுகள் ஆகினும் நான் நரையில்லாமல் இருப்பதன் காரணத்தைக் கேட்பீராக: மாட்சி மிக்க மனைவியும் குழந்தைகளும் எனக்கு இருக்கிறார்கள். நான் கருதியைத்தான் என் ஏவலாளிகளும் கருதுவார்கள். அரசனும் முறையில்லாத காரியத்தைச் செய்யான். மேலும், என் ஊரில் ஐம்புலன்களை அடக்கி ஆள்கிற சான்றோர்கள் நிரம்பி இருக்கின்றனர்.'' இக் கருத்துள்ள அடிகளில் அமைதிக்கு வேண்டிய வசதிகள் சித்திரிக்கப் பெற்றிருக்கின்றன.

யாழொத்த இன்பமும், அமைதியும் இவைகளில் ஓடுகின்றன. எங்கும் அமைதியின் தெய்வநாதம் கேட்கிறது:

'யாண்டு பலவாக
நரையில ஆகுதல்
யாங்கா கியர்என
வினவுதி ராயின்,
மாண்டஎன் மனைவியொடு
மக்களும் நிரம்பினர்;
யான்கண் டனையர்என்
இளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான்
காக்கும்; அதன்தலை
ஆன்றவிந் தடங்கிய
கொள்கைச்

சான்றோர் பலர்யான்
வாழும் ஊரே.'

குலையாத அமைதி நிலவவேண்டுமாயின், இத்தகைய சூழ்நிலை வேண்டும்.

'எமக்கு எல்லாம் ஊர்தான்; எல்லாரும் என் சுற்றத்தார்கள். கேடும் ஆக்கமும் தாமே வருமே அல்லாமல், பிறரால் இவைகள் நேரிடுவதில்லை. இறத்தல் புதிதன்று; கருவில் தோன்றிய பொழுதே, இதுவும் தொடங்கியுள்ளது. வாழ்தலை இனிதென்று உவகை கொள்ளோம். வெறுப்பு வந்த இடத்தே, அதை வெறுக்கவும் மாட்டோம். ஒரு புணையை வெள்ளம் அடித்துக்கொண்டு போவது போல, ஓர் ஊழ் எல்லாவற்றையும் இழுத்துக்கொண்டு போகிறது. இந்த விஷயத்தை நாங்கள் மாசறத் தெளிந்துள்ளோம். ஆதலால், நன்மையால் மிக்கோரை மதித்தலும் இலம்; சிறியோரைப் பழித்தல் அதனினும் இலம்.'

இதே கருத்தைக் கீதையில் பார்க்கிறோம். காலஞ் சென்ற ஐன்ஸ்டீன் (Einstein) இதே சுருதியில் ஓர் இடத்தில் பேசியிருக்கிறார். இத்தகைய உயர்ந்த கருத்துள்ள குரல் உண்மையான ஜனநாயகத்தில்தான் ஒலிக்கும்:

''யாதும் ஊரே,
யாவரும் கேளிர்.
தீதும் நன்றும்
பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும்
அவற்றோ ரன்ன.
சாதலும் புதுவ
தன்றே; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும்
இலமே; முனிவின்
இன்னா தென்றலும்
இலமே; 'மின்னொடு
வானம் தண்டுளி
தலைஇ ஆனாது
கல்பொரு திரங்கும்
மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம்
புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம்'
என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம்
ஆகலின், மாட்சியில்
பெரியோரை வியத்தலும்
இலமே;
சிறியோரை இகழ்தல்
அதனினும் இலமே.''

இத்தகைய தூய கனவிலும் சிறந்த லட்சியத்திலும் தாலாட்டப் பெற்ற தமிழர்களிடையே ஏனோ வெம்பூசல்களும் பகையைத் தூண்டும் சண்டைகளும்? ஆரியர்கள், தமிழர்கள் என்று பாராது, எல்லோரையும் மனிதர்கள் - சகோதரர்கள் - என்று பார்க்கும் நாள் எந்நாளோ?

மூடனாயிருந்தாலும் —

ஒரு மனிதன் மூடனாயிருந்தாலும் பரவாயில்லை. அவனுக்கு நல்ல குணங்கள் இருக்குமானால், பிறருக்குப் பயப்படாத துணிவு இருக்குமானால், அவனுக்கு வெற்றி நிச்சயம்.

—ஸர் டேவிட் எக்ளெஸ்

மூப்பை வென்றவர்

நான் ஒருபோதும் கிழவனாக மாட்டேன். எது கிழ வயசு? என் வயசைவிடப் பதினைந்து வருஷம் அதிகமான வயசே கிழ வயசு என்று எப்போதும் நான் நினைக்கிறேன்.

—பெர்னார்டு பரூச்

‘எறிந்தவேல் மெய்யதா வால்குழைக்கும் நாய்’ என்னும் நாலடியார், அந்த நாயைப் போன்றவர் நட்பே வேண்டும் என்பதுதான் எவ்வளவு அரிய உண்மை!

மனிதனுக்கு உற்ற துணை

ரால்ஃப் மிடில்டன்

மனிதர்களிடம் நாய்களுக்கு இருக்கும் விசுவாசம் ஆச்சரியமானது. மூன்றரை வயசான மக்கோ என்ற ஐரிஷ் நாயைப் பற்றிய வரலாறு மிகவும் உருக்கமாக இருக்கிறது. விட்டோரியோ புஸ்கா என்ற இத்தாலியச் சிறுவனுடைய நாய் அது.

1955 தொடக்கத்தில் விட்டோரியோவும் அவன் தாயும் ஒரு மாச விடுமுறையின்போது ஸ்விட்ஸர்லாந்திலுள்ள ஜெர்மட் என்ற இடத்துக்குப் போகப் புறப்பட்டார்கள். தாங்கள் திரும்பி வரும்வரையில் மக்கோவை வீட்டிலேயே கவனித்துக்கொள்ளும்படி நண்பர்களிடம் சொல்லி ஏற்பாடு செய்திருந்தார்கள். வடக்கு இத்தாலியில் ஆல்ப்ஸ் மலைச் சாரலில் இருந்த கிரெஸ்ஸோனி என்ற சின்னஞ் சிறு ஸ்டேஷனில் ரெயில் ஏறினார்கள். புறப்படும்போது தாயும் மகனும் மக்கோவுக்கு முத்தமிட்டு, ‘குட் பை’ என்று சொல்லி விடை கொடுத்தனுப்பினார்கள். ஆனால் மக்கோவுக்குத் தங்களிடத்தில் எவ்வளவு விசுவாசமும் பற்றும் உண்டு என்று அப்போது அவர்களுக்குத் தெரியவில்லை; 25 நாளைக்குள் மக்கோ, பனி அடர்ந்து ஆபத்தான மலை வழியே, நகர்ந்துவரும் கிளேஸியர் என்ற பனிப்பாறைகளையும் வெகு தீரமாகக் கடந்து தன் எஜமானிடம் வந்து சேர்ந்துவிட்டது!

கேட்டால் யாருமே நம்ப முடியாத சங்கதி; அப்படியிருந்தும் மக்கோ ஆல்ப்ஸ் மலையின் உயரமான சிகரம் ஒன்றைத் தாண்டி வந்தது என்றால் பாருங்கள்! விடா முயற்சியோடும் நெஞ்சுறுதியோடும் மக்கோ மலைக் கணவாய்களைத் தாண்டிப் போவதைப் பார்த்து அநேகம் பேர் சொன்ன தகவலிலிருந்து அது எந்த எந்த வழியாகவெல்லாம் போய்த் தன் எஜமானிடம் சேர்ந்திருக்கிறது என்று திட்டமாகத் தெரிந்தது. ஸ்விஸ்-இத்தாலிய எல்லையில் பாரா இருந்த ஓர் இத்தாலியக் காவலாள் 13,780 அடி உயரத்திலிருந்து சரிந்து விழுந்த பனிப்பாறையில் நசுங்கிச் சாகாதபடி அதைக் காப்பாற்றி அழைத்து வந்தான்; அதை அவன் மறுபடியும் அவிழ்த்து விட்டதுமே அது நேராக ஸ்விஸ் எல்லையை நோக்கி ஓடிப்போய் விட்டதாம்.

மலை ஏறும் ஒரு கோஷ்டியார் ஆல்ப்ஸ் மலைமேல் 14,000 அடி உயரத்தில் ஒரு குடிசையிலே தங்கியிருந்தார்கள். வெளியே கடும் பனிப்புயல் வீசிக்கொண்டிருந்தது. அப்போது குடிசையின் கதவை மக்கோ பிறாண்டியதாம். அந்த ஓசை கேட்டு அவர்கள் கதவைத் திறந்து அதை உள்ளே விட்டார்கள். ஆனாலும் மக்கோ அவர்களோடு தங்கிவிடவில்லை. ஒருவேளை தன்னை எஜமானிடம் போகாதபடி தடுத்துவிடுவார்களோ என்ற எண்ணமோ என்னவோ அதற்கு?—

காப்பிரைட்: அமிர்தபஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 27-10-’57), கல்கத்தா.

சற்று நேரத்துக் கெல்லாம் வெளியே கிளம்பிவிட்டது.

மக்கோ 25 நாள் இப்படியெல்லாம் அரும்பாடு பட்டு, கடைசியில் ஜெர்மட் என்ற ஊருக்கு வந்து சேர்ந்தது; இதற்குள் அதன் உடம்பே விறைத்துவிட்டது; பாவம், பசி பட்டினி தாங்காமல் சாகிற நிலைக்கு வந்துவிட்டது; உடலெல்லாம் கூர்மையான பனிப்பாறைகள் வெட்டி ஒரே காயம். அந்த ஊரில் முக்கியமான தெரு ஒன்றில் அது களைத்துப்போய் விழுந்து கிடந்தது. நல்ல வேளையாக அங்கே புஸ்காவின் நண்பர்களில் ஒருவன் மக்கோவை அடையாளம் கண்டுகொண்டு அப்படியே அதன் எஜமானிடம் கொண்டு சேர்த்தான். மயக்கந் தெளிந்து எழுந்ததும் தன் சின்னஞ் சிறு எஜமான் தன்னை அணைத்துக் கொண்டிருப்பதைக் கண்டு அதற்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும், பாருங்கள்!

கற்பனையிலும் கண்டிராதபடி இந்த நாய் இப்படிப் பல மலைகளைத் தாண்டி வந்ததைக் கண்ட மக்கள் என்ன சொல்கிறார்கள், தெரியுமா? "ஆறாம் அறிவு ஒன்று இருந்ததால்தான் மக்கோ இந்த அருஞ்செயலைச் சாதித்தது! பின்னே எப்படி அதற்குத் தன் எஜமானியம்மாளும் சின்னஞ்சிறு எஜமானும் இன்ன இடம் போயிருக்கிறார்கள் என்று தெரிந்தது? இன்ன வழியாகப் போனால் நிச்சயமாக அவர்கள் இருக்குமிடம் போய்ச் சேர முடியும் என்றுதான் எப்படித் தெரிந்தது?" என்கிறார்கள். ஏதோ அபூர்வ உணர்ச்சி காரணமாகத்தான் இத்தனை கஷ்டங்களையும் பொறுத்துக்கொண்டு அது தன் எஜமானைத் தேடி வந்திருக்கிறது; அது நிச்சயம்.

நியூ யார்க்கில் சமீபத்தில் நிகழ்ந்த இன்னும் ஓர் அதிசய சம்பவம் இது: நிலையாக ஓர் இடத்திலும் தங்காமல் ஊர் சுற்றுகிற பயல் பில் தாமஸ். அவன் ஒரு நாள் பசி தாங்காமல் களைத்துப் போய் ஜனநடமாட்டம் அதிகமாக உள்ள ஒரு நடைப்பாதையில் விழுந்துவிட்டான். அவனுடைய

நாய் அருகிலேயே வெகுநேரம் இருந்து அவனைக் காத்து வந்தது. யாராவது அவனுக்கு ஒத்தாசை செய்யப் போகலாம் என்றாலும் ரோஷத்தோடு பல்லைக் காட்டி அவர்கள்மேல் பாய்ந்துவிடும்போல் இருந்தது அந்த நாய். இதனால் யாரும் அவனை நெருங்க அஞ்சினார்கள். அப்போது போலீஸ்காரன் ஒருவன் அங்கே வந்து பில்லைத் தூக்கி உட்கார வைக்கப் போனான். உடனே நாய் போலீஸ்காரன்மேல் பாய்ந்தது; தன் பத்துப் பல்லும் போலீஸ்காரன் கையில் ஆழப் பதியும்படி கவ்வியதே பார்க்க வேண்டும்! போலீஸ்காரன் ஒரு துள்ளுத் துள்ளிப் பின்வாங்கினான். தன் எஜமான் களைப்பு நீங்க எழுந்த பிற்பாடுதான் அது சுற்றிலும் இருந்தவர்களை நெருங்கவிட்டது. பில்லை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போனார்கள். நாய்—? அதுவுந் தான் கூடவே போயிற்று; கேட்க வேண்டுமா?

இங்கிலாந்திலுள்ள பீட்டர்ஸ்ஃபீல்டு என்ற ஊரில் டெர்ரியர் என்ற குள்ள வகையைச் சேர்ந்த நாய் ஒன்று இருந்தது; கறுப்பும் வெளுப்பும் மாறிமாறிக் காணும் மேனி; பான்ஸோ என்று அந்த நாய்க்குப் பெயர். தன்னிடம் அன்பாகப் பழகியவர்களைக் காண நாள் தவறாமல் ரெயிலடிக்கு வந்து போகும். பீட்டர்ஸ்ஃபீல்டு சின்ன ஊர். பான்ஸோவின் எஜமான் அங்கே உணவு விடுதி ஒன்று நடத்தி வந்தார். அதில் மார்க்கரெட் ட்யூக் என்ற பெண் வேலை செய்து வந்தாள். பான்ஸோவிடம் மிகவும் அன்போடும் ஆதரவோடும் பழகி வந்தாள். ஒவ்வொரு

நாளும் அதை வெளியே அழைத்துக்கொண்டு சற்றே உலாவிவிட்டு வருவாள். மார்க்கரெட்டின் பெற்றோர்கள் வயசானவர்கள். அவர்கள் உடல்நிலை சரியாக இராததால் அவள் வேலையைவிட்டுத் தன் ஊருக்குப் போய்விட்டாள்; அப்புறம் பீட்டர்ஸ்ஃபீல்டுக்குத் திரும்பவேயில்லை. அவள் போன பிற்பாடும் ஒவ்வொரு நாளும் பான்ஸோ, அவள் வழக்கமாக வரும் 8-14 வண்டிக்காக ரெயிலடியில் போய்க் காத்திருக்கும்; பாவம், இப்படிக் காத்திருப்பது வீண் என்று அதற்கு எப்படித் தெரியும்? இருந்தாலும், பான்ஸோவுக்கு நம்பிக்கை குன்றவில்லை. அதுவும் விடாமல், அவள் இறங்கும் நேரத்துக்கு ரெயிலடியில் வந்து காத்துக்கொண்டுதான் இருந்தது. கடைசியில் ஒருநாள், இனிமேல் அவள் ரெயில் வண்டியில் வரமாட்டாள் என்று உணர்ந்தோ என்னவோ, அவளைத் தேடிக்கொண்டு இருப்புப் பாதை வழியாகப் புறப்பட்டது. ஆனால், பாவம், மின்சாரம் தாக்கி அங்கேயே இறந்துவிட்டது! ரெயில்வேயைச் சேர்ந்த ஊழியர்கள் அதோடு பழகினவர்கள்; மிகவும் நன்றியுள்ள நாய் என்று அதனிடம் அவர்களுக்கு அன்பு உண்டு. அந்தப் பரிதாபத்தைக் கண்டு இரங்கி அவர்கள் ஸ்டேஷனின் ஒரு பகுதியிலேயே அதன் உடலை அடக்கம் செய்தார்கள். இன்னும் 8-14 மணி ரெயில் வண்டியில் இறங்குகிற பிரயாணிகளுக்காக அது காத்திருக்கிறது என்ற பாவனை அவர்களுக்கு; அப்படி எண்ணும்போது அவர்களுக்கு அதில் ஒரு மனத்திருப்தி ஏற்படுகிறது.

சென்ற நூற்றாண்டின் பின்பகுதியில் டெர்ரியர் வகையைச் சேர்ந்த பாபி என்ற ஒரு நாய் இருந்தது. பான்ஸோவின் வரலாற்றைவிடப் பின்னும் உருக்கமானது பாபியின் கதை. தன் எஜமானனை ஜான் கிரேயிடம் அதற்கு மிகுந்த விசுவாசம். அவர் இறந்ததும் எடின்பரோவிலுள்ள ஒரு மாதா கோயிலை அடுத்த கல்லறையில் அவருடைய உடலை அடக்கம் செய்தார்கள். அதுமுதல் பின்னும் விசுவாசத்தோடு பாபி அங்கே காவல் இருந்து வந்தது. சவக்குழியில் மண்ணை நிரப்பும்போது வருத்தத்தோடு எல்லாரும் நின்றிருக்கையில், பாபி அங்கேயே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்ததை யாரும் கவனிக்கவில்லை. அவர்களெல்லாரும் போனதும் பாபிமட்டும் தன் எஜமானின் கல்லறையண்டை இருந்து காவல் காக்கத் தொடங்கிவிட்டது. 14-ஆண்டுகள், தான் சாகும்வரை இப்படிக் காத்துவந்தது! சவத்தை அடக்கம் செய்த மறுநாள் மாதா கோயில் கல்லறை முதலியவற்றைக் கண்காணிக்கும் அதிகாரி, பாபி கல்லறைமேல் படுத்திருப்பதைக் கண்டு உடனே அதை விரட்டியனுப்பிவிட்டார். பாபி தன் எஜமானின் வீட்டுக்குத் திரும்பிப் போயிற்று. ஆனால் பொழுது சாய்ந்ததும் மறுபடியும் கல்லறையண்டை வந்து சேர்ந்தது. மறுநாள் காலையும் பாபி அங்கே இருப்பதைக் கண்டார் அந்த அதிகாரி. ஆனால் இந்தத் தடவை அதை விரட்டி அனுப்பிவிட அவருக்கே மனம் வரவில்லை. அதுமுதல் அங்கேயே இருந்து காவல் காத்து வந்தது பாபி. அந்த அதிகாரிக்கும் அதன் விசுவாசத்தைக் கண்டு அதன்மேல் அன்பு ஏற்பட்டது; அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள், நண்பர்கள் எல்லாரிடமும் சொல்லிப் பாபியைக் கவனித்துக்கொள்ளும்படி செய்தார். நடுப்பகலில் பாபி அங்கே ஒரு சத்திரத்துக்கு வந்துவிடும்; சத்திரத்தின் சொந்தக்காரர் அக்கறையோடு அதற்குப் பிடித்த உணவாகப் பார்த்துப் போட்டுவிடுவார். உள்ளூர்ப் போலீஸ்காரன் ஒருவன், 'யாராவது இதை ஏற்றுப் போஷிக்கிறீர்களா?' என்று பத்திரிகையில் விளம்பரங் கூடச் செய்தான்! ஆனால் அதற்குப் பதில் வரவில்லை. இதற்குள் பாபியைப்பற்றிய செய்தி ஊர் முழுவதும் பரவிவிட்டது. ஊர் மேயர் தலைமையில் பலர் சேர்ந்து பணம் திரட்டி நிரந்தரமாகச் சத்திரத்தில் பாபிக்கு உணவு கிட்டும்படி ஏற்பாடு செய்தார்கள். இப்படியே கிழடுதட்டிச் சாகும்

வரையில் பாபி தன் எஜமானின் கல்லறையண்டை இருந்து வந்தது. பிறகு கல்லறை அதிகாரி அதன் எஜமானுக்குப் பக்கத்திலேயே அதையும் அடக்கம் செய்தார். பாபி இத்தனை வருஷகாலம் விசுவாசத்தோடு இருந்ததைப்பற்றிக் கேள்வியுற்ற பர்டெட் கூட்ஸ் என்ற சீமாட்டி அதைப் புதைத்த இடத்தில் அதைப்போலவே சின்னதாகக் கருங்கல்லில் சிலை ஒன்று செதுக்கி வைக்க ஏற்பாடு செய்தாள். இன்றும் தன் எஜமானின் கல்லறையைப் பார்த்துக்கொண்டு இருப்பதுபோல் அமைத்திருக்கும் அந்த நாயின் உருவச் சிலையை அங்கே காணலாம்.

ஜப்பானிலும் இதேமாதிரி ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. டோக்கியோ நகர இம்பீரியல் யூனிவர்ஸிட்டியைச் சேர்ந்த புரொபஸர் உயேனோ என்பவர் ஒவ்வொரு நாளும் தம் வீட்டிலிருந்து ரெயில்வே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டுப் போவார்; அப்போது ஹசிகோ என்ற அவருடைய நாய் அவர் பின்னாலேயே போகும். அவர் ரெயில் வண்டியில் ஏறியதும் அது வீடு திரும்பிவிடும்; மாலை நேரம் ரெயிலிலிருந்து அவர் இறங்கும்போது ஸ்டேஷனில் அவருக்காகக் காத்திருக்கும். ஒரு நாள் மாலை வழக்கம்போல் புரொபஸருக்காக வந்து அது ரெயிலடியில் காத்திருந்தது. ஆனால் அன்று அவர் வரவில்லை; யூனிவர்ஸிட்டியிலேயே இறந்துவிட்டார்! ஹசிகோவுக்கு அது எப்படித் தெரியும்? தான் சாகும்வரை - எட்டு வருஷகாலம் - இப்படியே மாலை நேரத்தில் ரெயிலடிக்கு வந்து போகும். ஹசிகோவை நாள்தோறும் ரெயிலடியில் கண்டு, அதோடு பழகி அன்பு செலுத்திய வர்கள் அநேகம் பேர். இவர்கள் எல்லாரும் சேர்ந்து நாடுமுழுவதும் பணம் திரட்டி அதன் நினைவுக்கு அறிகுறியாக ஒரு சிலை நிறுவினார்கள்.

மனிதர்களைவிட மிகவும் நன்றியுள்ளவை நாய்கள். இந்த மாதிரி பிராணிகளிடம் அன்பும் மதிப்பும் கொண்டவர்கள் இவைகளின் நினைவை மறக்காமல் இப்படிப் போற்றி வருகிறார்களே என்று எண்ணும்போது உள்ளூற ஒரு நிம்மதி ஏற்படுகிறது.

நடுக்கடல் தீவில் சிக்கினால்—

இலக்கியப் புகழ்பெற்ற ஆங்கில ஆசிரியர்கள் சிலர் கூடியிருந்தார்கள். அவர்களில் ஜி. கே. செஸ்ட்டர்ட்டன் என்ற உலகப் பிரசித்தமான ஆசிரியரும் இருந்தார். யாரோ ஒருவர், ''நடுக்கடலில் வனாந்தரமான ஒரு தீவில் நீங்கள் அகப்பட்டுக்கொண்டால், என்ன புஸ்தகத்தைப் படிப்பீர்கள்?'' என்று அவர்களைக் கேட்டார்.

''ஷேக்ஸ்பியரின் அத்தனை நாடகங்களும் அடங்கிய புஸ்தகத்தைப் படிப்பேன்'' என்று உடனே சொன்னார் ஒருவர்.

''நான் பைபிளைப் படிப்பேன்'' என்றார் இன்னொருவர்.

''நீங்கள்?'' என்று செஸ்ட்டர்ட்டனை ஒருவர் கேட்டார்.

''நானா? நான் 'தாமஸ் மூர் எழுதிய அநுபவக் கப்பல் கட்டும் கலை' என்ற நூலைப் படிப்பேன்'' என்றார், செஸ்ட்டர்ட்டன் கம்பீரமாக.

—'தி குராண்ட்'

அர்ஜுனன் தீர்த்த யாத்திரை

★

பாண்டவர் நாரத முனிவரின் உபதேசத்தைப் பின் பற்றித் தங்களில் ஒருவர் பாஞ்சாலியுடன் இருக்கும்போது மற்றவர் பார்க்கக்கூடாது, அப்படிப் பார்த்துவிட்டால் பன்னிரண்டு மாசம் விரதம் பூண்டு காட்டில் வாழ வேண்டும் என்ற கட்டுப்பாடு செய்துகொண்டு வாழ்ந்து வந்தார்கள்.

ஒரு நாள் ஓர் அந்தணன் காண்டவப்பிரஸ்தத்தில் அரண்மனை வாயிலில் வந்து, ''திருடர்கள் என் மாடுகளைக் கவர்ந்து போகிறார்கள். தெய்வத்துக்கு நிவேதனத்துக்காக வைத்திருக்கும் அன்னத்தைக் காகம் உண்ணலாமா? புலியின் குகைக்குள் நரி நுழையலாமா? பாண்டவர்களே, நான் ஹோமத்துக்காக வைத்துக் காத்துவரும் பசுக்களைத் தாங்கள் காத்துவரும் பட்டணத்திலிருந்து திருடிச் சென்றிருக்கிறார்களே! ஆயுதம் ஏந்தித் திருடரை வென்று என் பசுக்களை மீட்டுக் கொடுங்கள்'' என்று கூவினான்.

இதைக் கேட்டதும் அர்ஜுனன் அந்தணனுக்கு அபயம் கொடுத்தான். ஆயுதங்களை எடுத்துப் போக எண்ணினான். ஆனால் அவை திரௌபதியின் அந்தப்புரத்தில் இருந்தன. அங்கே தருமர் அவளோடு இருக்கும் தருணம் அது. அங்கு அவன் நுழைய முடியவில்லை. திருடரைத் தொடர்ந்து செல்லும்படி அந்தணன் மீண்டும் மீண்டும் வேண்டினான். அர்ஜுனன் என்ன செய்வது என்று புரியாமல் திகைத்தான்; 'திருட்டைப் பார்த்துக்கொண்டு பேசாமல் இருப்பது அரசருக்குத் தர்மமா? தருமரிடம் அநுமதி பெறாமல் சென்றால் அவருக்கு என்மேல் வெறுப்பு ஏற்படுமே! நான் உள்ளே சென்றால் காட்டில் வாழ வேண்டிவரும்' என்றெல்லாம் எண்ணினான். பிறகு, 'காட்டில் வாழ வேண்டி வந்தாலும் வரட்டும்; உயிரே

ராமாயணத்தைப்போல் பிரசித்தமானது பாரதம். பாண்டவர், கௌரவர் வரலாற்றை மட்டும் அல்ல, கீதை மொழிந்த கண்ணனின் கருணைச் செயல்களையும் இதில் காணலாம்.

போனாலும் சரி. எல்லாவற்றிலும் தர்மமே சிறந்தது' என்று தீர்மானித்துக்கொண்டு பாஞ்சாலியின் அந்தப்புரத்தில் சென்றான். தருமரை வணங்கினான். ஆயுதத்தை எடுத்துக்கொண்டு வெளி வந்தான். ''ஸ்வாமி, வாருங்கள். திருடர்கள் வெகு தூரம் செல்வதற்குமுன் விரைந்து சென்று அவர்களை மறித்துத் தங்கள் பசுக்களை மீட்டுக் கொடுக்கிறேன்'' என்று ஆறுதல் கூறி அர்ஜுனன் விரைந்து சென்று திருடர்களை வென்று பசுக்களை அந்தணனிடம் சேர்த்தான்.

பிறகு தருமரின் முன்வந்து, ''நான் நம் ஏற்பாட்டை மீறிவிட்டதால் காட்டுக்குப் போகிறேன். அநுமதி கொடுங்கள்'' என்று வேண்டினான். தருமர் அவனைக் காட்டுக்கு அனுப்ப மனம் இல்லாமல், ''அர்ஜுனா, நீ கட்டுப்பாட்டை மீறியது உண்மைதான். ஆனாலும், பெரியவன் பாஞ்சாலியோடு இருக்கும்பொழுது சிறியவன் அந்தப்புரம் வந்தால் தவறில்லை; சிறியவன் இருக்கும்பொழுது பெரியவன் வருவதே தவறு. ஆகவே, நீ காட்டுக்குச் செல்ல வேண்டாம்'' என்றார். அர்ஜுனன், ''தருமத்தைக் கபடமாகவும் நம் மனம் போனபடியும் கடைப்பிடிப்பது சரியல்ல. அதனால் நான் காடு போவதுதான் சரி'' என்று கூறித் தருமரின் அநுமதி பெற்றுக் காட்டுக்குக் கிளம்பிவிட்டான்.

அர்ஜுனன் வனவாசம் செய்யக் கிளம்பியபொழுது வேதம் ஓதும் அந்தணர்கள், வேதாங்கங்களைக் கற்றவர், வேதாந்த விசாரம் செய்பவர், பக்தர்கள், புராணம் சொல்பவர்கள் முதலிய பெரியோர் பின் சென்றார்கள். அதைக் காணத் தேவேந்திரன் தேவர்களுடன் போவதுபோல் தோன்றியது. பல அழகிய இடங்களையும், காடுகளையும், ஓடைகளையும், ஆறு

களையும், நாடுகளையும், புண்ணிய தீர்த்தங்களையும் பார்த்துக் கொண்டே கங்கைக் கரையை அடைந்தான். அங்கே அனைவரோடும் சில காலம் தங்கினன். அவனுடன் வந்திருப்பவர்கள் எல்லாரும் குளித்துப் பரிசுத்தமாக அக்கினி ஹோத்திரம் முதலிய சிறந்த யாகங்களைச் செய்துகொண்டிருந்தார்கள். அங்கே கங்கைக் கரையே அப்பொழுது விசேஷமாகத் துலங்கியது.

அர்ஜுனன் கங்கையில் நீராடிப் பிதுரு தர்ப்பணம் செய்து அக்கினி வளர்ப்பதற்காகக் கரையேறப் போனன். அதற்குள் நாகராஜனுடைய பெண்ணன உலூபி அவனை இழுத்துப் பாதாளம் சென்றுவிட்டாள்.

அர்ஜுனன் அங்கு ஓர் அழகிய வீட்டையும் அதில் மூட்டிய அக்கினியையும், ஹோமம் செய்வதற்கு வேண்டிய மற்ற ஏற்பாட்டையும் பார்த்தான். சற்றும் தயக்கமின்றி அக்கினி காரியத்தை முடித்துக்கொண்டான். பிறகு சிரித்துக்கொண்டே, ''பெண்ணே, நீ யார்? யாருடைய மகள்? இந்த அழகிய இடம் யாருடையது? ஏன் இந்த மாதிரி காரியத்தை முன்பின் யோசியாமல் செய்துவிட்டாய்?'' என்று கேட்டான். அதற்கு அவள், ''என் தந்தை கௌரவ்யர் என்ற நாகராஜர். அவர் ஐராவத குலத்தில் பிறந்தவர். என் பெயர் உலூபி. தாங்கள் குளிப்பதற்காகக் கங்கையில் இறங்கியதைப் பார்த்தேன். காமவசப்பட்டுத் தங்களை இங்கே அழைத்து வந்தேன். தங்களைத் தவிர வேறு கதியற்ற என்னைத் தாங்கள் மறுக்காமல் ஏற்றுக் காப்பாற்ற வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டாள்.

அர்ஜுனன், ''நான் என் வசத்தில் இல்லை. பன்னிரண்டு மாசம் பிரம்மசரியத்துடன் வனவாசம் செய்து பல தீர்த்தங்களுக்குப் போய்வர வேண்டும் என்று தரும புத்திரர் எனக்குக் கட்டளை யிட்டிருக்கிறார். அதனல் நான் உன்னை மணக்க விரும்பியும் முடியாதவனாக இருக்கிறேன். எனவே, உன் விருப்பம் நிறைவேறும்படியும் எனக்கு அதர்மம் ஏற்படாதபடியும் நீ ஒரு வழி சொன்னல் நான் ஏற்கிறேன்'' என்றான். உலூபி, ''தங்கள் தமையனர் கூறிய பிரம்மசரிய விரதம் பாஞ்சாலிக்காகவே தவிர, மற்றவருக்காக அல்ல. என்னை மணப்பதால் அதர்மம் ஏற்பட்டாலும் அதைவிட என் உயிரைக் காப்பதால் ஏற்படும் புண்ணியம் மிகச் சிறந்தது. நான் தங்களைச் சரணம் அடைந்துவிட்டேன். என்னை மறுக்க வேண்டாம்'' என்று அவனைப் பலவாறு வேண்டிக் கொண்டாள். அர்ஜுனனும் அவள் விருப்பத்தை நிறைவேற்றுவது தர்மம் என்று கருதி அவளை மணந்துகொண்டு அன்று இரவு உலூபியுடன் தங்கியிருந்தான். இராவான் என்ற மகனை அவள் பெற்றெடுத்தாள். பிறகு சூரியோதயம் ஆனவுடன் அர்ஜுனன் வெளியே வந்து தன் இருப்பிடம் சேர்ந்தான். தன்னேடுகூட வந்தவர்களிடம் நடந்ததைத் தெரிவித்தான்.

பிறகு அர்ஜுனன் எல்லாரோடும் இமாலயத்தின் அருகில் இருக்கும் அகஸ்தியவனம், வசிஷ்ட பர்வதம், பிருகு தீர்த்தம் முதலிய இடங்களுக்குச் சென்றான். சிறந்த தானங்களைச் செய்தான். புண்ணிய மலைகளையும் தீர்த்தங்களையும் பார்த்துக்கொண்டு அனைவரோடும் கிழக்கித் திசை நோக்கி வந்தான். நைமிசம் முதலிய பிரதேசங்களையும், பல புனித ஆறுகளையும் பார்த்துக்கொண்டு தன்னைத் தூய்மை ஆக்கிக்கொண்டே வந்தான். அங்கம், வங்கம், கலிங்கம் முதலிய நாடுகளுக்குச் சென்றான். கலிங்க தேசத்தின் எல்லையில் வந்ததும் அந்தணர்களிலே பலர் அர்ஜுனனிடம் விடை பெற்றுச் சென்றார்கள்.

பிறகு சில பேரை மட்டும் அழைத்துக்கொண்டு அர்ஜுனன் தென் திசையில் இருக்கும் உப்புச் சமுத்திரத்தின் கரைக்கு வந்தான். வரும் வழியில் கோதாவரியைக் கடந்தான். காவேரி கடலுடன் கலக்கும் இடத்துக்கு வந்து நீராடி

னுன்; தேவர்களையும் பிதுருக்களை யும் முனிவர்களையும் வழிபட்டான்.

இதற்குள் பதின்மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. அவன் சமுத்திரக் கரை வழியாக வரும் பொழுது 'மணலூர்' என்ற ஊருக்கு வந்து சித்திரவாகனன் என்று பெயருடைய அந்த ஊர் அரசனைப் பார்த்தான். அவனுடைய மகளான சித்திராங்கதையைப் பார்த்துக் காதல் கொண்டான். அரசனிடம் அவளை மணம் செய்து கொடுக்கும்படி கேட்டான். அரசன், ''என் வம்சத்தில் எல்லோருக்கும் ஒரே குழந்தைதான் பிறக்கும் என்று சிவபெருமான் வரம் கொடுத்திருக்கிருர். அதனுல் குடும்பம் வளர்ந்து வருகிறது. எனக்கு இந்த ஒரே பெண்தான் இருக்கிருள். இவளால்தான் குடும்பம் வளர வேண்டும். ஆகவே, இவளுக்கு முதலில் பிறக்கும் பிள்ளையை என் வம்சத்துக்குக் கொடுத்துவிட வேண்டும். இதற்குச் சம்மதித்தால் என் பெண்ணை மணம் செய்து கொடுப்பேன்'' என்றுன். அர்ஜுனனும் இதற்கு இசைந்து, சித்திராங்கதையை மணந்துகொண்டு மூன்று மாசம் அங்கேயே வாழ்ந்தான்.

பிறகு தென்திசையில் சமுத்திரக் கரையில் இருக்கும் பல தீர்த்தங்களுக்குச் சென்றுன். அகஸ்திய தீர்த்தம் முதலிய பஞ்ச தீர்த்தங்களுக்குச் சென்று அவற்றில், சாபத்தால் முதலை வடிவம் பெற்றிருக்கும் ஐந்து அப்சரப் பெண்களுக்கும் சாபத்தை நீக்கி அவர்கள் சுய உருவம் பெறும்படி செய்தான். மீண்டும் மணலூர் திரும்பிச் சித்திராங்கதையுடன் இன்பமாகக் காலங் கழித்தான். அவளுக்கும் அவனுக்கும் பிறந்த மகன் பப்ருவாகனன். விவாகத்தின் போது வாக்களித்தபடி மகனைச் சித்திரவாகனனுக்கு அளித்தான். ''பப்ருவாகனனைக் கொஞ்ச காலம் வளர்த்துவிட்டு, இந்திரப்பிரஸ்தம் வந்து சேருவாய்'' என்று சித்திராங்கதைக்குச் சமாதானம் கூறிக் கேரளம் சென்றுன். பிறகு கோகர்ண க்ஷேத்திரத்தை அடைந்தான். மீண்டும் மேற்குக் கடற்கரையில் இருக்கும் புண்ணிய தீர்த்தங்களுக்கும் ஒவ்வொன்றுகச் சென்றுன். கடைசியாகப் பிரபாஸ தீர்த்தத்துக்கு வந்தான்.

அங்கே இரவில் படுத்திருக்கும் பொழுது கிருஷ்ணனின் சகோதரியான சுபத்திரையைப்பற்றி அவனுக்கு நினைவு வந்தது. அவளுடைய அழகு, குணம் முதலியவற்றைப் பற்றி முன் கேட்டிருந்தது முழுவதும் அவனுக்கு நினைவு வந்தது. சுபத்திரைமேல் காதல் கொண்டது அவன் மனம். எந்த வழியில் அவளை அடையலாம் என்று யோசித்தான். 'துறவி வேஷம் பூண்டு உறவினர்களுக்குத் தெரியாமல் பிக்ஷை எடுத்துக்கொண்டே செல்வேன். எப்படியாவது பலராமனின் அரண்மனைக்குள் சென்று கிருஷ்ணனின் சம்மதம் பெற்று மேலே நடக்க வேண்டியதைச் செய்வேன்' என்று தீர்மானித்தான். அதற்கு எற்றபடி கையில் திரிதண்டமும், கமண்டலுவும், கழுத்தில் ஜபமாலையும் கொண்டு அங்கே ஓர் ஆலமரத்தின் அடியில் இருக்கும் பொந்தில் நுழையப் போனுன். மழை அதிகமாகப் பொழிந்தது. அடியார்களின் ஆபத்துக்களை அகற்றும் கிருஷ்ணரை நினைத்தான்.

சத்தியபாமையுடன் மஞ்சத்தில் சாய்ந்திருந்த பகவான் ஞான திருஷ்டியால் இதை அறிந்தார். வாயை விட்டுச் சிரித்தார். அவர் ஏன் சிரித்தார் என்று சத்தியபாமை மீண்டும் மீண்டும் கேட்கவே, அவர் அர்ஜுனன் நினைத்ததையும் செய்ததையும் சத்தியபாமையிடம் கூறினுர்.

உடனே புறப்பட்டு அர்ஜுனனிடம் வந்தார். யோக க்ஷேமங்களைக் கேட்டார். அர்ஜுனனுடைய விருப்பப்படி சுபத்திரையை மணம் செய்து கொடுப்பதாக வாக்களித்தார். பிறகு இருவரும் ரைவதக மலைக்கு வந்தார்கள். அங்கே நடக்கும் உற்சவத்துக்குத் துவாரகைவாசிகள் அனைவரும் வந்திருந்தார்கள். அங்கே சுபத்திரையை நேரில் பார்த்து அர்ஜுனனின் மனம் முன்னைவிடப்

பல மடங்கு காதலால் வருந்தியது. கிருஷ்ணர் அவனுக்குச் சமாதானம் கூறினர். உற்சவம் முடிந்ததும் அனைவரும் துவாரகைக்குச் சென்றார்கள்.

ஒரு நாள் பலராமர் தம் நண்பர்களுடன் ரைவதக மலைக்கு வந்திருந்தபோது, துறவியாக இருக்கும் அர்ஜுனனைப் பார்த்தார். மழைக்காலம் நான்கு மாசமும் தம் அரண்மனையின் பின் பகுதியில் இருக்கும்படி வேண்டினர். கிருஷ்ணர், ''கன்னி இருக்கும் இடத்தில் சந்நியாசியை இருக்கச் செய்வது சரியல்ல'' என்று கூறினர். ஆயினும், பலராமர் விரும்பியதால் சரி என்று அர்ஜுனனை அனுப்பச் சம்மதித்தார் பகவான்.

அர்ஜுனனைச் சுபத்திரை உபசரித்து வந்தாள். இன்பமாக அவன் வாழ்ந்தான். நாளுக்கு நாள் துறவியிடம் பழகப் பழக, பல தேசங்களைப்பற்றியும் தீர்த்தங்களைப்பற்றியும் கேட்டறிந்தாள். அவன் கூறுவதைக் கேட்டு இன்புறுவாள். அர்ஜுனனிடம் முன்பே அவள் காதல் கொண்டிருந்தாள். அதனல் துறவியிடம், ''காண்டவப்பிரஸ்தத்தில் எங்கள் குந்தி அத்தை இருக்கிருள். அவள் பிள்ளைகள் பாண்டவர்கள். தாங்கள் பல ஊருக்கும் சென்றிருக்கலாமே; அங்கே போயிருக்கிறீர்களா? அவர்கள் க்ஷேமமா? அர்ஜுனர் தீர்த்த யாத்திரைக்குச் சென்றிருக்கிருராமே; இப்பொழுது எங்கிருக்கிருர், தெரியுமா?'' என்று கேட்டாள். அர்ஜுனன் அதற்கு, ''நான் காண்டவப்பிரஸ்தம் சென்றிருக்கிறேன். அனைவரும் க்ஷேமம். அர்ஜுனன் தீர்த்த யாத்திரை செய்து முடித்துவிட்டுத் துறவி வேஷம் பூண்டு இப்பொழுது துவாரகையில் இருக்கிருன்'' என்றான். சுபத்திரைக்கு மகிழ்ச்சியும் வெட்கமும் மேலிட்டன.

இப்படிப் பல நாட்கள் அர்ஜுனன் சுபத்திரையின் உபசாரத்தைப் பெற்றுக்கொண்டு காலங் கழித்து வந்தான். பலராமர் இல்லாத ஒரு நாள் தேவேந்திரன், நாரதர், கிருஷ்ணர் முதலிய எல்லோரும் வந்திருந்து சுபத்திரைக்கும் அர்ஜுனனுக்கும் மணம் செய்வித்தார்கள். பிறகு கிருஷ்ணரின் யோசனைப்படி அர்ஜுனன் சுபத்திரையைத் தேரில் ஏற்றிக்கொண்டு காண்டவப்பிரஸ்தம் வந்து தாயையும் தமையன்மாரையும் வணங்கினன். சுபத்திரையும் பெரியோரை வணங்கி அவர்களுடைய ஆசி பெற்று இன்பமாக வாழலானள்.

பலராமர் கோபமுற்று அர்ஜுனனோடு போர் தொடுக்கப் புறப்பட்டார். ஆனல் கிருஷ்ணர் அவரைச் சமாதானப்படுத்தினர்.

சொல்லிலே சிறந்தது

பெரிய நீளமான வார்த்தைகளைக் கண்டு நீங்கள் மருளவேண்டாம். நீண்ட வார்த்தைகள் அற்ப விஷயங்களையே குறிக்கின்றன. வாழ்வு, சாவு, அமைதி, போர், காலை, பகல், இரவு, நம்பிக்கை, அன்பு, வீடு போன்ற பெரிய விஷயங்களையெல்லாம் சிறிய வார்த்தைகளே குறிக்கின்றன. பெரிய தோரணையில் சிறிய வார்த்தைகளை உபயோகிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். இது சற்றுக் கஷ்டமான காரியந்தான். ஆயினும், நீங்கள் கருதுவதைச் சொல்ல இதுதான் வழி. கருத்து ஒன்றும் இல்லாத போது, பெரிய வார்த்தைகளை உபயோகியுங்கள். அவையே மூடர்களைப் பெரிதும் ஏமாற்றும்.

—'தி இங்கிலிஷ் டைஜெஸ்ட்'

நேருவுடன் பேட்டி

யோஷிட்டாக்கா ஹோரியுச்சி

'ருஷியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இணையாக உலக அரங்கில் இந்தியா செல்வாக்குப் பெற்றிருக்கிறது' என்று கருதும் இந்தக் கட்டுரையாளர், பொதுஜனத் தொடர்புபற்றிய ஜப்பான் இன்ஸ்டிட்யூட், காக்கு ஷுயின் யூனிவர்ஸிட்டி இவற்றின் தலைவர்; இந்திய சர்வதேச உறவுகளை ஆராய்ந்த பண்டிதர்.

"இந்த அணு யுகத்திலே இந்தியாவுக்கு உலகத்தில் ஓரளவு செல்வாக்கு இருப்பதற்குக் காரணம், நிலைமையை உள்ளபடி உணர்ந்து அதன்படி இந்தியா நடப்பதுதான்'' என்று இந்தியப் பிரதமர் ஜவாஹர்லால் நேரு, கெய்ஹின்கான் என்னும் இடத்தில் அக்டோபர் 8-ஆந் தேதி எனக்கு அளித்த பேட்டியின் போது தெரிவித்தார்.

சுதந்தர ஆசிய நாடுகளுக்குள்ளே இன்று இந்தியாவை உலகம் தலை சிறந்த நாடாக மதித்து வருகிறது. அதோடு கப்பற்படை, தரைப்படை, விமானப்படைப் பலமும், அணுசக்தி வல்லமையும் இராமலே வல்லரசுகளான ருஷியாவுக்கும் அமெரிக்காவுக்கும் கிட்டத்தட்ட ஈடாக ராஜதந்திரத்தில் சிறந்து, உலகம் போற்றும் நிலையில் இருக்கிறது. பெரிய கடற்படையும் ராணுவ பலமும் உள்ள பிரிட்டனும் பிரான்சுமோ உலக மதிப்பில் இதற்கு மாறாக இரண்டாந்தர நாடுகள் ஆகிவிட்டன. ஏன் இந்த மாறுதல் என்று நான் நேருவைக் கேட்டேன்.

அவர் மிகவும் பணிவாக, ''இந்தியா அப்படி நீங்கள் சொல்கிறபடி உலக வல்லரசு இல்லையே!'' என்றுதான் பதில் அளித்தார். ''இருந்தாலும், இந்திய ராஜதந்திரத்தைப் பொறுத்தமட்டில் உலகில் அதற்கு ஒரு மதிப்பு இருப்பதற்குக்

காரணம் இந்தியா உள்ளதை உணர்ந்து ஆத்மிக வழியில் நடப்பதே. அணுக்குண்டுகளுக்கும் செயற்கைக் கிரகங்களுக்கும் பெயர் போன யுகம் இது; ஒரு நாட்டின் எல்லையையே பெரிதாக எண்ணுவதும், 'நான் பலசாலி; என் கட்சியில் சேர்' என்று சொல்லிக்கொண்டு பலம் திரட்டுவதும் செல்லாத காலம் இது. இந்திய மக்களும் இந்த உண்மையை உள்ளூற உணர்ந்து இதன்படி நடக்கிறார்கள். 19-ஆம் நூற்றாண்டில் பல நாடுகள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளக் கப்பல் படையை

மூலம்: தாட் (ஆங்கிலம்: 2-11-'57), டில்லி.

யும் ராணுவ பலத்தையுமே நம்பியிருந்தன. ஆனால் இப்போது அவை பயன்பட மாட்டா. ஏதோ லட்சியந்தானே என்று முன்னே எண்ணி வந்த ஆத்மிக வழியே - அதிலுள்ள நம்பிக்கையே - இன்று எல்லா நாடுகளும் மனித சமூகமும் அழியாதபடி பாதுகாக்கும்; இந்தியாவும் ஜப்பானும் இன்று இதை உணர்ந்திருக்கின்றன'' என்றார்.

இந்தியாவின் எல்லை, சூழ்நிலை இவைகளைப்பற்றி உங்கள் தூதர் டாக்டர் ஹோரஸேன் எனக்குச் சொல்லியிருக்கிறார். மூன்று பக்கமும் கடலும் ஒரு பக்கம் உயரமான மலைகளும் சூழ்ந்து ஒரு 'திட்டு'ப் போல இந்தியா அமைந்திருக்கிறது. கடற்படை வலிமையுள்ள வல்லரசு சுலபமாக அதை முற்றுகையிடலாம் என்று அவர் சொன்னார். உங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்றேன்.

''முன் காலமாக இருந்தால் டாக்டர் ஹோரஸேன் சொன்னது சரிதான் என்பேன். ஆனால் இப்போது அணு ஆராய்ச்சி காரணமாக எல்லை, சூழ்நிலை இவைகளெல்லாம் அடியோடு மாறி விட்டன. மலையாக இருந்தால் என்ன? கடலாக இருந்தால் என்ன? ஒன்றும் பயன்படாது. தன் பலத்தைக் கொண்டு எந்த நாடுமே தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது. அப்படிச் செய்தால் அணுக்குண்டினால் தானே நாசமாக வேண்டியதுதான். இது சர்வதேச யுகம். ஆகவே, உலகம் முழுவதுமே அழியாதபடி பார்த்துக்கொள்வது இனி அவசியம்'' என்றார் நேரு.

நேருவைப் பார்த்துப் பேசும்போதே அவருடைய மனசு எவ்வளவு சுறுசுறுப்பாக வேலை செய்கிறது என்று வியக்கிறோம். அதையும்விட ஆச்சரியம், அவருடைய ஆழ்ந்த பணிவு. அவருடைய அடக்கத்தையும், அன்போடு பழகும் அவரது மனித சுபாவத்தையும் பார்த்ததும், அவர் சிறந்த இந்தியப் பண்பாடெல்லாம் ஒருங்கே அமைந்த கனவான் என்பதை உணரலாம். இந்து தர்மமும் இந்திய வேதாந்தமும் 'ஆத்மா'வின் வளர்ச்சியையே - இதையே எமர்ஸன் மனிதனுள் அடங்கிய ஆண்டவன் என்றார் - அறிவுறுத்துகின்றன.

புத்த பகவான், 'பிறக்கும்போது எல்லாரும் முக்த ஜீவன்களாகவே பிறக்கிறார்கள்' என்றுதான் உபதேசித்தார். இருந்தாலும், அநேகம் பேர் பணம், புகழ் இவைகளுக்கு ஆசைப்பட்டு, இரண்டுக்கும் அடிமைகள் ஆகி விடுகிறார்கள். அதனால்தான் அவர்கள் வாழ்வும் கெட்டு, போர்கள் மூண்டு, உலகத்தில் பஞ்சம் தாண்டவமாடுகிறது; தனி மனிதனும் மனித சமூகமும் நாடுகளும் விமோசனம் அடைய மக்கள் பணம், புகழ் இவைகளின் மேலுள்ள அவாவையும், துவேஷ புத்தியையும் வென்றாகவேண்டும். சுயநலத்தை விட்டு மனித சமூகத்துக்குத் தொண்டு புரிவதையே லட்சியமாகக் கொள்ள வேண்டும்.

காண்டர்பரி ஆர்ச்பிஷப் 'கண் கண்ட ஏசுநாதர்' என்று போற்றிய காந்திஜி அந்த மாதிரிதான் வாழ்ந்தார். காந்தி மகானின் சிஷ்யரும் வாரிசுமான நேரு அதே மாதிரி இந்திய நாகரிகத்தின் சாரத்தை அன்றாட அரசியலில் பயன்படுத்தும் மேதையாக - அதன் சின்னமாக - விளங்குகிறார்.

''டாக்டர் ஹோரஸேன் இந்தியாவில் பெரும்பான்மையான ஜனங்கள் ஆரியர்கள் என்றார். அது வாஸ்தவந்தானா?'' என்று கேட்டேன்.

நேரு, ''வாஸ்தவந்தான். இருந்தாலும், இத்தனை பேர் இந்த இனத்தார், இத்தனை பேர் வேறு இனத்தார் என்று கணக்காகச் சொல்வதற்கில்லை. ஆரியர்களில் பெரும்பான்மையானவர்கள் வடக்கே வாழ்கிறார்கள்; மங்கோலியர் ஓரளவுக்குத்தான் இருக்கிறார்கள்; திராவிட இனத்தார் தெற்கே வாழ்ந்து வருகிறார்கள்'' என்று பதில் அளித்தார்.

மனித சமூகமே பல இனங்களும் கலந்ததுதான்: மஞ்சள், வெள்ளை, பழுப்பு, கறுப்பு என்று இப்படிப் பல இன மக்கள் ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் வாழ்ந்து வரு

கிறார்கள். இந்தியாவை இந்த மாதிரி பல இனக் கலப்புள்ள நாட்டுக்கு உதாரணமாகச் சொல்ல லாம்.

''சில நாடுகளில் ஓர் இனத் தாரும் இன்னும் ஓர் இனத்தாரும் சேராதபடி ஒதுக்கிவைக்கிறார்கள்; அதோடு துவேஷமும் அதிகமாகப் பாராட்டுகிறார்கள். இந்தியாவில் மட்டும் இன ஒற்றுமை இருப்ப தற்குக் காரணம் என்ன?'' என்று கேட்டேன்.

அதற்கு நேரு, ''காரணம், எல்லா ஜனங்களையும் சமமாகப் பாவிக்கிறோம்; இன்ன இனம் என்று பிரித்துப் பார்ப்பதில்லை. இந்து தர்மத்தின்படி எல்லாரும் மனித சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றே கருதி வருகிறோம். ஆனால் ஜாதி இருக்கிறதே, அதுதான் இந்து மதத்தைக் கெடுத்துவிட் டது'' என்று தம் நாட்டின் குறையை ஒப்புக்கொண்டார்; ''ஜனங்கள் கண்டபடி யெல்லாம் ஜாதி வேற்றுமை பாராட்டினதே இதற்குக் காரணம். அது இந்து தர் மம் ஆகாது. உண்மையான இந்து தர்மம் மனித சகோதரத்துவத் தைப் போதிக்கிறது. ஜாதிப் பிரி வினையே சீரழிவுக்கு அறிகுறி. அத னால் எந்தச் சமூகமும் உருப்படாது போய்விடும்'' என்றார்.

நேருவின் கண்களில்தான் என்ன மென்மை, என்ன அன்பு! இந்து சமூகத்தில் உள்ள ஜனநாயகப் பண்பும் சகோதரத்துவமும் அதில் சுடர் விடுவதைக் காணலாம். உல கத்திலேயே இந்தியா ஆத்மிகத் துறையில் தலை சிறந்து விளங்கு கிறது. இன்று உலகில் உள்ள 11 மதங்களில் இந்து, பௌத்த, ஜைன, சீக்கிய மதம் நான்கும் தோன்றிய நாடு இந்தியா. இந்திய ஆத்மிகத்தின் சாரம், 'எல்லா மனித சமூகமும், எல்லா வகைக் கோட்பாடுகளும் ஒப்பற்ற பரம்பொருளின் அருளில் வளர்ந்தவை; அவை யாவும் ஒத்து நின்று நிலவவேண்டும்' என்பது தான்.

நேரு இந்து; இந்திய தத்துவ விசாரத்தில் ஊறியவர்; இதை உணர்ந்தால்தான் அவரையோ, அரசியல் துறையில் இந்தியாவின் ஆத்மிகப் போக்கையோ - அதன் 'நடுநிலையல்லாத நடுநிலை'க் கொள் கையை - உணரமுடியும்.

'நேரு (கண்ணை மூடிக்கொண்டு) நடுநிலை வகிப்பவரல்ல; காந்தி, ஏசுநாதர், புத்தர் இவர்களைப் போல் கொள்கைக்காகப் போராடு பவர்' என்பதுதான் என் கருத்து. நான் கேட்ட ஒரு கேள்விக்கு அவர் அளித்த பதில் இதை உறுதிப்படுத் தியது.

''ஹெகல் அந்த நாளில் இந்தியா வைப்பற்றிக் குறிப்பிடும்போது 'அது எல்லா வளமும் செறிந்து பொன் கொழிக்கும் நாடு' என்று வெகு காலமாக மேல்நாட்டார் கருதி வருவதாக எழுதியிருக்கிறார். 'நாகரிகமும் அதன் சீரழிவும்' என்ற புஸ்தகத்தை எழுதின புரொ பஸர் ஆடம் என்பவரும் இதே மாதிரிதான் அபிப்பிராயப்படுகி றார்: '1757-இல் இங்கிலீஷ்காரரும் பிரெஞ்சுக்காரரும், இந்தியா விஷய மாகப் போரிட்டுக்கொண்டார்கள். காரணம், இந்த நாட்டை யார் கைப்பற்றுவது என்பது மட்டு மல்ல; ஐரோப்பாவுக்கு யார் எஜ மான் ஆவது என்பதும் ஒரு முக் கியமான காரணமே. நெப்போலி யன் போனபார்ட் எகிப்தின்மேல் படையெடுத்தது, கெயிஸரும் ஹிட் லரும் ஜெர்மனியிலிருந்து கிழக்கு நோக்கிப் பாய்ந்தது இதற்கெல் லாம் என்ன காரணம்? இந்தியா தான் அவர்கள் இலக்கு - இந்தி யாவை வென்றால் பிரிட்டிஷ் சாம் ராஜ்யமும் அழியும் என்பதே அவர்கள் நோக்கம்.' இது அணு யுகம் ஆயிற்றே; இந்தியாவைக் குறித்து ஐரோப்பியர் பழைய படியே அபிப்பிராயப்படுகிறார் களா? இல்லாவிட்டால் அந்தக் கருத்தை மாற்றிக்கொண்டு விட்டார்களா? இதுதான் தெரிய வேண்டும்; இதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? ஆசியா யாவுக்கே இது முக்கியமான பிரச்னை. இந்தியா அதோகதியாகப் போனால் சுதந்தர ஆசியாவும்- அதன் பொருளாதாரம், அரசியல் எல்லாம் - அழிந்த மாதிரிதான்'' என்றேன்.

உடனே பளிச்சென்று நேரு பதில் அளித்தார்: "மேற்கு ஐரோப்பாவோ வேறு எந்த நாடோ இந்தியாவைக் கட்டி ஆள முடியாது. காலம் மாறிவிட்டது. இந்த அணுயுகத்தில் வலிமையோ, அதிகாரமோ செல்லாது. சுதந்தரத்துக்காகப் போரிடத் துணிந்திருக்கும் நாட்டை - அதற்காகச் சாகவும் தயாராயிருக்கும் மக்களை-யாரும் வெல்லமுடியாது. வல்லரசுகள் அவர்களைக் கொல்லலாம்; அழித்தும் விடலாம். ஆனாலும், சுதந்தரத்துக்காக மூச்சு உள்ள வரையில் போராடத் துணிந்த மக்களை யாராலும் வெல்ல முடியாது. இந்த அணு யுகத்தில் ஒரு நாட்டின் பாதுகாப்பு, பந்தோபஸ்து இவைகளைப் பெரும் பலமாகக் கருத முடியாது. ஆத்மிக பலமே முக்கியமானது. வெளியிலிருந்து வலிமையுடன் தாக்குவதால் ஒரு நாடு வீழ்ச்சி அடையாது; தானாகவே ஆத்மிகத் துறையில் வீழ்ச்சி அடைந்தால்தான் உண்டு" என்றார்.

"சில பேர், 'இந்தியா தொழில் துறையில் கம்யூனிஸ்ட் சீனாவோடு போட்டியிட்டுத் தோற்று விட்டால் தென் கிழக்கு ஆசியா முழுவதுமே கம்யூனிஸம் பரவி விடும்' என்கிறார்களே; உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டேன்.

தெளிவாகவும் உறுதியாகவும் நேரு, "இது சுத்த அபத்தம். உலகத்தில் வாழும் மக்கள் எல்லாருக்கும் ஆத்மா என்று ஒன்று உண்டு. மனிதன் தானாகவே ஏற்படுத்திக்கொண்ட சிக்கல்கள் தீரவும், இந்த அணுயுகத்தில் உலக அமைதி நிலவவும் ஆத்மிக வழியைக் கடைப்பிடிப்பதுதான் சரி" என்று பதில் அளித்தார்.

நாயின் பாஷை

குரைப்பது, உறுமுவது, ஊளையிடுவது, மோப்பது இந்தச் செயல்களின் மூலம் தன் உணர்ச்சிகளை வெளியிடும் ஒரு பிராணியை எப்படி ஊமை என்று சொல்லமுடியும்? மூக்கு, நாக்கு இரண்டு புலன்களின் மூலம் நாயும் மற்றப் பிராணிகளும் உணர்வதோடு ஒன்றுடன் ஒன்று பேசவும் பேசுகின்றன என்று நான் நம்புகிறேன்.

நீங்கள் கோபித்தவுடன் நாய் உங்கள் கையை நக்கும். இது தங்களைச் சமாதானப்படுத்துவதற்காக என்று சிலர் நினைக்கிறார்கள். இது சரியல்ல. 'இன்னும் உங்களிடம் கோபம் இருக்கிறதா?' என்று சுவையின் மூலம் அறிந்துகொள்ளவே இப்படிச் செய்கிறது. சுவையுணர்ச்சி அதற்கு மிகவும் கூர்மை. உங்கள் கோபம் தணியவில்லை என்றால், அதற்கேற்றபடி நாய் நடந்துகொள்ளும்.

—ஸி. பி. ட்ரேக், 'ஃபீல்டு'.

அதிருஷ்டசாலி

கர்ப்பத்தடைபற்றி யாராவது பேசும்போதெல்லாம் எனக்கு ஒரு விஷயம் ஞாபகம் வருகிறது: நான் என் பெற்றோருக்கு ஐந்தாவது குழந்தை என்ற விஷயம்!

—க்ளாரன்ஸ் டாரோ

என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டும் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்த பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

ராஜன், சத்தியமங்கலம்.

கேள்வி: டான்சில் இருந்தால் குழந்தை வளராது என்பது இங்கே டாக்டர்களின் அபிப்பிராயம். ஆப்பரேஷன் செய்தால்தான் நல்லது என்று கூறுகிறார்கள். தங்கள் அபிப்பிராயம் என்ன? என் வயது 17; என் சகோதரிகள் வயது 13, 11; தம்பி வயது 9. எங்களுக்கு டான்சில் இருக்கிறது.

'மஞ்சரி'யில் டான்சிலைப்பற்றிய கட்டுரை யொன்றில், டான்சில் ஆப்பரேஷன் செய்தவர்களுக்கு 100-க்கு 90 விகிதம் இளம் பிள்ளை வாதம் வந்துவிடுகிறது என்று எழுதியிருந்தது. ஆகவே, நாங்கள் ஆப்பரேஷன் இல்லாமலே டான்சிலுக்குச் சிகிச்சை செய்து கொள்ளலாமா?

விடை: டான்சிலைக் கண்டவுடன் அதை ஆப்பரேஷன் செய்துவிட வேண்டும் என்பது சில டாக்டர்களுடைய அபிப்பிராயம். விரல் சற்று நீளமாயிருக்கிறதென்று நாம் ஆப்பரேஷன் செய்து வெட்டிக் கொள்கிறோமா? இதுபோலவே டான்சிலும் இயற்கையான ஓர் உறுப்பு. இதற்கும் ஓர் உபயோகம் இருக்கிறது. தொண்டையில் வந்து சேரும் கிருமிகளைத் தடை செய்யும் சக்தி இதற்கு உண்டு. சில குடும்பங்களில் இயற்கையாகவே டான்சில் பருத்திருக்கும். இதனால் ஆரோக்கியம் குறையவில்லையென்றால், ஆப்பரேஷன் செய்து டான்சிலை நீக்கவேண்டாம். டான்சிலால் ஏற்படும் கோளாறுகளை இந்தக் காலத்தில் பெனிசிலின் போன்ற மருந்துகளால் குணப்படுத்திக்கொள்ளலாம். டான்சிலை எடுத்துவிடுவதில் அபிப்பிராய பேதம் நிபுணர்களிடமும் இருந்து வருகிறது. சிலருடைய தொண்டையில் இளம்பிள்ளை வாதக் கிருமி போன்ற 'வைரஸ்' இருக்கக்கூடும். டான்சில் ஆப்பரேஷன் செய்தவுடன் இந்த வைரஸ் கிருமிகளுக்கு உட்புக வசதி ஏற்பட்டு நோய் தோன்றக்கூடும்.

எஸ். ஜோஸெப் ராஜ், திண்டுக்கல்.

கே: என் மகளுக்கு வயது ஏழு பூர்த்தியாகிறது. நல்ல சுறுசுறுப்பான பெண். இரவில் படுத்தவுடன் நன்றாகத் தூங்கிவிடுகிறாள். ஆனால் ஒரு முக்கால் மணி நேரத்தில் எழுந்து நடக்க ஆரம்பித்துவிடுகிறாள். அப்படி நடக்கும் போது, சில சமயம் அழுகிறாள்; சில சமயம் யாரிடமோ எதையோ கேட்பதுபோல் புலம்ப ஆரம்பிக்கிறாள். அதே சமயம் சிறுநீரும் கழித்து விடுகிறாள். அவளைத் தடுத்து விழிக்கவைத்துக் கேட்கும் போது, ஒன்றும் தெரியவில்லை என்கிறாள். பிறகு படுத்துத் தூங்குகிறாள். இது ஒவ்வொரு

நாளும் தவறாமல் நடைபெறுகிறது.

வி: ஆங்கிலத்தில் இந்த நோய்க்குப் பெயர் 'ஸோம்னம்புலிஸம்'. இந்த நிலையில் சிலர் கூரையின் மேலும் சுவரின்மேலும் நடந்து செல்வார்கள். மிகவும் சிக்கலான காரியங்களையும் செய்து விடுவார்கள். மூளையில் ஒரு பகுதி சுறுசுறுப்பாயிருந்து, மற்றொரு பகுதி நித்திரையிலேயே இருந்து விடுகிறது.

இந்தக் குழந்தைக்கு உள்ளத்தில் ஏதோ வேதனைகளின் ஞாபகம் ஆழ்ந்திருந்து இந்தச் செயலைச் செய்விக்கிறது. குடும்பத்தில் இது எத்தனாவது குழந்தை? இவளுக்கு அடுத்தாற்போல் பிறந்திருக்கும் குழந்தைக்கு என்ன வயது? பிரசவத்தில் தாய்க்கு ஏதாவது கஷ்டம் இருந்ததா? இப்படிப் பல விவரங்கள் தெரிய வேண்டும். ஏதோ முக்கியமான கஷ்டநிலை ஒன்றை இவளுடைய உள்ளம் சமாளிக்க முயன்றபோது, அது தடைப்பட்டிருக்கவேண்டும். உள ஆராய்ச்சியே இதை விளக்கும்.

பாலசுப்பிரமணியன், கோவை.

கே: எண்ணெய் வகைகளில், டி-வைட்டமினைப் புகுத்துவது எப்படி? நல்லெண்ணெயைச் சூரிய ஒளியில் வைத்தால், அதில் வைட்டமின்-டி உண்டாகிறது என்கிறார்களே, இது உண்மைதானா? எந்த அளவில் உண்டாகிறது? எத்தனை நாட்கள் வரைக்கும் அப்படியே இருக்கும்? வைட்டமின் எஃப் உண்டா? அதன் சிறப்பு என்ன?

வி: சூரிய கிரணங்களில் அல்ட்ரா வயலெட் என்னும் ஒரு பகுதிக்கு, எண்ணெயில் டி-வைட்டமின் தோற்றுவிக்கும் சக்தி உண்டு. தூசியும் புகையும் நிறைந்த காற்று வழியாகச் சூரிய ஒளி புகும்போது, அல்ட்ரா வயலெட் கிரணங்கள் தடைப்படும்.

நல்லெண்ணெயைச் சூரிய ஒளி படும்படி வைத்தால், டி-வைட்டமின் அதில் உண்டாகலாம். இதைப்பற்றி விவரமாய்த் தெரிந்துகொள்ள வேண்டுமானால், உயிர்ப்பொருள் ரசாயன நிபுணர்களைக் கேட்கவேண்டும். எஃப்-வைட்டமின் என்று ஒன்று இருப்பதாக நான் அறியேன். இந்தக் காலத்தில் வைட்டமின்களை ரசாயனப் பெயர்களாலேயே குறிக்கிறார்கள்.

ஏ. வி. சங்கரன், மதுரை.

கே: ஒரு வருஷத்துக்குமுன் நான் ஓர் ஆஸ்பத்திரியில் என் ரத்தத்தைப் பரிசோதித்துக்கொண்டபோது, அதில் 90 சதவிகிதம் சிவப்பு அணுக்கள் இருப்பதாகக் கூறினார்கள். அப்படிச் சத்துள்ள ரத்தமாக இருந்தும், இந்த வருஷமும் எடை சென்ற ஆண்டு போலவேதான் இருக்கிறது. இதுபற்றித் தங்கள் கருத்தென்ன?

வி: ரத்த சோதனையில் எத்தனையோ வகை உண்டு: ரத்தத்தின் நிறத்தை அளப்பது, ரத்த அணுக்களின் எண்ணைக் குறிப்பது, ரத்த அணுக்களின் உருவத்தோற்றம் முதலியவற்றைக் குறிப்பது, அதன் ரசாயனப் பகுதிகளின் அளவையும் பிற குணங்களையும் நிர்ணயிப்பது என்றெல்லாம் பலவகைச் சோதனைகள். இத்தனை சோதனைகளையும் செய்த பிறகுங்கூட, ஏன் ஒருவனுடைய எடை வயதுக்கு ஏற்ற அளவு இல்லை என்பதற்குக் காரணம் அறிய இயலாது. இதற்கு வேறு ஆராய்ச்சிகள் செய்தாக வேண்டும். வைத்தியரை நேரில் கேட்டுக்கொள்ளுங்கள்.

ராமாநுஜம், பாளையங்கோட்டை.

கே: கிட்டப் பார்வை காரணமாகக் கண்ணாடி போட்டு எட்டு மாதங்கள் ஆகின்றன. இந்தக் கண்ணாடியைக் கழற்றி எறிய வழி உண்டா? சிலர் சிரசாசனம் செய்தால் சரியாகிவிடும் என்கிறார்களே; உண்மையா? கண்ணாடியை எடுத்துவிட வழி சொல்லுங்கள்.

வி: கிட்டப் பார்வை (அதாவது தூரப் பார்வைக் குறை) அதிகமாயிருந்தால், கண்ணாடி இல்லாமல் முடியாது. தூரப் பார்வைக் குறை உள்ளவர்கள் புத்தகப் படிப்பிலேயே நேரத்தைக் கழித்துத் தூரப் பார்வையை மேலும் குறைத்துக்கொள்வார்கள். தூரப் பார்வைக் குறை சிறிதளவு இருந்தால், அதைப் பாராட்டாமல் தூரப் பார்வையிலேயே அதிக நேரம் கழிக்கவேண்டும். பழக்கத்தால் தசைகள் வலுப்பெற்றுக் கண் பார்வையைச் சமாளித்துக் கொள்ளும். சிலருக்குத் தூரப் பார்வைக் குறை இயல்பாகவே கொஞ்ச காலத்துக்குப் பிறகு குணமாகக்கூடும்.

ப. நடராசன், சிதம்பரம்.

கே: எனக்கு 18 வயது நிறைந்து 5 மாதங்களாகின்றன; உயரம் 5 அடி, 1·8 அங்குலம்; எடை 124 பவுண்டு. துடைகள் உராய்கின்றன. சதை அதிகம். உயரம் குறைவு. தொந்தி விழுந்திருக்கிறது. உயரம் கூடுவதற்கும், சதை குறைவதற்கும், தொந்தி போவதற்கும் என்ன செய்ய வேண்டும்?

வி: நண்பர் பருமனாவதற்குக் காரணம் தேட வேண்டும். இந்தக் காரணத்தை நீக்கினால், பருமன் குறையும். சாப்பாட்டில் சர்க்கரை, நெய், தயிர் போன்ற பொருள்களை அதிகமாக உட்கொண்டு பருமன் அதிகமாகியிருக்கிறது. எடை 124 பவுண்டு இருப்பது 18 வயதுக்கு அதிகமே. இதைக் குறைக்கப் பாடுபடவேண்டும். இந்த வயதுக்கு 100 பவுண்டுக்கு மேல் இருக்கக்கூடாது. சாப்பாட்டையே அளவில் படிப்படியாகக் குறைத்

துக்கொள்ள வேண்டும். உடலுக்கு வேண்டிய வைட்டமின் சத்துக்களை மாத்திரைகளாகவும் எண்ணெய்ச் சொட்டுக்களாகவும் சாப்பிடவேண்டும். மாதத்துக்கு 4 பவுண்டாவது குறையும்படி செய்துகொள்ள வேண்டும். தினமும் 2 மைலாவது நடக்க வேண்டும். இதைப் படிப்படியாக அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்யும்போது உயரமும் அதிகமாகலாம்.

சுப்பிரமணியன், இலங்கை.

கே: என் பற்கள் சுத்தமாகவும் வெண்மையாகவும் இருக்கின்றன. படுக்கைக்குப் போகுமுன் ப்ரஷ் கொண்டும், காலையில் 'கால்கேட்' பல்பொடி கொண்டும் துலக்குகிறேன். சொத்தை கிடையாது. ஆனால் இரண்டோர் ஈறுகளிலிருந்து சீழ்போல் வெண்மையான வஸ்து வருகிறது. பல்லில் வலியோ, பயோரியா போன்ற வியாதியோ கிடையாது. இதைத் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? வயது 30.

வி: நண்பரின் பல் 30 வயதுக்கு நல்ல ஆரோக்கியமாய்த்தான் இருக்கிறது. ஈறுகளிலிருந்து சீழ் போன்ற வஸ்து வருகிறது என்கிறார். இது சீழாயிருந்தால், 'பயோரியா' என்ற வியாதியின் ஆரம்பம் என்றே கருதி, பல் வைத்திய நிபுணரைக் கேட்க வேண்டும். ஆரம்பத்திலேயே வைத்தியம் செய்துகொள்வதால்,

பல்லைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

நாராயணதாஸ், ஸ்ரீரங்கபுரம்.

கே: அடிக்கடி கண் வலி ஏற்படுகிறது. அந்தச் சமயம் கண் குத்துகிறது. இதைத் தீர்க்க என்ன பரிகாரம்?

'ஆஸ்த்மா' என்பது கொடிய வியாதியா? எதனுல் உண்டாகிறது? நீக்க என்ன வழி?

கவலையில்லாமல் சந்தோஷமாயிருக்க வைத்திய ரீதியில் சிகிச்சை உண்டா?

ஒரு மனிதன் பரிபூர்ண சுகத்துடன் இருக்க வேண்டுமானுல், என்ன என்ன செய்யவேண்டும்?

வி: கண் வலியில் எத்தனையோ விதம் உண்டு. ஒவ்வொன்றுக்கும் தக்க வைத்தியமும் உண்டு. நண்பருக்கு எந்த விதமான கண் வலி வந்திருக்கிறதோ?

'ஆஸ்த்மா' ஒரு கடுமையான வியாதியே; ஆனுல் கொடிய வியாதி ஆகாது. சில பொருள்களுக்கு அதீத உணர்ச்சி (அல்லெர்ஜி) ஏற்பட்டு 'ஆஸ்த்மா' உண்டாகிறது. நரம்புக்குப் பலம் குறைவாயிருந்தாலும் 'ஆஸ்த்மா' கடுமையாகக் கூடும். இதற்குக் காரணமான அதீத உணர்ச்சியை நீக்குவது மிகவும் கஷ்டமான காரியம். வைத்தியருடைய உதவியால் மட்டுமே சாத்தியமாகலாம்.

கவலையில்லாமல் எப்போதும் சந்தோஷமாயிருந்தால், அந்தச் சந்தோஷத்துக்கு மதிப்பில்லை. கொஞ்சம் கவலை ஏற்பட்டு, பிறகு கவலை நீங்கும்போது, சந்தோஷம் உண்டாகும். இந்தச் சந்தோஷத்துக்கு மதிப்பு அதிகம். பழக்கத்தால் சிலருக்குக் கவலையே இயல்பாகிவிடுகிறது. இவர்களை உள ஆராய்ச்சி முறையில் சிகிச்சை செய்து குணப்படுத்தலாம். உடலில் ஆரோக்கியக் குறை ஏற்பட்டிருந்தால் அதுவும் சந்தோஷத்தைக் குலைக்கக் காரணமாகக் கூடும். ஆரோக்கியக் குறையை நீக்குவதால் உள்ளம் உற்சாகம் அடையும்.

பரிபூர்ண சுகம் அடையவேண்டுமானுல், உலக விஷயம் ஒன்றிலாவது பற்று இருக்கக்கூடாது. உலகில் பிறந்தவர் இத்தகைய நிலை அடைவது அரிது.

எஸ். எஸ். சுந்தரம், திருச்சி.

கே: என் உயரம் 5 அடி 11 அங்குலம்; எடை 100 பவுண்டு; மார்பு 30 அங்குலம்; வயது 26. பலவீனமாயிருக்கிறேன். மார்பில் சிறு குழந்தையிலிருந்து கூடு விழுந்து இருக்கிறது. எடையில் அபிவிருத்தி காணவும் மார்புக் கூடு போகவும் அவா.

வி: தண்டால், சூரிய நமஸ்காரம் முதலிய உடற்பயிற்சி முறைகளைக் கையாள்வதால் மார்பு ஓரளவு விரிவடையலாம்; இல்லாவிட்டால், தசைகள் வலுப்பெற்று எலும்பின் குறைகளை மறைத்துக் கொள்ளும். தேகப் பயிற்சியால் பசி அதிகமாகும். அதிக அளவு சாப்பிடலாம். இதனுல் தேகம் வலுப்பெறும்.

ராமமூர்த்தி, சேலம்.

கே: வயது 17. உயரம் 4 அடி, 8 அங்குலம். தைராயிட் சுரப்பு நீர் குறைவாயிருப்பதே உயரக் குறைக்குக் காரணம் என்கிருர் டாக்டர். வளர்ச்சி அடையத் தயை செய்து சரியான வழி சொல்லுங்கள். தைராயிட் மாத்திரைகள் சாப்பிடலாமா? சாதாரணமாக, ஒரு மனிதனுக்கு எவ்வளவு வயது வரையில் வளர்ச்சி உண்டு?

வி: 4 அடி 8 அங்குலம், 17 வயசுக்கு சற்றுக் குறைவுதான். சிலருக்கு 25 வயது வரையில் உயரம் அதிகமாகலாம். தைராயிட் சுரப்பு நீர்க் குறை இருந்தால், நண்பர் இவ்வளவு திறமையாகக் கேள்வி கேட்டிருக்க முடியாது. ஆகவே, தைராயிட் மாத்திரை பயன்படாது; கேடு செய்யக்கூடும்.

மா. ராமசாமி, திருப்பூர்.

எனக்கு வயசு 18; எடை 85 பவுண்டு; உயரம் 5 அடி, 3 அங்குலம்; மார்பு 24 அங்குலம். எடையையும் மார்பையும் பெருக்க என்ன வழி? இப்போது நான் ஆசனம் பயின்றுவருகிறேன். இது உடலை உயரமாக்குவதற்குச் சிறந்த

வழியா? இதை விட்டுத் தண்டால், பஸ்கி செய்யட்டுமா?

வி: எடையையும் மார்பு அகலத்தையும் அதிகரித்துக்கொள்ள எந்த விதமான தேகப் பயிற்சியும் பயன் அளிக்கும். ஆசனங்கள் செய்வது நல்லது. தண்டால், பஸ்கி ஆகியவையும் நல்ல பரிகாரங்களே. இவற்ருல் உயரமும் அதிகமாகலாம்.

தனலட்சுமி, மாவட்டம்.

கே: என் வயது 16. நெற்றியில் 'ப' வடிவத்துக்குத் தலை மயிர் வந்து வளர்ந்துகொண்டது. நெற்றி குறைந்த அளவுதான் இருக்கிறது. முகத்தில் மீசையும் ஓரளவு முளைத்திருக்கிறது. இதற்குப் பரிகாரம் வேண்டும்.

வி: 'ப' வடிவாய் நெற்றியில் மயிர் வளர்ந்திருப்பது நீக்க முடி

யாத காரியம். முயற்சி செய்ய வேண்டாம். சிலருக்கு இது ஓர் அழகுக் குறியாகவே இருக்கும். மீசை போல் முளைத்திருப்பதைப் பூனை மயிர் என்பார்கள்; நிஜமான மீசை அல்ல. தினம் மஞ்சள் தேய்த்துக் குளித்தால் இது நீங்கக்கூடும்.

ஈசன், திருச்செந்தூர்.

கே: முகத்திலும் வேறு பல பாகங்களிலும் ஒரு சிறிய சதை வளர்ச்சி ஏற்பட்டு ஒரு வருஷ காலமாகிறது. பல முறை ரத்த சோதனை செய்திருக்கிறேன். பல விதமான சிகிச்சையும் செய்து பார்த்தேன். ஒருவர் டி. பி. கிருமி இதற்குக் காரணம் என்ருர். மேக வியாதியாக இருக்கலாம் என்ருர் இன்னொருவர். விஷச் சத்து என்று ஊகித்தார் மற்றொருவர். எனக்குச் சுமார் மூன்று வருஷத்துக்கு முன் 'காலா-அசார்' ஜுரம் ஏற்பட்டது. அப்போது பிரயோகம் செய்த மருந்தின் விஷச்சத்தாக இருக்கலாம் என்றும் ஒருவர் சொன்னுர். என். ஏ .பி., ஸ்ட்ரெப்டோமைசின் போன்ற மருந்துப் பிரயோகமும் செய்தாகி விட்டது. குணமில்லை.

வி: காலா - அசார் நோய் சருமத்தைப் பாதிக்கக்கூடும். சிறு சிறு சதைகளாகவும், இவற்றில் நிறம் குறைந்தும் தோன்றக்கூடும். கலா - அசார் ஜுரத்துக்குச் செய்த சிகிச்சை, ஜுரத்தைத் தான் குறைத்தது; 'காலா-அசார்'க் கிருமிகளைக் கொல்லவில்லை. இவை சருமத்தினடியில் வந்து குவிந்து கொண்டன. மேலும், நீடித்த சிகிச்சை செய்து குணமாக்கிக் கொள்ளலாம். 'காலா அசா'ருக்கு உள்ள மருந்தையே இஞ்செக்ஷன் செய்துகொள்ள வேண்டும்.

காப்பி அடிப்பதில் வல்லவர்

காப்பி அடிப்பதில் குழந்தைகளை யாரும் மிஞ்ச முடியாது. அவர்களுக்கு நீங்கள் எவ்வளவுதான் நல்ல பழக்கங்களைச் சொல்லிக் கொடுங்கள்; பெற்றோரைத்தான் அவர்கள் காப்பியடிப்பார்கள்.

—ஏர்ல் வில்ஸன்

அழகுக்காகமட்டும் அல்ல, பலவித பாக்கியங்களையும் பெறலாம் என்றே நவரத்தினங்களை மக்கள் அணிகிறார்கள்.

பாக்கியம் தரும் கற்கள்

சீனிவாச ராவ்

பூமியின்மேல் மனிதனுடைய வாழ்க்கை எவ்வளவு பழமையானதோ, அவ்வளவு அவனுடைய நம்பிக்கைகளும் பழமையானவையே. ரத்தினங்களின் அற்புதமான சக்தி, பெருமை இவற்றின்மேல் மனிதனுடைய நம்பிக்கை உலகெங்கும் அநாதிகாலமாக இருந்து வருகிறது. மிகமிகப் பழைய காலத்தில் மனிதன் அநாகரிக நிலையில் ஆழ்ந்திருந்தபோதே ஒளி மிகுந்த கற்களைப் பூமியிலிருந்து தோண்டியெடுத்து, அவற்றை ஒன்றோடொன்று தேய்த்து நயம்பெறச் செய்யக் கற்றுக்கொண்டான். இப்படி அராவிய கற்களைக் கழுத்தைச் சுற்றிக் கோத்து அணிவதால், நோய்களும் துரதிருஷ்டமும் ஓடிவிடும் என்றும் ஆதிமனிதன் நம்பினான்.

சிறந்த சில ரத்தினங்கள் குறிப்பிட்ட சில கிரகங்களை வசப்படுத்தும் ஆற்றல் பெற்றவை என்பதை அறிந்த சில வம்சத்தவர்களும் சில மாகாணத்தவர்களும் ராசிச் சக்கரத்தை ஆதாரமாகக் கொண்டு, தமக்கே உரியவையான அதிருஷ்ட ரத்தினங்களின் பட்டியலை வைத்திருந்தார்கள். இது போன்ற நம்பிக்கை நம் நாட்டில் இருந்தது; இன்றும் இருக்கிறது.

'இந்திர நீலமணியை அணிந்தவர்களுக்கு அது சுபத்தைக் கொடுக்கும்; அதோடு மிகக் குரூரமான சுபாவத்தையுடைய சனியைச் சாந்தப்படுத்தும் சக்தி உடையது என்பது நம்மவர் கொள்கை. இது தன்னை அணிந்தவனிடம் இருக்கும் கெடுதல்களையெல்லாம் நிவர்த்தித்து, அவன் சாத்துவிகமான வாழ்க்கை நடத்தும் வரையில் அவனுக்கு மங்களத்தையும் ஆனந்தத்தையும் கொடுக்கும்.

தம் ஜன்மராசிக்குச் சுக்கிரனை அதிபதியாகக் கொண்ட ஒருவர், பச்சையை அணிவார். சக்தியை உள்ளடக்கிய இந்த மணி, குருட்டுத்தனத்தை நீக்கி வருங்காலத்தை உணரும் அறிவைக் கொடுக்கும்; அரசனுடைய அன்பு கிடைக்கச் செய்யுமாம்.

பத்மராகம் (கெம்பு) என்னும் மணியை ஜன்மராசிக்குச் சூரியனை அதிபதியாகக் கொண்டவர்கள் அணிவார்கள். இதை அணிவதால் ஆயுள் வளர்ந்து ஆரோக்கியம் கைகூடும் என்று எண்ணியதோடு, இது பூஜிக்கத் தகுந்ததென்றும் முன்காலத்தவர் மதித்தார்கள்.

ரத்தினங்களின் அரசனென்று புகழ் பெற்ற வைரம், புதனுக்கு மிகவும் பிரியமானது. ஜனங்கள் அதைப் பாக்கியத்தைக் கொடுக்கும் சிந்தாமணி (டாலிஸ்மன்) என்று கருதினார்கள். வைரம் தைரியத்தையும் திடமான உள்ளத்தையும் கொடுத்து ஆசையை வளர்க்கும் என்று நம்பினார்கள். இது வெகுமதியாகக் கிடைத்தால், கிடைத்தற்கரிய அதிருஷ்டத்துக்கு அறிகுறி என்று மகிழ்வார்கள்.

குருவுக்கு உரிய ராசியில் ஜனித்தவர்களுக்கு முத்து அதிருஷ்டத்தைக் கொடுக்கும் என்று எண்ணி இதை அணிந்து வந்தார்கள். இது தீர்க்காயுளையும் பலத்தையும் தருவது.

சந்திரனுக்கு உரிய ராசியில் பிறந்தவர்கள் சந்திரகாந்தக் கல்லை அதிருஷ்ட ரத்தினமாகப் பாவித்தார்கள். இது தீர்க்காயுளையும், ஆரோக்கியத்தையும் கொடுப்பதோடு, காதல் விவகாரங்களிலும் வெற்றி கொடுக்குமாம். நீரிலும்

மூலம்: ஜனப்ரகதி (கன்னடம்: 1-9-'57), பங்களூர்.

நிலத்திலும் பிரயாணம் செய்யும் போது துணையாக இருக்குமாம்.

யாருடைய பிறப்பு ரத்த வர்ண முள்ள குருவின் அதிகாரம் உள்ள ராசியில் நேருகிறதோ, அவர்கள் அருணசிலையை (ப்ளட்ஸ்டோன்) மங்களகரமான தென்று கருதினர் கள். இது தைரியத்தையும் சக்தியை யும் கொடுக்கும். பொறாமை, துவே ஷம், கொலைக்குணம் இவற்றை யெல்லாம் தீவிரமாகத் தடுத்து விடும் என்பதால், யுத்த காலத்தி லும் தொற்று நோய்கள் ராஜ்யத் தில் பரவிய காலத்திலும் அரசர் கள் இதை அணிந்துகொள்வார் களாம்.

பவளங்கள் கொடிய திருஷ்டிக் குப் பரிகாரம் செய்து குழந்தை களின் ஜுரம், சீதளம், பாவகிரக தோஷம் இவற்றிலிருந்து காப்பாற்றுமாம். சிலாராளம் (ஆம்பர்) என்பதை அணிந்தால் விஷத்திலிருந்தும் தீய சக்திகளி லிருந்தும் காப்பாற்றும்.

கோமேதகம் (க்ரிஸோலைட்) வாதநோயை அற்புதமாகக் குணப் படுத்தும்.

மாணிக்கம் (கார்பங்கிள்) தன்னை அணிந்தவர்களுடைய மயக் கத்தைத் தீர்க்கும்.

நீல ரத்தினம் (டர்க்குவாய்ஸ்) துவேஷத்துக்கு எதிரிடையாக வேலை செய்து க்ஷேமத்தைக் கொடுக்கும்.

புஷ்யராகம் தன்னை அணிந்தவர் களைக் கெட்ட கனவுகளிலிருந்தும் பிரயாண காலத்தில் நேரும் அபா யங்களிலிருந்தும் காக்குமாம்.

ஸ்படிகம் கண் பார்வை யைப் பலப்படுத்துவதோடு நிறம் மாறுவதால், அதிருஷ்டம், துர திருஷ்டம் இரண்டையும் வருமுன் தெரியப்படுத்துமாம்.

வேறொரு வகைக் கோமேதகம் (ஸார்டானிக்ஸ்) தன்னை அணிந்த வனுக்குக் கோர்ட் விவகாரங்களில் நிச்சயமாக வெற்றி தருமாம்.

கந்தகத்தோடு கூடிய நீலவர்ண முள்ள 'லேப்பிஸ் லஸூலி' என்ற கல் சரும நோய்களைத் தீர்க்கு மாம்.

இலங்கையிலும் மலபாரிலும் கிடைக்கும் 'காட்ஸ் ஐ' என்ற ஒரு வகைக் கல் சம்பத்தை ஆகர்ஷிக்கும் சக்தியுள்ளது. இதற்கு 'நெப் டியூன்' அதிதேவதை என்று மேல் நாட்டார் சொல்லுகிறார்கள்.

இந்தியா, பர்மா, இலங்கை ஆகிய இடங்களில் ரத்தினங்கள் உயர்ந்த ஸ்தானம் பெற்றிருப் பதன் காரணம், இவை நவக் கிரகங்களை அடக்கியாளும் சக்தி பெற்றிருப்பதால் கிரகங்களை அனு கூலமாக்கும் என்று நம்புவதுதான். வானத்தில் நவக்கிரகங்களும் சுப ஸ்தானங்களில் இருக்கும்போது மோதிரத்தில் கற்களைப் புதைத் தால், அதை அணிபவர்களுக்கு எல்லாச் சௌபாக்கியமும் மங்கள மும் கை கூடும் என்பதில் சந்தேகம் இல்லை.

வஜ்ரம் (வைரம்) அணிந்தவ னுக்கு விஷம் ஏறாது; அவன் கெட்ட கனவு காணமாட்டான்.

மாணிக்கம் தரித்தவன் மனநோய் நீங்கி ஆனந்தம் அடைவான்.

நீல ரத்தினத்தை அணிவதால் மூக்கில் வரும் நோய்கள் நீங்கும். நாக்கில் நீலத்தை வைத்துக் கொண்டால் தாகம் தீரும். கண் ணின்மேல் அதை வைத்துக் கொண் டால் படர்ந்த படலம் கரைந்து விடும்.

பச்சைக்கல் பெண்களின் பிரசவ வேதனையை நீக்கும்.

'ஃபிரோஜா' என்னும் கல் பயத்தையும், 'சுரமா' என்னும் கல் கெட்ட கனவுகளையும் நீக்கும்.

புஷ்யராகத்தை அணிந்தால், நல்ல ஆலோசனை செய்யும் சக்தி உண்டாகும்.

பத்மராகம், மஞ்சள் காமாலை யைப் போக்கும்.

வெள்ளி மோதிரத்தில் சூரிய காந்த மணியைப் பதித்து அணிந் தால் ஆஸ்த்மா குணமாகும்.

வைடூரியம் பார்வைக்குப் பலம் தரும்.

சந்திரகாந்தக் கல் பிசாசுகளின் உபாதையை ஒழிக்கும்.

கோமேதகம் காமத்தை வளர்ப் பது. ஆனால் இதைச் சிலகாலம் தண்ணீரில் இட்டு அந்த நீரில் குளித்தால், மேகநோய் நீங்கும்.

இப்படிப் பல வகையில் உப யோகப்படும் ரத்தினங்களின் கதைகள் ஆச்சரியமானவை.

திராவிட மொழிகள்

சுநீதி குமார் சட்டர்ஜி

ஹிந்தித் திணிப்பை ஹிந்திக் கமிஷனில் எதிர்த்த இருவரில் ஒருவர் டாக்டர் சுப்பராயன்; மற்றவர் இந்தக் கட்டுரையாளர். ஹிந்திக் கமிஷனுக்குப் பின் வந்த சம்ஸ்கிருதக் கமிஷனுக்கு இவர் தலைவர். சிறந்த மொழி ஆராய்ச்சியாளர்.

இந்தியாவில் திராவிட மொழிகள் தனி இனத்தைச் சேர்ந்தவை. இந்திய யூனியனில் ஒரு தனிப் பகுதியில் (தெற்குப் பிராந்தியத்தில்) இந்த மொழிகள் வழங்கி வருகின்றன. சில மொழிகள் உலகில் பெரும் பகுதியில்-ஒரு கண்டம் அல்லது அதற்கும் மேற்பட்ட பரப்பில்-வழங்கி வருவதைக் காணலாம். இந்தோ - ஐரோப்பிய மொழிக் குடும்பம், செமிடிக் (ஹீப்ரூ, அரபி), ஆஸ்ட்ரிக் இனத்தைச் சேர்ந்த மொழிகள் இவை இப்படிப் பெரும் பரப்பில் வழங்குபவை. ஆனால் திராவிட மொழிகளோ குறிப்பிட்ட ஒரு பரப்புக்குள் அடங்கியிருக்கின்றன. மஞ்சு, மங்கோல், துருக்கி, ஃபின்னிஷ் போன்ற வெவ்வேறு குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளின் அமைப்பு முறையோடு திராவிட மொழிகளின் அமைப்பு முறை ஒத்திருந்தாலும் இவை தனிப்படத் தோன்றியவை. திராவிட மொழிகளில் முக்கியமாக நாலு - தெலுங்கு கன்னடம், தமிழ், மலையாளம் இவை - இலக்கிய அடிப்படை கொண்ட மொழிகள். இந்திய மொழிகளுக்குள்ளேயே இவை தனிப் பெருமையுடன் விளங்குகின்றன. திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த இன்னும் பல மொழிகளும் உண்டு. ஆனால் அவைகளில் சில அவ்வளவாக இலக்கிய வளம் பெற்றிருக்கவில்லை; சிலவற்றில் இலக்கியம் என்பதே அபூர்வம்.

இந்தியாவை இரண்டாகப் பிரிப்பதற்குமுன், திராவிட மொழிகள் பேசுவோரின் தொகை இந்திய ஜனத்தொகையில் நூற்றுக்கு இருபது (பிரித்த பின் இன்னும் கூடுதலாகவே இருக்கும்). தாராளமாகக் கணக்கிட்டாலும் மொத்தம் 9 கோடி மக்களே திராவிட மொழிகளைப் பேசி வருகிறார்கள். இவர்களில் தெலுங்கு பேசுவோர் தொகை 3 கோடியே 5 லட்சம். அடுத்தபடியாகத் தமிழ் பேசுவோரின் தொகை சுமார் 2 கோடியே 4 லட்சம்; கன்னடம் பேசுவோர் 1 கோடிக்கு மேலும், மலையாளம் பேசுவோர் 1 கோடிக்கு மேலும் இருப்பார்கள். கோண்டி என்ற மொழியில் பல வேறுபாடுகள் உண்டு; அதைப் பேசுவோர் சுமார் 20 லட்சம் பேர் இருக்கலாம். 5 லட்சம் பேர் ஒராவன் மொழியும், (பாகிஸ்தானில் உள்ள பலூசிஸ்தானத்தில்) சுமார் 30 லட்சம் பேர் பிராஹுயி மொழியும் பேசுகிறார்கள். தெலுங்கை எடுத்துக் கொள்வோம்: இந்தியன் யூனியனில் ஹிந்திக்கு அடுத்தபடியாகப் பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழி அதுதான்; தொதுவ மொழியையோ உதகமண்டலத்தருகே நீலகிரிப் பிரதேசத்தில் வாழும் பிற்பட்ட வகுப்பினரான தொதுவர்கள்தான் - மொத்தம் 600 பேரே - பேசி வருகிறார்கள்.

திராவிட மொழிகளில் ஒவ்வொன்றுக்கும் வேறுபாடு மிகுதி

காப்பிரைட்: ஃப்ரீ இண்டியா (ஆங்கிலம்: 15-9-'57) ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2.

யாக உண்டு. ஆனால் பொதுவாக அவைகளின் இயல்பு பெரிதும் ஒத்திருக்கிறது. இந்த மொழிகளும் இவைகளில் இன்று வழங்கும் வகைகளும் பொதுவான ஒரு மொழியிலிருந்தோ, தனித்த ஒரு திராவிட மொழியிலிருந்தோ தோன்றியிருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்; பழந் திராவிட மொழி என்றும் இதைச் சொல்லலாம். ஆரிய மொழி வகைகளும் சரி, செமிடிக் மொழி வகைகளும் சரி, ஒவ்வொரு பழைய மொழியிலிருந்து தோன்றியவை; நாளடைவில் இந்த ஒவ்வொரு வகையிலும் ஒன்றோடு ஒன்று சம்பந்தமுள்ள தனித்தனி மொழிகள் தோன்றியதுபோல் திராவிடம் என்ற ஒரு தனி மொழியிலிருந்தே இப்படிப் பல மொழிகள் தோன்றியிருக்கவேண்டும். வரவர ஆராய்ச்சி மூலம் ஒரு விஷயம் தெளிவாகி வருகிறது; ஆரிய மொழி வளர்ச்சிக்குத் திராவிடம் பெரிதும் உதவியிருக்கிறது. சம்ஸ்கிருதத்தில் சர்வ சாதாரணமாக வழங்கும் பெரும்பாலான சொற்கள் திராவிடத்திலிருந்து தோன்றியவை என்று இப்போது நிரூபணமாகிவிட்டது. கன்னட மொழி அகராதி வெளியிட்ட கிட்டல் இந்தமாதிரி 450 சொற்களை எடுத்துக் காட்டியிருக்கிறார். வேறு பல அறிஞர்களும் இப்படி ஆதியில் திராவிடத்திலிருந்து சம்ஸ்கிருதத்தில் இணைந்துவிட்ட சொற்கள் பலவற்றை வெளியிட்டிருக்கிறார்கள். பழங்காலத்திலேயே நீர (நீர்), மீன (மீன்), திந்திடி அல்லது சிந்த (புளி), கால (காலம் - கருமை - காளம்), (வேத காலத்திய) கர்மார (கருமான்), கலா (கலை), மயூர (மயில்), சார்த்தூல (புலி), நகர (நகர்) போன்ற சொற்களை இப்படித் திராவிடத்திலிருந்து சம்ஸ்கிருதம் எடுத்துக் கொண்டுவிட்டது. இன்னும் கேட்டால், வட இந்தியாவில் வாழ்ந்த பழந்திராவிட மக்களும் ஆரியரல்லாதாரும் ஆரிய மொழியையும்-வேத காலத்துச் சம்ஸ்கிருதத்தையோ, பிராகிருதத்தையோ - பேசத் தொடங்கிவிட்டார்கள். அப்போது ஏராளமான திராவிடச் சொற்களும், ஆரியமல்லாத சொற்களும், சொல்லமைப்புக்களும், எவரும் அறியாமலே ஆரிய மொழியில் கலந்துவிட்டன. சம்ஸ்கிருதம் இந்தியாவில் வளர்ச்சி பெறும்போது இப்படி ஆரியமல்லாத மொழிகளின் - அதுவும் திராவிடத்தின்-கூட்டுறவு காரணமாக, அதில் மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதைத் தெளிவாகக் காணலாம். இன்னொரு புறம் ஆரியமொழியும் ஆதிகாலத்திலிருந்தே திராவிடப் பண்பாடு, மொழி இவற்றின் வளர்ச்சிக்கு உதவியிருக்கிறது. மற்ற முக்கியமான மூன்று திராவிட மொழிகளைவிடத் தமிழ் மட்டுமே இன்னும் தன் பழம் பண்புகளைக் காத்து வருகிறது; என்றாலும், தமிழிலும் ஆதிகாலமுதலே பல சம்ஸ்கிருத, ஆரியச் சொற்கள் வழங்கி வந்திருப்பதைக் காணலாம். அதோடு கலப்பற்ற ஆரியக் கருத்துக்களும் சம்ஸ்கிருதத்திலிருந்து தமிழில் பரவியிருக்கின்றன.

ஆரியம் என்பது வேறு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும் இந்தியாவில் அது வளர்ச்சி பெறும்போது திராவிடத்தோடும், ஆரியம் அல்லாத பிற மொழிகளோடும் பழகவேண்டியிருந்தது. இந்தியாவில் சம்ஸ்கிருதம் வளர்ச்சி பெறுவதற்குத் திராவிடம் உதவியது என்பது உண்மையே. ஆகவே, ஒருவிதத்தில் இலக்கிய மொழியாக உருவெடுத்த சம்ஸ்கிருதம் ஆரியர், திராவிடர் ஆகிய இரு சாராரும் சேர்ந்து கண்ட சிருஷ்டிதான்.

முறையாகத் திராவிடமொழிகளைப்பற்றி அறிஞர்கள் ஆராய முன் வந்தது நூறு ஆண்டுகளுக்கு முன்புதான். 1856-இல் ராபர்ட் கால்டுவெல் லண்டனில் 'திராவிடம் அல்லது தென்னிந்திய மொழிக் குடும்பத்தின் ஒப்பிலக்கணம்' என்ற அரிய நூலை வெளியிட்டார். அதில் ஆரிய-சம்ஸ்கிருத மொழிகளிலிருந்து திராவிட மொழிகள் வேறானவை என்பதை அவர் நிரூபித்துக் காட்டினார். பிறகு வேறு பல அறிஞர்கள் கால்டுவெல் தொடங்கிய பணியைத் தொடர்ந்து நடத்தி வந்தார்கள். அவர்களில்

ஜெர்மன் அறிஞரான க்ரவுல் என்பவரையும், ஆங்கில அறிஞரான போப் அவர்களையும், குண்டர்ட், கிட்டல், ஸ்டென்கோனு வ், க்ரியர்ஸன் இவர்களையும், பின்னும் தனித்தனியே அந்தத் அந்தத் திராவிட மொழிகளின் இலக்கணத்தை எழுதியவர்களையும் குறிப்பிட வேண்டும். அதற்குப் பின் வந்தவர்களில் ஜூலியன் வின்ஸன், ஜூல்ஸ் ப்ளாக், கே.வி. சுப்பையா, எல். வி. ராமசாமி ஐயர் இவர்கள் முக்கியமானவர்கள். ராமசாமி ஐயர் அகால மரணம் அடைந்தது திராவிட மொழி ஆராய்ச்சிக்கே பெரிய நஷ்டமாகும். சமீப காலத்தில் இந்தமாதிரி ஆராய்ச்சியின் பயனுக, இதுவரை அறிந்திராத சில திராவிட மொழிகள், பேச்சு வகைகள் இவைகளைக் கண்டு பிடித்திருக்கிருர்கள்; அரிதாகப் பயின்றுவரும் இந்தமாதிரி பேச்சு வகை பற்றிய விரிவான தகவல்களும் வெளியாகியிருக்கின்றன. இவைகளைக் கூர்ந்து கவனித்தால், திராவிடக் குடும்பத்தில் புதிய இனங்கள் இருப்பது தெரியும். இந்த இனமொழிகளைப்பற்றியும் அறிந்தால்தான் மொத்தத்தில் திராவிடம் எப்படி வளர்ந்தது என்பது தெளிவாகத் தெரியும். இப்போது இந்தத் துறையில் பல முக்கிய ஐரோப்பிய, அமெரிக்க அறிஞர்கள் ஈடுபட்டுச் சிறந்த முறையில் ஆராய்ச்சி செய்து வருகிருர்கள். இந்தியாவிலும் இதேமாதிரி திராவிட மொழி ஆராய்ச்சியில் இளம் புலவர்கள் சிலர் ஈடுபட்டு வருகிருர்கள். முறையாக இந்த ஆராய்ச்சி நடைபெற்றுச் சிறந்தோங்கும் என்று எதிர்பார்க்கிருேம். சென்னை, திருவனந்தபுரம், அண்ணுமலைநகர், திருப்பதி, வால்டேர், மைசூர் இவை போன்ற இடங்களில் திராவிட மொழி ஆராய்ச்சி நிலையங்களைத் துவங்கியிருக்கிருர்கள். அடுத்த சில ஆண்டுகளில் இந்தத் துறைபற்றிய ஆராய்ச்சி சிறப்புற்று விளங்குவதைக் காணலாம்.

எது பெருமை?

சிறந்த பிரெஞ்சு நூலாசிரியர் ஒருவரிடம் அவருடைய நண்பர்கள் வந்து, "தோழரே, நம் நாட்டு அக்காடமியில் உங்களை ஓர் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளும்படி நாங்கள் பிரேரணை செய்ய விரும்புகிருேம். அதற்கு உங்கள் அனுமதி வேண்டும்" என்ருர்கள்.

"கூடவே கூடாது: அக்காடமியில் நான் ஓர் அங்கத்தினன் ஆகிவிட்டால், எவனுவது ஒரு பயல், 'இவனை எதற்காகச் சேர்த்துக்கொண்டார்கள்?' என்பான்; அந்தப் பேச்சைக் கேட்பதைவிட, 'இவனை ஏன் சேர்த்துக்கொள்ளவில்லை?' என்ற பேச்சைக் கேட்பதே நல்லது" என்று சொல்லி ஆசிரியர் மறுத்துவிட்டார்.

—'பேஜெண்ட்'

ஒவ்வொருவரும் செய்வது

ஒவ்வொருவரும் உலகத்தைச் சீர்திருத்த எண்ணுகிருர்கள்; எவரும் தம்மைச் சீர்திருத்திக் கொள்வது பற்றி எண்ணுவதேயில்லை. —டால்ஸ்டாய்

கார்த்திகை மாதத்தில்தான் எத்தனை
எத்தனை விதமான விரதாதி பூஜைகள்!

விரதம் நிறைந்த மாதம்

நேதுநூரி கங்காதரம்

வருஷத்தின் ஆறு ருதுக்களுள் வசந்த ருதுவை அரசன் என்று சொல்லுவது வழக்கம். ஆராய்ந்து பார்த்தால் சரத் ருதுவையே ருதுக்களின் அரசனாகச் சொல்லலாம். பால் போன்ற நிலவும், சந்தனத்தைப் போன்ற குளுமையும் தந்து இயற்கையின் சோபையைப் பன்மடங்கு எடுத்துக் காட்டுகிறது, இந்த ருது. இதில் முதல் பகுதியான ஐப்பசியில் (சாந்திரமானப்படி) 'தேவீ நவ ராத்திரி' தொடங்குகிறது. அப்புறம் தோசை நோன்பு, நிதனத் திரயோதசி, நரக சதுர்த்தசி, தீபாவளி ஆகியவற்றோடு ஐப்பசி மாதம் முடிவடைகிறது. கார்த்திகை சுத்தப் பிரதமையன்று கேதார கௌரி விரதம், கோவர்த்தனம் உயர்த்தல் முதலியவை தொடங்குகின்றன. அன்றுதான் கார்த்திகைத் தீபம் வைக்கத் தொடங்குகிறார்கள். பிறகு, வரிசையாய் யமத் துவிதியை, திரிலோசன கௌரீ விரதம், நாக சதுர்த்தி, நாக பஞ்சமி, கோஷ்டாஷ்டமி, விஷ்ணு ராத்திரி விரதம், கோவர்த்தன பூஜை, பீஷ்ம பஞ்சக விரதம், துளசி காஷ்ட பூஜை, நெல்லி மர வேரின் பூஜை, க்ஷீராப்தி துவாதசி, வைகுண்ட சதுர்த்தி, கார்த்திகைப் பௌர்ணமி (ஜ்வாலா தோரணம் - ஸ்கந்த தரிசனம்); சைவ நக்த விரதம், கார்த்திகைத் தீபம், கோவத்ஸ துவாதசி, கார்த்திக தாமோதர விரதம் ஆகியவை தொடர்ந்து வருகின்றன.

இவற்றுள், சிலவற்றையே நாம் கொண்டாடுகிறோம். இங்கே நாக சதுர்த்தி, நாக பஞ்சமி இரண்டையும்பற்றிச் சொல்லுகிறேன்.

கிருத்திகா நட்சத்திரத்தோடு கூடிய பூர்ணிமை வருவதால், இந்த மாதத்தைக் கார்த்திகை மாதம் என்கிறோம். கார்த்திகேயன் பிறந்த மாதம் இதுதான். இந்த மாதத்தின் எல்லா நாட்களும் விசேஷமானவையே. அதோடு அந்த நாட்கள் சிவ - விஷ்ணுப் பிரீதியானவை. அதனால், 'சிவாய விஷ்ணு ரூபாய, சிவ ரூபாய விஷ்ணவே' என்னும் பெரியோர் வாக்கை மெய்ப்பிக்கிறது இது.

இந்த மாதத்தின் கிருஷ்ண பட்சம் சரத் காலத்துடன் முடிவதோடு, விசாக நட்சத்திரத்தைக் கடைசியாகக் கொண்டது. 'விசாகாந்தானி மேகானி', 'கார்த்திகைக் கப்புறம் மழை இல்லை' என்ற பழமொழிகளின்படி இந்த மாதத்தோடு மழை நின்றுவிடும். நிர்மலமான ஆகாயமும், நிலவும், தெளிவான நீர்நிலைகளும், ஆறும்

மூலம்: பிரஜாமத (தெலுங்கு: 6-11-'57), பங்களூர்.

இனிய காட்சியையும் சுகத்தையும் கொடுக்கும். ஆறு நட்சத்திரங்கள் சேர்ந்த கிருத்திகைக் கூட்டத்தைத் தரிசித்தால் பாவம் நீங்கும் என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

கார்த்திகைச் சோம வாரங்கள் புனிதமானவை. அந்தக் கிழமைகளில் ருத்திராபிஷேகம், உபவாசம், ஒருபோது முதலிய வற்றைப் பக்தர்கள் தம் சக்திக்குத் தக்கபடி அநுஷ்டிப்பார்கள்.

கார்த்திகை மாதத்துச் சுக்கிலத்தில் நாக சதுர்த்தி வருகிறது. அன்று பெண்கள் உபவாசம் இருந்து, விளக்கு மாவு, சீளி (எள்ளுருண்டை), வடைப் பருப்பு, பானகம், பால், கோழி முட்டை முதலியவற்றைச் சேகரித்துக் கொண்டு, பாம்புப் புற்றுக்குப் போவார்கள். புற்றைச் சுற்றிலும் மெழுகிக் கோலம் இட்டு, நாகச் சிலைக்கு நைவேத்தியம் செய்து புற்றுக்குள் அந்தப் பொருள்களை இட்டு நாகராஜனைப் பிரார்த்திப்பார்கள். இப்படிப் பிரார்த்திக்கும் நாட்டுப் பாட்டு ஒன்று உண்டு:

நாகேந்திரா, பணீந்திரா,
இருட்டில் எம்மவர் நடமாடுவர்.
இடுப்பை மிதித்தால் உன்னவர்
எனகினே!
படத்தை மிதித்தால் ஓடிவிடு,
அப்பனே!
நாக சதுர்த்திக்கு நாகண்ணு!
ஸ்நானமும் ஜபமும் நாகண்ணு!
பூவும் படமும் நாகண்ணு!
மடியுடையோடு நாகண்ணு!
சீளி, மாவிளக்கு நாகண்ணு!
பாலும் பழமும் நாகண்ணு!
தீவட்டி ஒளியில் நாகண்ணு!
பட்டினியோடு நாகண்ணு!
ஊர்வலம் செய்து நாகண்ணு!
புற்றுக்கு வருவோம் நாகண்ணு!
பூஜையை ஏற்பாய் நாகண்ணு!

என்று பக்தியோடு பாடுவார்கள். விளக்கு மட்டும் ஏற்ற மாட்டார்கள். உஷ்ணமான பொருள்கள் நாகண்ணுவுக்கு உபயோகப்பட மாட்டா. 'நாகண்ணுவின் பிரசாதம் பெண்களின் கர்ப்பத்துக்கு நன்மை செய்யும்; நல்ல குழந்தைகளைக் கொடுக்கும்' என்ற நம்பிக்கையோடு நம்மவர் இந்த விரதத்தை அநுஷ்டிக்கிருர்கள். ஆந்திரத்தில் கார்த்திகைச் சுக்கில சதுர்த்தியில் நடக்கும் இந்த விரதத்தைத் தெலிங்காணவில் ஆவணி மாதத்துச் சுக்கில சதுர்த்தியிலும் பஞ்சமியிலும் கொண்டாடுகிருர்கள்.

'கார்த்திகைச் சுக்கில சதுர்த்தியன்று மகாவிஷ்ணு தூக்கத்திலிருந்து எழுந்திருப்பார். உத்தான ஏகாதசியை நெருங்கியிருப்பதால், இது புனிதமான சதுர்த்தி. அன்று முதல் ஜோதிர் மண்டலத்தில் அனந்த சயன வடிவம் நட்சத்திர ரூபத்தில் தெரியும்' என்று பெரியோர் சொல்லுவார்கள்,

சதுர்த்தி ஆன மறுநாள் பஞ்சமி. இதை 'ஸர்ப்ப பூஜாதினம்' என்பார்கள். பெண்கள் பாம்பு போன்ற உருவங்கள் போட்ட ஆடையை உடுத்து, நாகர்களைப் பூஜை செய்வார்கள். அப்போது இந்தப் பாட்டையும் கூடவே பாடுவார்கள்:

என் மாமி பூஜித்த நாகேந்திரா!
அவர் மாமி பூஜித்த நாகேந்திரா!
நானும் வணங்கும் நாகேந்திரா!
உன்னைப் பூஜித்தோம்;
தொழுதோமே!
வேண்டும் வரந்தா, நாகேந்திரா!

பேசும் யந்திரம்

பேசும் யந்திரத்தை முதல்முதலாகக் கண்டு பிடித்தவர் எடிஸன் என்று சொல்லுகிருர்கள். இது தவறு. நிறுத்திவிடக் கூடிய பேசும் யந்திரத்தைத் தான் அவர் முதல்முதலாகக் கண்டுபிடித்தார்.

—ரஸ்ஸல் நியூபோல்டு, 'அமெரிக்கன் மெர்க்யுரி'.

கம்யூனிஸ்ட் ராம்தூன்

விநோபா பாவே

தெலிங்கானுவில் கம்யூனிஸ்டுகள் தீவிர ஹிம்சை வழியைக் கடைப்பிடித்தபோது, விநோபாஜியின் பூதான இயக்கம் தோன்றியது. அவர் சமீபத்தில் கேரளத்தில் பிரவேசித்தார்; அங்கே ஜனநாயக ரீதியில் தேர்தலில் வெற்றி பெற்ற கம்யூனிஸ்ட் சர்க்கார் ஆட்சி புரிகிறது. இதுபற்றிக் கொடுவள்ளி என்ற இடத்தில் 15-8-'57-இல் அவர் செய்தது இந்தப் பிரசங்கம்.

அகில உலகத்தின் கவனத்தையும் தன் பக்கம் இழுத்துக் கொண்டிருக்கிறது கேரள நாடு. கேரளத்தில் செய்துவரும் பூதான யாத்திரையின் பயனுக, நான் கேரள மக்களோடு நெருங்கிப் பழகும் ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. கேரளத்து மக்கள் கூர்த்த மதியும் குறைவற்ற அன்பும் கொண்டவர்களாக இருப்பதை என் அநுபவத்திலிருந்து காண்கிறேன். அகில உலக ரீதியில் பரந்த மனப்பான்மையும், இன்றைய உலகத்தின் பிரச்னைகள், நிலை மாற்றங்கள் ஆகியவைகளைப் புரிந்துகொள்ளும் ஆற்றலும் அவர்களுக்கு உண்டு. ரோம் சாம்ராஜ்யம் நிலை பெற்றிருந்த காலத்திலிருந்தே கேரளத்து மக்கள் உலகின் பல பாகங்களிலுமுள்ள மக்களோடு உறவுகொண் டிருந்திருக்கிருர்கள்.

இன்று அனைத்திலும் முக்கியமான பிரச்னை 'உலக சமாதானம்' தான். சமாதானத்துக்காகப் படைப் பலத்தையும் பலாத்காரத்தையும் நம்பி வந்த நாடுகள் பலவும், இன்று ரத்தம் சிந்துவதிலிருந்தும் அழிவிலிருந்தும் தங்களையும் உலகத்தையும் காப்பதற்கான வழிகளைப்பற்றிச் சிந்திக்க ஆரம்பித்திருக்கின்றன. இந்த மாற்றம் ஒரு பெரிய சாதனையே அல்லவா?

அடுத்து முன்னேறுவதற்கான வழியிலே தடை எதுவும் இல்லாது தலைவாசல் கதவு திறந்திருக்கிறது. கேரள தேசம் உலகுக்குத் தலைமையாக நின்று வழி காட்ட வேண்டும். இப்போது கேரளத்தில் அரசியல் சட்டத்தின் அமைப்புக்கேற்ற முறையில் மக்களே தேர்ந்தெடுத்த கம்யூனிஸ்டுகளின் ஆட்சி நடைபெறுகிறது. இது இந்தியாவுக்கு மட்டுமல்ல; உலகத்துக்கே ஒரு புதுமை! பொதுத் தேர்தலில் சாத்துவிக முறைகளைக் கையாண்டு பொது மக்களின் பெருவாரியான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்ற கம்யூனிஸ்ட் பிரதிநிதிகள் ஆட்சி செய்கிருர்கள். உலகத்தில் இந்த மாதிரியான ஒரு நிகழ்ச்சி, கம்யூனிஸ்டுகளின் சரித்திரத்தில் இதுவரையில் நிகழ்ந்ததே இல்லை. பலாத்காரத்தினுலும் ரத்தப் புரட்சியாலுமே மற்ற இடங்களில் ஏற்படக்கூடிய ஒரு மாறுதல், இங்கே இந்தியாவில் கேரளத்தில் அரசியல் முறையைப் பின்பற்றி நடைபெற்றிருக்கிறது.

பாரத நாட்டுக்குத் தனிப் பண்பு ஒன்று உண்டு. வெளியிலிருந்து வரும் எந்தத் தத்துவத்தையும் அது மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு, அதைத் தன் மரபுக்கும் கலாசாரத்துக்கும் ஏற்ற வகையில் மாற்றி அமைத்துப்

மூலம்; சர்வோதயம் (தமிழ்) நவம்பர் '57), தஞ்சாவூர்.

பயன்படுத்திக்கொள்ளும். சரித்திரமே இதற்குச் சான்று பகரும். உதாரணமாக, மேல் நாட்டின் 'சமதர்மக் கொள்கை' - ஸோஷலிஸம் - இந்திய மண்ணிலே கால் வைத்ததும், இந்தியாவின் ஆத்மிகத் தன்மைக்கேற்ற மாறுதலுக்கு உள்ளாயிற்று. இந்திய ஸோஷலிஸம் அண்ணல் காந்தியின் அஹிம்ஸா தர்மத்தின் அடிப்படையிலே தோய்ந்து மலர்ந்தது.

பிறர் படும் துன்பத்தைக் காணும்போது, யாருக்குமே மனம் உருகுவது இயற்கை; என்ருலும், அந்த வேகத்தில் - உணர்ச்சி வசத்தில்-பொறுமை இழந்து உடனே நிவாரணம் தேடியாக வேண்டும் என்று துடிதுடிக்கும்போது, 'ஹிம்சை' திடீரென்று நுழைந்துவிடுகிறது. இந்த வகையில் பதற்றத்தைக் கைவிடுவது நலம். நான் ஹைதராபாதில் இருந்தபோது, ஒரு சமயம் சில கம்யூனிஸ்ட் தோழர்கள் மக்களோடு சேர்ந்து 'ராம் தூன்' பஜனையில் ஈடுபட்டிருப்பதைப் பார்த்து, ''ராம் தூன் பாடுவதிலே உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?'' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், ''ராமனிடத்தில் உள்ள பக்தியல்ல இதற்குக் காரணம்; எங்களையும் தங்களோடு சேர்த்துப் பாட வைத்தார்களே மக்கள், அவர்களிடம் எங்களுக்கு இருக்கும் நம்பிக்கைதான்!'' என்று பதில் சொன்ஞர்கள்.

இந்தியக் கம்யூனிஸ்டுகள் எதையும் கைப்பற்றும் விஷயத்தில் சாத்துவிகமான 'மனமாற்றம்' என்ற தத்துவத்திலே நம்பிக்கை வைப்பவர்கள் என்று நம்புகிறேன். இல்லாவிட்டால், கேரளக் கம்யூனிஸ்டுகள் எப்படிச் சமாதான வழிகளை ஏற்றுக்கொண்டிருக்க முடியும்? அரசியல் சட்டங்கள் அனைத்தும் மக்கள் ஏற்படுத்தியவையே; அவை ஒன்றும் பிரம்ம வித்தையல்ல. காலத்தின் தேவை ஏற்படும்போது அவையும் மாறுதல்களுக்கு உள்ளாக வேண்டியவையே. இந்தியா புதிய தத்துவங்களைத் தன் ஆத்மிக பலத்தினுல், தன் மரபுக்கு ஏற்ற வகையில் பயன் படுத்திக்கொள்ளும் தன்மை உடையது. ஆகவே, கம்யூனிஸம் 'அஹிம்ஸா கம்யூனிஸ'மாக உருவெடுக்கும் என்று நான் நம்புகிறேன். நில சம்பந்தமான பிரச்னைகள் பலவும் கேரளத்தில் சுமுகமாகத் தீரும் - தீர வேண்டும்- என்று ஆசைப்படுகிறேன்.

எது கமிட்டி?

மூன்று அங்கத்தினரைக் கொண்டிருக்கவேண்டும்; அதில் இரண்டு பேர் ஆஜராகாதிருக்கவேண்டும்- இதுதான் கமிட்டி.

—ஸர் ஹெர்பெர்ட் பீர்பாம்ட்ரீ

விசித்திர உத்தரவு

ஜெர்மனியில் டைஃபாயிட் கொள்ளை நோய் ஒரு சமயம் மிகவும் கடுமையாயிருந்தது. அசுத்தத் தண்ணீர்தான் அதன் காரணம். தண்ணீரை மிகவும் தூய்மைப்படுத்தி உபயோகிக்கவேண்டும் என்று ஸோல்ஜர்களுக்கு அமெரிக்க ராணுவ அதிகாரிகள் வெகு கண்டிப்பான உத்தரவு போட்டார்கள். ஓர் உத்தரவு இது: ''ஐஸ் கட்டிகளை உபயோகிப்பதற்கு முன் நன்ருய்க் கொதிக்க வைத்துவிட வேண்டும்.''

—டபிள்யு: இ: லோரீ

பிசாசு ஜோஸ்யர்

மூலம்: ஆனந்தா :: தமிழ்: பாமா சிவராம்

மல்லிகேஹள்ளியில் கிருஷ்ண ஜோஸ்யரின் அந்தஸ்து மிக உயர்ந்திருந்தது. அங்கே அவர்தான் ஹிட்லர், முசோலினி, காந்தி, நேரு எல்லாம்; மல்லிகே ஹள்ளியின் சூத்திரதாரியே அவர் தான்.

கிருஷ்ண ஜோஸ்யர் தம் பெயரை நிலைநாட்டும் தொழிலிலேதான் ஈடுபட்டிருந்தார். அது அவருடைய பரம்பரைத் தொழில். இதோடு அவரே புதிதாக ஒரு தொழிலையும் கற்றிருந்தார். அதுதான் பேய் பிசாசு முதலியவைகளை ஓட்டும் மந்திர வித்தை. வரவரப் பரம்பரைத் தொழிலைக் காட்டிலும் புதிதாகக் கற்ற தொழிலே வளர்ந்து புகழ் அடைய ஆரம்பித்தது. ஒன்றிரண்டு வருஷங்களுக்குள், மல்லிகே ஹள்ளியின் சுற்றுப்புறங்களிலிருந்த பத்துப் பதினைந்து கிராமங்களிலும் அது பரவிவிட்டது. எங்கே பேய் பிசாசு பிடித்திருக்கிறதோ அங்கே சென்று அந்தப் பேய் பிசாசைப் பிடித்தவர்களிடமிருந்து கிளப்பி, மந்திரித்த தேங்காய்களில் ஆவிர்ப்பவிக்கச்செய்து, அந்தத் தேங்காய்களை மல்லிகே ஹள்ளியின் ஏரிகரையில் இருக்கும் பழைய புளிய மரத்தில் சிறை வைப்பதுதான் இவர் வேலை. அதற்காக இவருக்குக் கிடைத்து வந்த சம்மானம் அந்தப் பேய் பிசாசுத் தொல்லையின் தீவிரம், தொல்லைக்குள்ளானவர்களின் பொருளாதார நிலை இந்த இரண்டையும் பொறுத்தது. சிறிது காலத்துக்குள்ளாகவே பேய்களின் 'சென்ட்ரல் ஜெயில்' போன்ற அந்தப் பழைய புளிய மரத்தில் இலைகளைக் காட்டிலும், ஜோஸ்யர் புதிதாகச் சிறைப் பிடித்துக்கொண்டு வந்து சேர்த்திருந்த 'கைதிப் பேய்'களின் எண்ணிக்கையே அதிகரித்து விட்டது. இப்படிப் பூதபயங்கரரான ஜோஸ்யரை யாரோ 'பிசாசு ஜோஸ்யர்' என்று குறிப்பிட, அதுவே அவர் பெயராக நிலைத்து விட்டது. அவரும் பெயருக்கேற்றபடியே இருந்தார். நல்ல வாட்டசாட்டமான உருவம்; கறுப்பு நிறத்துக்கு இருப்பிடம். பேய் ஓட்ட ஓயாமல் மந்திரம் சொல்லிச் சொல்லி அவருடைய தொண்டையில் கரகரத்த சப்தம் ஒன்று தொனித்துக்கொண்டிருந்தது!

ஜோஸ்யரின் உள்ளத்தில் பேய் பிசாசுகள் விஷயத்தில் இயல்பாகவே ஒரு விதமான பரிவும் பாசமும் ஏற்பட்டிருந்தன. அவர் இதுவரைக்கும் சம்பாதித்த சுமார் ஐயாயிரம் ரூபாயில், நாலாயிரமாவது அவைகளின் தயவால் வந்தவை. அப்படியிருக்க, அவற்றின்மேல் பாசம் ஏற்படாமல் இருக்குமா?

பிறருக்குப் பிடித்திருக்கும் பேய் பிசாசுகளை ஓட்டிப் பணம் திரட்டும் மும்முரத்தில் ஜோஸ்யர் தம்மையே மறந்திருந்தார். சர்வ பூத பைசாசங்களுக்கும் பாசக் கயிறுகக் காட்சியளித்த ஜோஸ்யர் தம் நெஞ்சில் வேறொரு பேய்க்கு இடம் அளித்துவிட்டார். அதுதான் பணப் பேய்! பணத்தின் ருசி அறிந்த அவருடைய பண வேட்கை உப்பு மிக்க உணவை உட்கொண்டவனின் தாகம் போல ஓயாமல் வாட்டத் தொடங்கியது. தம் உடலோடு ஒட்டிவிட்ட பணப் பேயின் அகோரப் பசியைப் போக்க, மிகச் சிறிய அளவில் கிடைத்து வந்த அற்ப ஸம்மானங்கள் எந்த மூலைக்கு? யாரோ அதிருஷ்டக்காரர்களுக்குப் பூமிக் கடியில் புதையல் கிடைத்ததாம்,

நகை நட்டுக்கள் கிடைத்தனவாம், பொற்குவியல் அகப்பட்டதாம் என்னும் கதைகளை அவர் சிறுவயசு முதற்கொண்டே கேட்டிருந்தார். அப்போது அதுபற்றிய அபிப்பிராயம் எதுவா யிருந்தாலும், இப்போது அந்தக் கதைகளில் அவருக்குத் தனியான ஒரு நம்பிக்கை ஏற்பட் டிருந்தது. புதிதாக யாராவது அத்தகைய கதைகள் சொன்னுல் மிகுந்த ஊக்கத்துடன் கேட்பார். 'ஆம், ஏன் இருக்கக்கூடாது? கஞ்சர்களான பணக்காரர்கள் பூமிக் கடியில் பணத்தைப் புதைத்து வைப்பதொன்றும் அதிசயமல்ல. அப்படிப்பட்ட பணம் தனயோகம் இருக்கும் புண்ணியவான்களுக்குக் கிடைக்கலாம். நமக்கும் அப்படிப் பட்ட பெரிய புதையல் ஒன்று கிடைத்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்!' என்று மனத்திலேயே மிட்டாய் சுவைத்துக் கொண் டிருந்தார். ஆனுல் பூமிக்கடியில் புதைத்திருக்கும் பணம் வெறும் கண்களுக்குப் புலப்படாது. மை வைத்துப் பார்க்க வேண்டும். மை வைத்துப் பார்க்கும் வித்தை ஜோஸ்யர் அறியாத ஒன்று. ஆகவே, முதலில் அதைக் கற்றுக் கொள்ள நிச்சயித்தார். ஒன்றிரண்டு மாதம் தேச யாத்திரை செய்து வருவதாக மனைவியிடம் கூறி, ஒரு நல்ல நாளில் மல்லிகேஹள்ளியிலிருந்து ஜோஸ்யர் புறப்பட்டார். இரண்டே மாதத்தில் திரும்புவதாகச் சொல்லிச் சென்றவர், மாதம் மூன்ருன பின்னும் திரும்பவில்லை. நாலைந்து மாதம் சென்றும் ஜோஸ்யரைப்பற்றிய தகவலே இல்லை. ஆருவது மாதம் மலையாளத்தின் ஏதோ ஓர் ஊரிலிருந்து ஜோஸ்யரின் மனைவிக்கு ஒரு கடிதம் வந்தது. அவர் சௌக்கியமாக இருப்பதாகவும், இன்னும் பதினைந்து நாளில் ஊர் திரும்புவதாகவும் அதில் எழுதியிருந்தார். அப்படியே பதினைந்து நாள் கழித்து ஊர் வந்து சேர்ந்தார்.

ஊரை விட்டுப் புறப்பட்ட ஜோஸ்யர் நேராக மலையாளம் போனுராம். அங்கே ஒரே மாதத்துக்குள் ஒரு மாந்திரிகனின் சிநேகத்தைப் பெற்ருராம். கையில் கொண்டு சென்ற ஐந்நூறு ரூபாயில் முந்நூற்றைச் செலவழித்து மை தயாரிக்கும் முறை, உபயோகிக்கும் வகை, சம்பந்தப்பட்ட மந்திர தந்திரங்கள் எல்லாம் கற்று அங்கேயே ஒன்றிரண்டு இடத்தில் அவற்றைப் பரீட்சையும் செய்தாராம். திருப்தி ஏற்பட்டது; ஊருக்கு வந்துவிட்டார்.

மல்லிகேஹள்ளியிலிருந்து ஹொன்னவள்ளிக்கு எட்டு மைல் தூரம் மாட்டு வண்டிகளும் மனிதர்களும் ஓயாமல் நடமாடியதால் ஏற்பட்ட பாதையைத் தவிர, ஒழுங்கான ரஸ்தா ஏதும் இடையிலே இல்லை. மல்லிகேஹள்ளியிலிருந்து அந்தப் பாதையில் நாலாவது மைலுக்கருகில் ஒரு நடைப் பாதை பிரிந்து, வலது பக்கம் சுமார் ஒரு மைல் தூரத்திலிருந்த தோப்பை அடைந்தது. தோப்பு விசாலமானது. சுமார் இருநூறு மரங்கள் இருக்கலாம். தோப்புக்கு அந்த வட்டாரத்தில் 'பாளையக்காரன் தோப்பு' என்று பெயர். முன் காலத்தில் பாளையக்காரர்கள் ஆட்சி ஓங்கியிருந்தபோது அங்கே அருகில் ஓர் ஊர் இருந்ததாம். புகழ் வாய்ந்த பாளையக்காரன் ஒருவன் அதில் ஆட்சி செலுத்தினுனும். இப்போதும் தோப்பின் ஓரத்தில் சிறு சிறு மண்மேடுகள் பல உண்டு.

பாளையக்காரன்தோப்பைப்பற்றியும், அருகிலே பாழடைந்த ஊரைப்பற்றியும் வெகு நாளாக ஜோஸ்யர் மனத்தில் எத்தனை எத்தனையோ ஊகங்கள் செய்து கொண் டிருந்தார். ஒரு பாளையக்காரனின் சொத்துக்களை அக்கம் பக்கத்தில் அரசு புரிந்த பிற பாளையக்காரர்கள் சூறையாடிவிடுவார்கள். இந்த அபாயத்திலிருந்து சொத்தைக் காப்பாற்ற ரகசியமாகப் பூமிக்கடியில் குழி தோண்டிப் பதுக்கி வைப்பது முன் காலத்தில் வழக்கம். எனவே, அந்த இடத்தில் புதையல் இருந்தே தீர வேண்டுமென்ற திட நம்பிக்கை ஜோஸ்யருக்கு உண்டாயிற்று.

ஆனுல் அவ்வளவு விசாலமான இடத்தில் எங்கே புதையல் இருக்கிறதென்று எப்படி அறிய முடியும்?

எல்லா இடத்தையும் தோண்டிப் பார்ப்பது என்பது முடிகிற வேலையா? இதனுலே தான் ஜோஸ்யர் பணம் செலவழித்து மை வைத்துப் பார்க்கும் முறையைக் கற்றுக்கொண்டார்.

ஊருக்குத் திரும்பிய பிறகு ஒரு நாள் மை தயாரித்தார். அதை யார் மேல் பூசுவது? அநாதையான ஒரு மாட்டுக்காரச் சிறுவனைப் பிடித்தார். அவனுக்கு மிட்டாய் கொடுத்து, ஆசை காட்டினுர்; விஷயத்தை ரகசியமாக வைத்திருக்க வேண்டுமென்று அவனிடம் சத்தியம் வாங்கிக் கொண்டார். ஒரு நாளிரவு அவன் கண்ணில் மையைப் பூசினுர். மை பலித்தது. தோப்பின் அருகில் இருக்கும் பாழடைந்த இடத்தில் ஒரு பாருங்கல் இருப்பதாகவும், அதற்கு வெகு சமீபத்திலேயே ஒரு புற்று இருப்பதாகவும், புற்றின் வடக்கே முப்பது அடி தூரத்தில் இருக்கும் ஒரு சிறிய மண் மேட்டின்கீழே ஒரு பெரிய புதையல் அடைந்து கிடப்பதாகவும் அவன் மூலம் ஜோஸ்யர் அறிந்துகொண்டார்.

அவர் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. 'இனிப் புதையல் கிடைத்த மாதிரியேதான்' என்று அகமகிழ்ந்தார். மறு நாள் காலையில் சீக்கிரமே எழுந்து, பாளையக்காரன் தோப்பை நோக்கிப் புறப்பட்டார். ஹொன்னவள்ளி ரஸ்தாவில் பாதை பிரியும் இடத்தில் எதிரே வந்துகொண்டிருந்த சிலர், ''என்ன சாமி, இம்மாங் காலையிலே..?'' என்று கேட்டார்கள். ''ஒண்ணுமில்லே, அவசரமாகத் தர்ப்பை வேண்டியிருந்தது. தேடிக் கொண்டு புறப்பட்டேன். அவ்வளவுதான்'' என்று சொல்லிக் கொண்டே ஜோஸ்யர் விரைந்தார். சிறிது நேரத்தில் பாளையக்காரன் தோப்புக்குள் புகுந்தார். அதை அடுத்திருந்த பாழும் பிரதேசத்தை அடைந்தார். ஒரு முறை தம் கழுகுக் கண்ணுல் அந்தப் பிரதேசம் முழுவதையும் துழாவினுர். பாருங்கல்லும், மண் மேடும், புற்றும் ஏராளமாக மண்டிக் கிடந்தன. அவருக்கு வேண்டியது ஒரு பாருங்கல்லுக்கு அருகில் அமைந்த புற்றுக்கு முப்பது அடி தூரத்திலிருக்கும் ஒரு மண் மேடுதானே! சிறிது நேரம் அலைவதற்குள் அவருடைய கண்ணுக்கு ஒரு பாருங்கல், அதற்குச் சமீபத்தில் ஒரு புற்று, அதிலிருந்து முப்பது கஜ தூரத்தில் ஒரு சிறிய மண் மேடு எல்லாம் புலப்பட்டன. ஜோஸ்யர் மனத்தில் மகிழ்ச்சி அலைகள் எழுந்தன. பூரிப்பு மேலிட்டவராய் லட்சுமி ஸ்தோத்திரம் ஜபித்தார். சிறிது நேரம் பொறுத்துத் தோப்பின் ஓரத்தில் இருந்த பெரிய ஆல மரத்தை அடையாளமாக வைத்துக்கொண்டு, அதன் அடியிலிருந்து பாருங்கல் எந்தத் திசையில் எவ்வளவு தூரத்தில் அமைந்திருக்கிறதென்பதை நன்ருக மனத்தில் பதிய வைத்துக்கொண்டு வீடு திரும்பினுர்.

இனிமேல் செய்யவேண்டியது அந்த மண் மேட்டைத் தகர்த்துத் தோண்ட வேண்டியதுதான். அதில் என்ன இருக்கிறதோ - பணமோ, இல்லை, முத்து மாணிக்கமோ - எதுவாக இருந்தாலும் சரி; அவைகளை அப்படியே சாக்குகளில் அள்ளித் திணித்துக் கொண்டு வர வேண்டியதுதான். ஆனுல் நிலத்தைக் கொத்தும் வேலை ஜோஸ்யரின் பரம்பரைத் தொழில் அல்லவே! ஓர் ஆள் உயரம் இருந்தது அந்த மேடு; ரேகை, குறி சொல்லி, வயிற்றை வளர்த்திருந்த ஜோஸ்யர் கைக்கா அது பணியும்?

மல்லிகேஹள்ளியிலேயே வசித்து வந்த போயி ஒருவனைத் தம் கையாளாகச் சேர்த்துக் கொண்டார். அவன் பெயர் ஹநுமா போயி. இளம் பருவத்தினன். பார்ப்பதற்குப் பீமன் போல் தோற்றம் அளித்தான். ஜோஸ்யர் ரகசியமாக எல்லா விஷயத்தையும் அவனிடம் அறிவித்து, கிடைக்கும் புதையலில் அவனுக்கும் ஒரு சிறு பங்கு கொடுப்பதாக வாக்களித்து,

மேட்டைத் தோண்டச் சொன்னுர். விஷயம் மிகவும் ரகசியமாக இருக்கவேண்டு மென்று வலியுறுத்தி, மாரியம்மன்மேல் ஆணையிடச் செய்தார். இப்படியெல்லாம் ஒழுங்காக ஏற்பாடுகள் செய்துகொண்ட பிறகு, வேளை நோக்கிக் காத்திருந்தார். ஜாதக ரீதியாக அவருடைய நாற்பத்தாருவது வயசில் தனலாபம் கிடைக்க வேண்டும். இன்னும் ஒரு மாதம் எட்டு நாளில் அவருக்கு நாற்பத்தைந்தாண்டு நிறைந்துவிடும். தனயோகம் இல்லாதவன் பொன்னையே தொட்டாலும் அது மண்ணுகிவிடு மென்பது அவர் சித்தாந்தம். அதனுலேதான் அவர் தனயோக வேளை வரட்டும் என்று காத்திருந்தார். ஒரு மாதமும் எட்டு நாளும் நகர்ந்தன. ஜோஸ்யர் தம் நாற்பத்தாருவது பிறந்த நாளை வெகு உற்சாகத்தோடு கொண்டாடினுர். அது முடிந்த மூன்றுவது நாள் பஞ்சாங்கத்தைப் புரட்டிப் பார்த்து, தனலட்சுமியை வசப்படுத்த, அமாவாசை நள்ளிரவில் ஒரு முகூர்த்தத்தைத் தேர்ந்தெடுத்தார்.

அமாவாசையும் வந்தது. ஜோஸ்யர் அன்று பகல் பொழுதெல்லாம் லட்சுமி ஸ்தோத்திரம் செய்வதிலேயே கழித்தார். மாலை நேரம் நெருங்கிக்கொண் டிருந்த போதே பூஜைக்கு வேண்டிய பண்டங்களையெல்லாம் எடுத்து வைத்துக் கொண்டார். பணம் என்றுல் லேசுப்பட்டதா? சாட்சாத் லட்சுமி சொரூபமே அல்லவா? கைப் பிடித்த மனைவியே வசப்படுவது ஒவ்வொரு சமயம் பெரும் பாடாகி விடுகிறதே! அப்படியிருக்க, சஞ்சல புத்தி படைத்த லட்சுமி, பூஜையில்லாமல் வசப்பட்டு விடுவாளா என்ன?

இரவு சுமார் பத்து மணிக்கு ஹநுமா போயி வந்தான்; தோப்பில் மண் வெட்டி, கடப்பாரை எல்லாம் வைத்துவிட்டதாக அறிவித்தான். ஜோஸ்யர், ''சரி, நீ முன்னுலே போய் ஹொன்ன ஹள்ளி பாதை யிருக்கும் அரச மரத்தடியில் காத்திரு. நொடியில் நானும் வந்து விடுகிறேன்'' என்று சொல்லியனுப்பினுர்.

பத்து நிமிஷத்தில் ஜோஸ்யர் கட்கத்தில் ஒரு மூட்டையை இடுக்கியவராய், வாயில் ஏதோ மந்திரத்தை முணுமுணுத்துக் கொண்டே வீட்டை விட்டுக் கிளம்பினுர். வெளியில் அமாவாசை இருட்டு, கப்பிக் கிடந்தது. கிராமத்தில் அநேகம் வீடுகளில் விளக்கை அணைத்துப் படுத்து விட்டார்கள். இரவு அமைதியில் துயின்றுகொண் டிருந்தது. இருட்டில் புகுந்த கறுப்புப் பூனை போல், ஜோஸ்யர் இரவின் கருமையில் மறைந்தார். சிறிது நேரத்தில் அரச மரத்தடிக்கு வந்தார். அங்கே இவர் வரவு நோக்கிக் காத்திருந்த போயியுடன் 'பாளையக்காரன் தோப்பு' நோக்கிப் புறப்பட்டார்.

'புதையல் என்னவோ கிடைத்து விடும்; கிடைத்தாற்போலத்தான்! போயிக்குக் கொடுக்க வேண்டுமே! எவ்வளவு கொடுப்பது?... அவன் ஒரு மடையன்...அவன் தலையைத் தடவுவது ஒரு பெரிய காரியமா. .! ...பீரனஹள்ளிக்கு அருகில் இருக்கும் பத்து ஏக்கர் நிலத்தை முதலில் வாங்கிப் போட்டு விட வேண்டும்...சின்னக்குட்டி கலியாணம்....' என்று என்னவெல்லாமோ கற்பனையுடன் மிட்டாய் சுவைத்துக்கொண்டே ஜோஸ்யர் நடந்தார்; அவரைப் பின்பற்றிச் சென்றுன் போயி. இருவரும் தோப்புக்குள் புகுந்தார்கள். தான் அங்கே வைத்திருந்த கடப்பாரை, மண்வெட்டி முதலியவற்றைப் போயி கையில் எடுத்துக்கொண்டான். ஜோஸ்யர் முந்தியே அடையாளம் இட்டிருந்த ஆல மரத்தடியை அடைந்தார். போயியை அங்கேயே இருக்கச் சொல்லி, தாம் மட்டும் தனியாக மெல்ல அடி வைத்துக்கொண்டே சிறிது தூரம் சென்றுர். பாறுங்கல் தட்டுப்பட்டது. அங்கிருந்து மண் மேட்டைக் கண்டு பிடிப்பது எளிதாக இருந்தது. மண்மேட்டின் பக்கத்தில் நின்றபடி போயியைக் கூவி அழைத்தார். போயியும் மெள்ள நடந்து வந்தான். ஜோஸ்

யர் சிறிது நேரம் வாய் பேசாமல் நின்றுகொண்டு மகிழ்ச்சிப் பெருக்கால் தம் இதயத்தில் ஏற்பட்ட கொந்தளிப்பைத் தணித்துக்கொண்டார். பிறகு மண் மேட்டுக்குப் பூஜை செய்தார். விளக்கை மட்டும் ஏற்றவில்லை. ஊதுவர்த்தியைக் கொளுத்தியே பூஜையை முடித்துக்கொண்டார். மந்திரங்கள் தங்கு தடையில்லாமல் அவர் வாயிலிருந்து பொழிந்து கொண்டிருந்தன. மண்மேட்டில் பூஜை நன்ருக நிறைவேறிய பிறகு கொத்துக் கருவிகளையெல்லாம் அந்த மேட்டின் மேல் வைக்கச் செய்து, அவைகளுக்கும் பூஜை செய்தார். இருவரும் மும்முறை மேட்டை வலம் வந்து நெடுஞ் சாண் கிடையாகக் கீழே விழுந்து கும்பிட்டார்கள். எழுந்து உடலில் படிந்திருந்த மண்ணைத் தட்டிவிட்டபடி, 'அதைத் தோண்டலாம்' என்று போயிக்கு உத்தரவிட்டார். போயி தலைப்பாகை, பனியன் முதலியவைகளைக் கழற்றி வைத்துவிட்டுக் கச்சையை இறுகக் கட்டிக்கொண்டு தோண்ட ஆரம்பித்தான். ஜோஸ்யர் அடிக்கு ஒரு தடவை கை கூப்பி வணங்கி, முணுமுணுத்து மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு அருகிலேயே பார்த்தபடி நின்றுகொண்டிருந்தார்.

அதிகாலை நேரம். மணி இரண்டரை அல்லது மூன்று இருக்கும். போயி ஓயாமல் குழி தோண்டிக் கொண்டிருந்தான். ஜோஸ்யரும் அவன் நிரப்பித் தந்துகொண்டிருந்த கூடை மண்ணைக் கொட்டும் வேலையில் ஈடுபட்டு அவனுக்கு உதவி செய்துகொண்டிருந்தார். 'புதையல் வைத்திருக்கும் பெட்டியின்மேல் கடப்பாரையின் நுனி இப்போது மோதலாம், இன்னும் சிறிது நேரத்தில் மோதிவிடும்' என்று ஜோஸ்யரின் நெஞ்சு ஆவலுடன் துடித்துக்கொண்டிருந்தது. மூன்று மணி நேரம் ஓயாமல் தோண்டியதால், அங்கே பெரியதொரு பள்ளமே ஆகிவிட்டது. அதைப்பார்த்தால் இருபது பிணங்களையாவது தாராளமாகப் புதைத்து விடலாம் போல் இருந்தது! இவ்வளவு பெருங் குழி வெட்டியும் ஒன்றும் கிடைக்காமல் போகவே, போயி சிறிது சிறிதாக மனந் தளர்ந்துகொண்டிருந்தான். அவன் கை தளர்ந்தபோதெல்லாம், ''இன்னும் சீக்கிரம் வெட்டு; வெட்டு'' என்று ஜோஸ்யர் அவனை ஊக்கப்படுத்திக்கொண்டிருந்தார். மேலும் அரை மணி நேரம் விடாமல் முயற்சி செய்த பிறகு கடப்பாரையின் நுனி ஏதோ கெட்டியான ஒரு பொருள் மீது மோதியதால், 'டாண்' என்ற ஒலி உண்டாயிற்று. ஜோஸ்யரின் உடல் புல்லரித்தது. ''போயி, புதையல்! புதையல்!'' என்று அகமகிழ்ந்து கூவினர். போயிக்கும் புதியதொரு உற்சாகம் பிறந்தது. நான்கு மணி நேரம் ஓய்வற்றுக் குழி வெட்டியதால், இற்றுவிடும்போல் இருந்த அவன் தோள்களுக்குத் தனலட்சுமி ஊக்க மூட்டினுள். பக்திப் பெருக்கால் ஜோஸ்யரின் வாயிலிருந்து மந்திரங்கள் ஆருய்ப் பாய்ந்துகொண்டிருந்தன.

போயி மண்ணை ஒரு புறமாகத் தள்ளி அந்தப் பொருளை தடவிப் பார்த்தான்: பருமனுக் கோழி முட்டை வடிவில் ஏதோ வழ வழவென்று இருந்தது! அது அம்மிக் குழவி போன்ற ஒரு கருங்கல்! போயிக்கு ஆத்திரம் பீறிட்டது. 'இதுதானு பொதையல்? யாராவது ஒரு மேஸ்திரி கிட்டே வேலெ செஞ்சிருந்தா இத்தினி நேரம் ஒரு ரூபாயானும் கெடச்சிருக்கும்' என்று மனத்துள்ளேயே பொருமினுன். உழைப்பால் அங்கங்களில் கண்ட வலி, இறுதியில் அடைந்த ஏமாற்றம் எல்லாமாகச் சேர்ந்து அவன் கோபத்திற்குத் தூபம் போட்டன. அவன் உடல் பற்றி எரிந்தது.

இதையெல்லாம் ஜோஸ்யர் மௌனமாகக் கவனித்துக்கொண்டிருந்தார். இருட்டிலே போயி முகம் அவருக்குச் சரியாகத் தெரியவில்லை. அந்தக் கணத்தில் அவர் நெஞ்சை ஒரு பயம் சூழ்ந்து கொண்டது. பணத்தாசையால் புதையலைப் போயி எடுத்துக் கொண்டு தம்மையே கொன்று

அந்தக் குழியிலே போட்டுப் புதைத்துவிட்டுப் போய் விட்டால் என்ன செய்வது என்ற எண்ணம் அவரைக் குலை நடுங்கச் செய்தது. உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முழுப் பணத்தையும் அவனுக்கே கொடுத்துவிடத் துணிந்து விட்டார். இப்பேர்ப்பட்ட நேரங்களில்தான் எண்ணங்கள் மின்னல் வேகத்தில் தோன்றி மறையுமே. போயியும் ஒன்றும் பேசாமல் இருக்கவே, அவர் பயம் பன்மடங்காயிற்று. ஏதோ கெட்ட எண்ணந்தான் அவன் மனத்தில் வட்ட மிட்டுக்கொண் டிருக்கிறது என்று நிச்சயித்தார். பயத்தால் தொண்டை வறண்டுவிட்டது.

''என்னடாப்பா, போயி! என்னப்பா, சும்மா நிக்கறியே! பொழுது விடியறத்துக்குள்ளே எல்லாத்தையும் வாரிக்கிட்டு வீட்டுக்குப் போய்ச் சேர வேண்டாமா?'' என்று ஜோஸ்யர் குழைவாகப் பேச ஆரம்பித்தார்.

போயி, ''ஆமாம், சாமீ! தூக்கிக் கிட்டுப் போற நேரந்தான்'' என்று சொல்லிக் குனிந்து அந்தக் கல்லைக் குழியிலிருந்து தூக்கி மேலே எறிந்தான்.

போயி செய்வதையே உன்னிப்பாகக் கவனித்துக்கொண் டிருந்த ஜோஸ்யர் அந்தப் பொருள் ஏதாவது கனமான பெட்டியாக இருக்குமோ என்று குனிந்து பார்த்தார். இரவின் கருமையில் அவர் கண்களுக்குச் சரியாக ஒன்றும் புலப்படவில்லை. தொட்டுப் பார்த்தார். தூக்கி வாரிப் போட்டது. 'தனலட்சுமி காலை வாரி விட்டுவிட்டாள்?' என்று எண்ணிக்கொண்டார். இப்போது அந்த மண் மேடு இருக்கும் இடத்தில் முன்காலத்தில் யாருடைய சமையல் அறையோ இருந்திருக்க வேண்டுமென்று தோன்றியது அவருக்கு.

போயி கல்லைத் தூக்கி வெளியில் எறிந்துவிட்டு, ஆசுவாசப்படுத்திக் கொண்டு மேலே வந்தான்.

வந்ததும் அந்தக் கல்லை அலாக்காக அப்படியே தூக்கி அவரை நோக்கி ஓரடி எடுத்து வைத்து, ''ஆமா, எடுத்துக்கோ ஒம் பொதையலை! நீயே தூக்கிக்கிட்டுப் போ'' என்று ஆவேசத்துடன் கத்திக்கொண்டே, அதை அவர் தலைமேல் குறி பார்த்து விட்டெறிவதற்கு இருந்தான். ஜோஸ்யர் அந்தக் கணப்பொழுதில் மாயம் செய்து மலைபோல் வந்த பேராபத்திலிருந்து தப்பினார். என்ன இருந்தாலும் ஜோஸ்யரின் மூளை பாருங்கள்! இன்னும் ஒரு கணம் அவர் தாமதித்திருந்தாலும், கல் அவர் தலைமேல் நேராக இறங்கியிருக்கும். அதற்குள் ஜோஸ்யர், ''டே போயி! தேவியடா அவள்; தேவி! சாட்சாத் மாரியம்மன்! என்ன, அவளை வெறும் கல்லென்று நெனச்சிட்டியா; உன் வம்சம் பூண்டே இல்லாமெ நசிச்சுப் போயிடும்; ஜாக்கிரதை!'' என்று உரக்கக் கூவினர்.

'மாரியம்மன்' என்றதுமே போயியின் ஆத்திரம் பனிபோல் கரைந்தது. கல்லை மெதுவாக அவன் இறக்கி வைத்தான். ஜோஸ்யரும், 'அப்பாடா, பிழைத்தேன்' என்று நிம்மதியாக மூச்சு விட்டார்.

''டே போயி, உன் வீட்டுக்கு நீயே கொள்ளி வைக்கப் பாத்தியே! என்னடா உன் புத்தி? உன் கையிலே சிக்கி இருக்கிறவ மாரியாத்தா, புரிஞ்சிக்கோ. அதுகூடத் தெரியல்லியே உனக்கு, ஹநுமா போயி. பார், மாரியாத்தாளைச் சரியாகக் கவனிக்காததாலே ஊரே விளங்காமெப் போயிருக்கு'' என்று சொல்லிக்கொண்டே, தம் மூட்டையிலிருந்த மஞ்சள் குங்குமத்தை எடுத்துத் தாராளமாக அந்தக் கல்லின்மேல் தெளித்தார். சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார். ஜோஸ்யரே இப்படிச் செய்தபின் போயி சும்மா இருக்க முடியுமா? அவனும் விழுந்து கும்பிட்டான். ஜோஸ்யரின் தந்திரத்தில், போயியின் ஏமாற்றமும் மனக் கசப்பும் இருந்த சுவடே தெரியாமல் மாயமாயின. அவன் அவர் இழுத்த இழுப்புக்கு வளைந்துகொடுத்தான். ஜோஸ்யர் மறுபடியும் போயியை நோக்கி, ''போயி, இதைமட்டும் நீ

லேசாக நினைக்காதே. இந்த மாரியாத்தா உனக்குக் கிடைத்திருக்க வேண்டிய புதையலைவிடப் பெரியவள். இன்றைக்கு உன் கையில் அகப்பட்டிருக்கிறாள். உனக்குக் கிட்டிய குலதெய்வம் என்பதைத் தெரிந்துகொள். முனியன், காட்டேறி, கறுப்பன் இவர்களுக்கெல்லாம் இவள்தான் தலைவி. இவளுடைய அருள் உன்மேல் விழுந்தால், நீ தொட்டதெல்லாம் பொன்னாகும். இவளை அலட்சியம் செய்தாயோ, ஒழிந்து போவாய். விடாதே; தேவியை எடுத்துக் கொள். நம் கிராமத்தை ரட்சிக்க ஒரு தேவி இதுவரைக்கும் இல்லை. இதை எடுத்துச் சென்று ஏரி கரைப் புளிய மரத்தடியில் பிரதிஷ்டை செய்யலாம். உனக்கு மங்களம் உண்டாகும்!'' என்றார்.

பொழுது புலர்ந்தது. போயி தலைமேல் அம்மிக் குழவியைச் சுமக்கச் செய்து, ஜோஸ்யர் ஊருக்குள் வந்தார். அவருக்கு மாரியம்மன் அகப்பட்ட நல்ல செய்தி கிராமத்தில் வெகு விரைவில் பரவியது. தம் கனவில் மாரியம்மன் தோன்றி, தான் இருக்கும் இடத்தைக் குறிப்பிட்டதாகவும், தன்னை உடனே பூமியிலிருந்து விடுவித்துப் பிரதிஷ்டை செய்து முறையோடு பூஜிக்காவிட்டால் ஊரையே புல்லுக் கட்டைப் பொசுக்குவதுபோல் பொசுக்கி விடுவதாய்க் கூறியதாகவும், அதன் படியே அந்த இடத்துக்குச் சென்று மாரியம்மனை எடுத்து வந்திருப்பதாகவும் ஜோஸ்யர் ஒரு கதையைத் திரித்துவிட்டார். ஜோஸ்யர் அப்பியிருந்த மஞ்சள் குங்குமத்தால் அந்த அம்மிக் குழவி அபூர்வமான ஒரு தெய்விக தேஜஸைப் பெற்றிருந்தது! ஜோஸ்யரின் கட்டுக் கதை அதன் சோபையை மேலும் அதிகரிக்கச் செய்தது. கிராமவாசிகள், ''அம்மா, தாயே, மாரியாத்தா'' என்று விழுந்து கும்பிட்டுப் பயபக்தியுடன் அதை வரவேற்றார்கள்.

கல் கிடைத்த மறுநாளே கிராமவாசிகள் எல்லாரும் ஒன்று கூடி அதைச் சாஸ்திரோக்தமாகப் புளிய மரத்தின் கீழே பிரதிஷ்டை செய்தார்கள். ஜோஸ்யர் கனவில் தோன்றிக் கிடைத்த காரணத்தால், அதற்கு 'ஜோஸ்யர் மாரியம்மன்' என்று பெயரிட்டுவிட்டார்கள்.

சிறிது காலத்துக்குள்ளாகவே 'ஜோஸ்யர் மாரியம்மன்' மிகவும் பிரபலம் அடைந்துவிட்டாள். எப்போதோ யார் வீட்டுச் சமையலறையிலேயோ மசாலா அரைப்பதிலேயே உடல் தேய்ந்த ஒன்றும் அறியாத அம்மிக் குழவி, ஜோஸ்யரின் அபாரமான புத்தி சாதுரியத்தினால் புதியதொரு மகிமை பெற்று மல்லிகேஹள்ளியின் புளிய மரத்தடித் தெய்வமாகத் திகழ ஆரம்பித்தது. கெட்ட செய்தி விரைவில் பரவுவதுபோல், 'அவள் உக்கிர தேவதை' என்ற புகழும் வெகு சீக்கிரம் பரவலாயிற்று.

ஒன்றிரண்டு வருஷங்களிலேயே கிராம ஜனங்கள் எல்லாரும் சந்தா சேர்த்து மாரியம்மனுக்குச் சிறிய கோயில் ஒன்றையும் கட்டுவித்தார்கள். பக்கத்திலேயே நான்கு ஏக்கர் செழிப்பான நிலமும் மான்யமாக அளித்தார்கள். வருஷத்துக்கு வருஷம் திருவிழா நடத்தவும் ஏற்பாடு செய்தார்கள். மல்லிகேஹள்ளியில் இருந்தவர்களுக்கு மட்டுமல்லாமல் சுற்றுப்புறங்களில் இருந்த கிராமங்களின் ஜனத்தொகை பூராவுக்குமே அந்த மாரியம்மன் என்றால் ஒரே பயபக்தி. இருபது வீடுகள் கொண்ட பீரனஹள்ளியில், இஸ்லாமிய மதத்தின் ஒரே வாரிசாக இருந்த புடன் சாயபுகூட, அந்த மாரியம்மன் விஷயத்தில் சிறிது அடக்கத்தோடு நடந்துகொண்டார்! இப்படியெல்லாம் இருந்தபோதிலும் ஜோஸ்யரைப் பொறுத்தமட்டும் அது அம்மிக் குழவியே தவிர வேறல்ல. அவர் என்னவோ ஆபத்திலிருந்து தம் தலையைக் காத்துக்கொள்ள, அதை 'மாரியம்மன்' என்று அழைத்தார்; மஞ்சள், குங்குமம் பூசி விழுந்து கும்பிட்டார். தம் புத்திசாதுரியத்தால் அந்த அம்மிக் குழவி இருபது கிராமங்களின் 'ருத்திர தேவதை'யாக உரு மாறுமென்று அவர் ஒருபோதும் கனவில் கூட நினைக்கவில்லை.

மல்லிகேஹள்ளியின் கிராம முன்சீப் மருளே கௌடர் ஒரு நாள் ஜோஸ்யரைக் கண்டு போக வந்தார். "வா, மருளண்ணு. என்ன விசேஷம்?" என்று கேட்டு வரவேற்றார் ஜோஸ்யர்.

மருளே கௌடர், "ஒண்ணுமில்லே, சாமீ; சும்மா உங்களைத்தான் பார்க்க வந்தேன்" என்றார்.

"என்ன, சொல்லு?"

"முந்தாநாள் இருபது கிராமத்து முன்சீப்புகளும் பஞ்சாயத்து நடத்தினோம். ஒவ்வொரு முன்சீப்பும் தம் கிராமத்திலே ஒரு வருஷத்துக்கு வீட்டுக்கு ஒரு ரூபாய் காணிக்கை வசூல் செஞ்சி கொடுக்கணுமின்னு தீர்மானம் செய்தோம். அதைச் சொல்லலாமின்னுதான் வந்தேன்."

"ரொம்ப நல்லதாய்ப் போச்சு, கௌடா" என்றார் ஜோஸ்யர். காணிக்கை என்ற சொல்லைக் கேட்டு அவர் காதுகள் நிமிர்ந்தன. ஆனால் அதை வெளிக்காட்டாமல், "சரி, மருளண்ணு. உங்கள் தீர்மானம் என்னவோ மிகவும் சிலாக்கியமானதுதான். ஆனால் காணிக்கை சரிவர வசூலாக வேண்டுமே?.." என்று முடித்தார்.

"அதிலே ஒண்ணும் சந்தேகமில்லே, சாமீ. மாரியாத்தா எதிரே எல்லோரும் சத்தியம் செஞ்சிருக்கோம்."

"ஆமா..காணிக்கை எவ்வளவு வசூலாகும்..?"

"எல்லாம் கணக்குப் பார்த்ததிலே வருஷத்துக்குச் சுமார் மூவாயிரம் ரூபாய்க்கு மோசமில்லே."

ஜோஸ்யரின் உடல் புளகாங்கிதம் அடைந்தது. 'வருஷத்துக்கு மூவாயிரம் ரூபாய் வெறும் காணிக்கை மூலமாக மட்டும்! அதோடு நான்கு ஏக்கர் நிலத்தின் வருமானம் வேறு! போதாததற்கு அபராதக் காணிக்கையும் இருக்கிறது. திருவிழாவில் கிடைக்கும் வருமானம். எல்லாம் சேர்ந்தால் நாலாயிரத்துக்குச் சோடை போகாது' என்று திட்டமிட்டார் பிசாசு ஜோஸ்யர். பாவம், பூமிக்கடியில் கிடைக்கும் புதையலைக் கண்டு பிடிக்கப் பணத்தைச் செலவு செய்து மை வைத்துப் பார்க்கும் வித்தையைக் கற்றார். பணத்தாசையில் பிணமாகியிருப்பார். தவிர, அவருக்குக் கிடைத்ததென்னவோ வெறும் குழவிக்கல்லே. அது அவர் மனத்தை அரித்துக்கொண்டிருந்தது. 'இந்த மை வைத்துப் பார்க்கும் வித்தை வெறும் பித்தலாட்டம். இதை நம்பி முந்நூறு ரூபாயை அநியாயமாகத் தொலைத்துவிட்டோம்' என்று அடிக்கடி அங்கலாய்த்துக் கொண்டார். புதையல் கிடைக்குமென்று ஆள் உயரத்துக்குக் குழி பறித்ததுதான் மிச்சம். அம்மிக் குழவியைக் கண்டதிலிருந்து அவர் நெஞ்சில் குடிகொண்டிருந்த பணப் பேய் சுருண்டு படுத்துக் கிடந்தது. ஆனால் மருளே கௌடனின் மொழிகள் அதைத் தட்டி எழுப்பின. அவர் மனத்திலே எண்ணம் இடலானார்: "ஆகா! என்னுலல்லவோ, இந்தத் துவையல் அரைத்துக்கொண்டிருந்த அம்மிக் குழவிக்கு நாலாயிரம் ரூபாய் வருமானம். அம்மிக் குழவி கழுவ ஒரு பொன்னுறு! இருக்கட்டும், இந்த ஆற்றிலிருந்து என் வீட்டுக்கு ஒரு கால்வாய் வெட்டிக்கொள்ளாவிட்டால் நான் கிருஷ்ண ஜோஸ்யனே இல்லை" என்று கறுவிக்கொண்டு, உரக்க, "சரி, மருளண்ணு; இவ்வளவு பெரிய தொகையின் நிர்வாகம், பொறுப்பு இவைகளைப்பற்றி என்னவாவது தீர்மானித்தீர்களோ?" என்று கேட்டார்.

"அதையேதான் உங்ககிட்டே பேசிட்டுப் போகலாமின்னு வந்தேங்க" என்றார் கௌடர்.

"ஐயோ, மருளண்ணு! இதிலே நான் என்னப்பா சொல்லக் கிடக்கிறது?"

"அதென்ன பேச்சு, சாமி? உங்க தயவாலேதானே மாரியாத்தா எங்களுக்குக் கிடைச்சிருக்கா?"

"அது இந்த ஊரின் புண்ணிய வசம்; ஊருக்குப் பெரிய தலையான உன் புண்ணியம்..பணங்காசு விஷயத்திலே ஒரு சின்னப் பேச்சு வரக்கூடாது, பார். நானே முன்னே நின்று ஏதாவது ஏற்பாடு பண்ணி வைத்தேன் என்று வைத்துக்

கொள். ஜனங்கள் என்ன சொல்லு வார்கள்; நீதான் என்ன சொல்லுவே..?''

''ஐயோ! அப்படியெல்லாம் சொல்லாதீங்க, சாமீ..''

''நான் சொல்லுகிறேன், கேள். முன்சீப்புகள் எல்லாரும் சேர்ந்து என்ன முடிவுக்கு வருகிறீர்களோ அதுவே என் சம்மதம்.''

முன்சீப்புகள் பஞ்சாயத்தில் மாரியம்மன் பூஜை முதலியவற்றை ஜோஸ்யரே செய்ய வேண்டு மென்றும், காணிக்கை முதலியவை களைக் கிராமாதிகாரிகள் வசூல் செய்து தரவேண்டு மென்றும், மாரியம்மன் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கை ஜோஸ்யருக் குக் கொடுக்க வேண்டும் என்றும், இன்னொரு பங்கு தேர்த் திரு விழாக் காரியங்களுக்குப் பயன்பட வேண்டுமென்றும், இன்னும் ஒரு பங்கைத் தான தருமங்களுக்கு ஒதுக்க வேண்டு மென்றும் முடி வாயிற்று.

ஜோஸ்யரின் இதயம் மகிழ்ச்சி யால் பொங்கிப் பூரித்தது.

முடிவு தெரிந்த நான்காம் நாள் இரவு போஜனத்துக்குப் பின் திண்ணையில் அமர்ந்து கற்பனை செய்யத் தொடங்கினர்:

'மூன்றில் ஒரு பங்கு என்றால், குறைந்தது ஆயிரம் ரூபாய்! தேர்த் திருவிழாவில் வரும் அதிகப் படியான காணிக்கை! இந்த மூடர் களின் எல்லாச் சண்டை சச்சரவு களையும் மாரியம்மன் முன்னிலையி லேயே தீர்த்து வைக்கும்படி ஏற் பாடு செய்தால் அதன் மூலம் கிடைக்கும் அபராதக் காணிக்கை!- ஆக மொத்தம் ஆயிரத்து ஐந்நூற் றுக்குக் குறையாது! ஆகா! தன லட்சுமியின் கிருபா கடாட்சம் யார்மேல் எப்போது எப்படி விழு மென்று சொல்ல முடியுமா?' என்று எண்ணிக்கொண்டே பணப் பேய்க்குக் கனகாபிஷேகம் மனத்தி லேயே செய்ய ஆரம்பித்தார்.

அலங்கார முணுமுணுப்பு

இரண்டு குடியானவர்கள் ஒருவருக்கொருவர் தங்கள் குறையை முணுமுணுத்துக் கொண்டார்கள்.

''இந்த மாதிரி குட்டையாய் என் பயிர் முளைத் ததை இதுவரைக்கும் நான் கண்டதில்லை'' என்று பெருமூச்சு விட்டான் ஒருவன்.

''உன் பயிரா குட்டை? என் பயிரை அறுவடை செய்ய என்ன செய்தேன், தெரியுமா? ஸோப்பு நுரை தடவினேன்'' என்றான் மற்றவன்.

—'மிஸ் ஸ்பெக்டேட்டர்'

சீமை லைப்ரரி

பிரிட்டிஷ் மியூஸியத்தில் உள்ள லைப்ரரியில் எத்தனை புஸ்தகங்கள்தான் இருக்கின்றன என்று திட்டமாகத் தெரியாது. சுமார் 50 லட்சம் புஸ்த கங்கள் இருக்கலாம் என்று மதிக்கிறார்கள். 60 மைல் நீளம் இருக்கும் ஷெல்புகளில் அவற்றை வைத்திருக் கிறார்கள். 1931 - இல் விரிவான ஜாபிதா தயா ரிக்கத் தொடங்கினர்கள். இருபத்துமூன்று வருஷங் கள் ஆகியும் அது பூர்த்தியாகவில்லை. இன்னும் 82 வருஷங்கள் ஆகும் அந்த ஜாபிதா முடிய என்று நிபு ணர்கள் மதிப்பிடுகிறார்கள். இப்போது வேலை நடக் கிற வேகத்தைப் பார்த்தால், 2036-இல் முடியலாம். 200 வால்யுங்கள் வரும். அப்போது ஷெல்புகளின் மொத்த நீளம் 80 மைலாயிருக்கும். —'யுனெஸ்கோ'

ஜரிகை மாலை

என். ராமகிருஷ்ணு

மங்கள காரியங்களிலும் தெய்வத்துக்கும் அணிய அலங்காரமான மாலைகள் கட்டுவார்கள். இந்த அபூர்வ மான தொழில் தஞ்சையில் சிறந்து விளங்குகிறது.

தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மைகளுக்கு பெயர் பெற்றது. தென் இந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அதைச் சொல்லுவார்கள். ஆனுல் இங்கே செய்வதுபோல் இந்தியாவின் வேறு எந்தப் பாகத்திலும் இந்த மாலைகள் செய்வதில்லை. சிற்பங்களுக்கும் கோவில்களுக்கும் பெயர் பெற்ற தஞ்சை இந்தத் தொழிலிலும் சிறந்து விளங்குகிறது. ஆனுல் போதிய ஊக்கம் அளிப்பவர் இல்லாததால், இந்தக் கலையைப் போற்றி வளர்க்கும் கைத்திறன் படைத்தவர் மேலும் மேலும் இந்தத் தொழிலை வளர்க்க முடியாமல் சிரமப்படுகிருர்கள். எது எப்படி இருந்தாலும், ஜரிகை மாலைகள் செய்வது சிறந்த, மென்மையான, நுட்பமான ஒரு கைத்தொழில்.

நாட்டின் பல பாகங்களில் செய்த மாலைகளை நாம் அடிக்கடி பார்த்திருக்கிருேம். தஞ்சை மாலைகளின்முன், அவை எல்லாம் சோபை இழந்து தோன்றுகின்றன. தஞ்சை மாலைகளின் மோஸ்தர், குறிப்பு, வர்ணம் எல்லாமே சிறப்பாக விளங்குகின்றன. பலவித மாலைகள் செய்கிருர்கள். அரிசி, நெல், வெல்லம், சந்தனம், ஏலக்காய், ஜவ்வாது இப்படி வெவ்வேறு பொருள்களைக் கொண்டு மாலை தயாரிக்கிருர்கள். நெட்டி மாலையும் கதம்ப மாலையும் பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாக இருக்கும்.

நெல் மாலையை எப்படிச் செய்கிருர்கள் என்று பார்ப்போம். தஞ்சையில் நெல் அதிகம். ஆகவே,



முழு நெல்லாக எடுக்கிருர்

அந்த மாலையைக் கவனிப்போம். ஒரு படி நெல் எடுத்துக்கொண்டு அதில் முழு நெல் தானியங்களாகப் பொறுக்கி வைத்துக்கொள்கிருர்கள். உடைந்த நெல் பயன்படாது. சுத்தமான நெல் சுமார் கால்படி போதும், ஒரு மாலை கட்டுவதற்கு. நன்ருகச் சீவிய மெல்லிய மூங்கில் குச்சிகளை எடுத்துக் கொள்ளுகிருர்கள். ஓர் ஊசியின் கனத்துக்கு மேல் இவை இருக்கக் கூடாது. இவற்றின் நீளம் 10 அங்குலம், 9 அங்குலம், 8 அங்குலம் என்று மாலையின் மோஸ்தருக்குத் தக்கபடி இருக்க வேண்டும். இந்தக் கணக்குப்படி வெட்டுகிருர்கள். இவற்றில் இரண்டு குச்சிகளை எடுத்து ஒன்றின்மீது ஒன்ருக வைக்க வேண்டும். ஒரு கோடியில் கெட்டியான மெல்லிய நூலால் கட்ட வேண்டும். பிறகு நெல் மணியை எடுத்து இரண்டு

காப்பிரைட்: தி மெயில் (ஆங்கிலம்: 13-10-'57), சென்னை.

குச்சிக்கும் நடுவில் பொருத்தி, நூலால் சுற்றிக் கட்டி முடிய வேண்டும். நூலைக் குறுக்கும் நெடுக்குமாக எடுத்துக் கட்ட வேண்டும். அடுத்தபடி மற்றொரு மணி தானியத்தை எடுத்துப் பொருத்திக் கட்டுகிறார்கள். இப்படியே அந்தக் குச்சியின் நீளம் முழுவதும் நெல் மணியால் ஒன்றன் பக்கத்தில் ஒன்றாகப் பொருத்திக் கட்டுகிறார்கள். இதுபோலவே அநேகம் குச்சிகளை நெல்மணி கட்டித் தயாரித்துக் கொள்கிறார்கள்.

அடுத்தபடியாக அட்டைகளைத் தயார் செய்கிறார்கள். மெல்லிய அட்டைகளைச் சுமார் 4 அல்லது 3 அங்குல விட்டம் வைத்து, கோழி முட்டை (ஓவல்) மோஸ்தரில் வெட்டவேண்டும். முன்பு தயார் செய்த குச்சிகளை, இந்த அட்டையின் ஓரத்தில் கொஞ்சம் இடம் விட்டுப் பொருத்தித் தைக்கிறார்கள். குச்சி உடையாமலும் நெல்மணிகள் சிதறாமலும் ஜாக்கிரதையாகப் பக்கத்தில் பக்கத்தில் தையல் போட்டு, நுட்பமாக அட்டையில் வட்டவடிவமாக இவற்றைத் தைத்துவிடுகிறார்கள். நீளக் குறைவான இது போன்ற வேறு குச்சிகள் கொண்டு, ஒரு வளையத்துக்குள் மற்றொரு வளையம் தைத்து முடிக்கிறார்கள். ஒரு மாலை கட்டுவதற்கு இது மாதிரி 16 வில்லைகள் தயார் செய்ய வேண்டும். 8 ஜோடிகள் கொண்டு பக்கத்துக்கு 4 வீதம் மாலையில் பொருத்துகிறார்கள். இந்த நெல் மணிகள் பொருத்திய பாதையின் இடைவெளியில் வர்ணத் துணியாவது, சில்க் துணியாவது ஒட்டுகிறார்கள். மாலைக்கு ஆர்டர் கொடுப்பவர் ஏதாவது நூதனமான எழுத்தோ, பொம்மையோ அலங்காரமோ வேண்டுமென்று கேட்டால் அது மாதிரியும் ஒட்டுவார்கள்.

இந்த வில்லைகளை அழகுபெறச் செய்வதுதான் அடுத்த வேலை. அதற்குத் தங்க ஜிகினா உபயோகிக்கிறார்கள். ஜிகினா முக்கியமாகச் சூரத் ஜில்லாவில் கிடைக்கிறது. இதனால் **'சூரத் ஜிகினா'** என்று



அட்டையில் தையல்



பூ வேலை செய்த அட்டை

பளபளக்கும் சூரத் ஜரிகை



வளைவுத் திண்டு அல்லது கழுத்துப் பட்டை



மகரி அல்லது டாலர்



கதம்ப மாலை

அதைக் குறிப்பிடுகிறார்கள். அந்த ஜிகினா மெல்லிய 'ஸ்பிரிங்'போல் இருக்கும். அது கெட்டியாக நிற்கும்படி செய்வதற்குக் கம்பிகளை உபயோகிக்கிறார்கள். அதற்கு 30 அங்குலம், 28 அங்குலம், 26 அங்குலம் என்று நீளக் கணக்கு உண்டு. பெரும்பாலும், 26 அங்குல நீளக் கம்பியையே உபயோகிக்கிறார்கள். ஏனென்றால், இதுதான் சுலபமாக வளைந்து கொடுக்கும்; கெட்டியாகவும் நிற்கும். இந்தக் கம்பியை ஜிகினா 'ஸ்பிரிங்' ஓட்டைக்குள் விட்டு, அது விறைப்பாயிருக்கும்படி செய்வார்கள். வேண்டிய அளவு நீளத்துக்கு இந்தக் கம்பியை வெட்டிக்கொண்டு, இரண்டாக மடித்துப் பின்னி, அட்டையில் மூன்று நெல் வரிசையின் பக்கத்தில் வைத்துத் தைத்துவிடுவார்கள். இப்போது நெல்மணி பொருத்திய அட்டைகள் பளபள என்று மின்னும்.

பிறகு இரண்டு அட்டைகளை எடுத்து ஜிகினா மேல்புறம் தெரியும்படி வைத்துக்கொண்டு உள்ளே நெட்டியில் செய்த குறுக்கு விட்டங்களைப் பொருத்துவார்கள். இதன் பலனாக இந்த அட்டை வில்லை நடுவில், உப்பின மாதிரி தென்படும். இரண்டு பக்கங்களையும் பொருத்தி, சுற்றிலும் 6 இடங்களில் கெட்டியாகத் தையல் போடுவார்கள். இது மாதிரி தயார் செய்த 8 வில்லைகளையும் உள்ளே நெட்டி கொடுத்து உப்பச் செய்வார்கள். பக்கத்துக்கு 4 விகிதம் பொருத்தினால், மாலையின் நடுப்பாகம் தயார் ஆகும்.

அடுத்தபடியாக மாலையின் மேல் பாகம் தயாராகும். கழுத்துப் பட்டைக்குக் கீழே வட்டவடிவமான வில்லைகள் இரண்டு தயார் செய்து பொருத்துவார்கள். இதன் பின், 'ஓவல்' வில்லைகளுக்குப் பதிலாக முன் மாதிரியே வட்ட வடிவமான சில வில்லைகளை உருவாக்குவார்கள். ஆனால் இவற்றுக்கு நடுவில் நெட்டிக்குச்சி பொருத்த மாட்டார்கள். ஏனென்றால், அவை தோள்பட்டையில் தொந்தரவு கொடுக்கும்.

மேலிருந்து கொண்டுவந்து இரண்டு பக்கங்களையும் அடியில் பொருத்தும் இடத்துக்கு 'மகரி' அல்லது 'டாலர்' என்று கூறுவார்கள். இதுவும் சுமார் 4 அங்குல விட்டமுள்ள வட்டவடிவமான வில்லையே. இதில் பல விதமான வேலைப்பாடுகள் செய்வார்கள். தொழிலாளியின் கைத்திறமைக்கும் அறிவுத்திறனுக்கும் தக்கபடி 'டாலர்' உருவாகும். புத்திக் கூர்மை உடையவர்கள், விதம் விதமான டாலர்களை நொடிப் பொழுதில் உருவாக்கிவிடுவார்கள்.

இது முடிந்தவுடன் 'கழுத்துக் கட்டை' அல்லது 'வளைவுத் திண்டு' என்பதைச் செய்வார்கள். இதைச் 'சம்பு தட்டி' அல்லது 'வாழை மட்டை' கொண்டு செய்ய வேண்டும். இதன் நீளம் ஒரு சாண், நான்கு விரல்; அதாவது, சுமார் 12 அங்குலம். அரை வட்டம் மாதிரி 'சம்பு தட்டி' அல்லது 'வாழை மட்டை'யை வளைப்பார்கள். சிலர் வர்ணத் துணிகளைக் கொண்டும் கழுத்துக் கட்டையைச் செய்வதுண்டு.

நெட்டியைக் கொண்டு சிறிய முக்கோண வடிவுக் கும்பம்(கோன்) செய்வார்கள். இதற்கு மேல் வர்ணத் துணி கொண்டு கட்டுவார்கள். முன்பே வளைத்து வைத்திருக்கும் கழுத்துப் பட்டையின் நுனியில் இவற்றை இரண்டு பக்கத்திலும் கட்டித் தொங்கவிடுவார்கள். முடிவாக, மாலையின் அடிப்பாகத்திலும் ஒரு முக்கோண நெட்டிக்குஞ்சம் தொங்க விடுவார்கள். இவ்வளவையும் தயார் செய்து வைத்துக்கொண்டு, முடிவாக மாலையை உருவாக்குவார்கள். கெட்டியான மெல்லிய வர்ண நூலைக் கழுத்துப் பட்டையின் உள் இரண்டு பக்கத்திலும் கொடுத்து இழுத்துக் கொள்ளுவார்கள். சுமார் 4½ அடி நீளம் இந்த நூல் தொங்கும். முன்பே தயாரித்த வில்லைகளின் உள்ளே கோணி ஊசி கொண்டு ஜாக்கிரதையாக இவற்றைச் செலுத்தி இழுத்து, ஒன்றன்பின் ஒன்றாகக் கோத்துக்கொண்டு வந்து, கடைசியாக அடியில் பெரிய டாலரைப்



சந்தன மாலை



மாலை கட்டும் சாலை

மாலை வகைகள்

பொருத்தி மாலையை முடிப்பார்கள். உள்ளே உள்ள நெட்டியில் ஊசியைச் செலுத்தவேண்டும். நல்ல மாலை செய்வதற்கு, நல்ல சாமான்களை உபயோகிக்க வேண்டும். வர்ணம் போகாத நல்ல நூலையும் துணியையும் சேகரிக்க வேண்டும். இல்லாவிட்டால், அவை புதுத் துணிகளைப் பாழ்படுத்தி விடும். கல்யாண மாப்பிள்ளையின் புது ஸூட் மாலையால் கெட்டுவிடக் கூடாது.

ஒரு மாலையின் உயரம் சுமார் 4 அடி இருக்கும். விட்டுப்போன இடங்களை எல்லாம் கடைசியில் ஜிகினு கொண்டு சரி செய்வார்கள். ஆர்டருக்குத் தக்கபடி சிறிய மாலைகளையோ பெரிய மாலைகளையோ செய்து தருவார்கள். ஐந்து அல்லது ஆறு பேர் வேலை செய்தால், ஒரு மாலை முடிய மூன்று அல்லது நான்கு நாள் ஆகும். எல்லா மாலைகளையும் விடச் சந்தன மாலை செய்ய அதிக நாள் பிடிக்கும். ஏனென்ருல், அது மிகவும் நச்சுப் பிடித்த வேலை!

மாலைகளை 25 ரூபாயிலிருந்து 250 ரூபாய் வரையில் விலையுள்ளதாகச் செய்யலாம். மாலைகளில் எல்லாம் மிகவும் விலை உயர்ந்தது ஜவ்வாது மாலை. இதற்கு 500 ரூபாய்கூட ஆகும். மிகவும் கஷ்டப்பட்டுச் செய்ய வேண்டியது சந்தன மாலை. மிகவும் நுட்பமானவை நெல், அரிசி மாலைகள். அழகானது கதம்ப மாலை. கதம்ப மாலையில் எல்லா விதச் சாமான்களும் கலந்திருக்கும். இதில் நெல், லவங்கம், ஏலம், கிராம்பு, ஜவ்வாது போன்ற பொருள்கள் இருப்பதால், இது அழகாகவும் வாசனையாகவும் இருக்கும்.

இந்தமாதிரி மாலைகளைத் தஞ்சையில்தான் செய்கிருர்கள். இதைச் செய்பவர் பலர் இருந்தபோதிலும், ஸ்ரீ ஆர். வேணுகோபாலன் என்பவர் இந்தத் துறையில் சிறந்து விளங்குகிருர். இவர் தஞ்சைக் கலைக்கூடத்தைச் சேர்ந்த விற்பன்னர்களில் ஒருவர். இவர் செய்த மாலைகள் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்றிருக்கின்றன. பிரபலமான தலைவர்களின் கழுத்துக்களை இவருடைய மாலைகள் அலங்கரித்திருக்கின்றன.

தஞ்சை ஜரிகை மாலைகள் செய்யும் வித்தையைத் தம் சகாக்களுடன் தாமே உட்கார்ந்து எனக்குச் செய்து காண்பித்து, சில மணி நேரத்தில் சில மாலைகளையும் அமைத்து முடித்தார். அப்போது எடுத்த படங்களே இந்தக் கட்டுரையை அலங்கரிக்கின்றன.

ஒவ்வொரு மாலையுடனும், ஓர் அழகான பூச்செண்டு (பொக்கே) செய்கிருர்கள். இதுவும் மிகவும் கடினமான வேலைதான். இதையும் மிக அழகாகவே செய்கிருர்கள். இதைச் செய்வதற்கும் இரண்டு தினங்கள் பிடிக்கின்றன.

தொல்லைக்கு வட்டி

கவலைப்படுவது, தொல்லை வருமுன் அதற்கு வட்டி செலுத்தும் காரியமாகும்.

—டபிள்யு. ஆர். இஞ்சு

போரும் அரசியலும்

போர் என்பது மிக முரட்டு விளையாட்டு. அரசியலோ அதையும்விட மோசமானது என்று நான் நினைக்கிறேன்.

—ஃபீல்டு-மார்ஷல் லார்டு மாண்ட்காமரி

நாவல் சுருக்கம்:

அழகு ராஜா

மூலம்: **மாபஸான்**

தமிழ்: **ஏ. எம். அலி**

எக்காலத்தும் இணையற்ற மகோன்னதச் சிறுகதை எழுத்தாளர் என்று கீர்த்தி பெற்ற இந்தப் பிரெஞ்சு ஆசிரியர், 1850-இல் பிறந்து 1893-இல் காலமானார். ஃப்ளோபர் என்ற பிரபல நாவலாசிரியரிடம் பயிற்சி பெற்றவர். ஏராளமான சிறுகதைகளும் ஆறு நீண்ட நாவல்களும் எழுதினார். வாழ்க்கையை உள்ளது உள்ளபடி நுணுக்கமாகச் சித்திரிப்பவர். 'பெல் - அமி' (அழகு நண்பன்) என்ற இவருடைய நாவலின் தமிழாக்கம் இது. மிகவும் பிரசித்தமானது.

காப்பிரைட்: அழகு ராஜா (தமிழ் மொழிபெயர்ப்பு நாவல்). மொழிபெயர்ப்பு: ஏ. எம். அலி. தயாரிப்பு: அரு. ராமநாதன். வெளியிட்டோர்: பிரேமா பிரசுரம், சென்னை-24. விலை ரூ. 3-0-0.

அழகு ராஜா

★

பணப்பெட்டிக்காரி மீதிப் பணத்தைத் தந்ததும், ஹோட்டலிலிருந்து ஜார்ஜ் துருவன் வெளியேறினான். அவன் இயற்கையாகவே கவர்ச்சியான கட்டழகன்; வாலிபன் கம்பீரமாக நிமிர்ந்து நின்று தன் உடுப்பிலுள்ள சுருக்கங்களையெல்லாம் இழுத்துவிட்டு நேர் செய்துகொண்டான். விடுதியை விட்டு இறங்கித் தெருவில் நடந்தான்.

அப்போது ஜூன் மாதம் 28-ஆம் தேதி. துருவனின் சட்டைப் பைக்குள் இருந்த பணம் 3 பிராங் 40 காசுதான். மாதம் முடியும் வரையில் அந்தச் சொற்பக் காசைக் கொண்டே காலந் தள்ள வேண்டும்! தினம் அரைவயிற்றுச் சாப்பாட்டுடன் மனச் சாந்தி அடைய வேண்டும். அவன் கவலையோடு சிந்தித்தான்.

ஆப்பிரிக்காக் கண்டத்தின் அரபு நாடுகளில் அவன் இரண்டு ஆண்டுகள் போர்வீரனாக இருந்த போது நடந்த சம்பவங்களை இப்போது அவன் நினைத்துப் பார்த்தான்.

ஒபரா என்னும் இசைக்கூத்து நடக்கும் சதுக்கத்துக்கு வந்தான். அங்கே அவன் எதிரில் கொழு கொழுவென்று சதைப் பிடிப்பான தேகக் கட்டுடைய ஒரு வாலிபன் சென்றான்.

'அடேடே! போரஸ்தியர் அல்லவா இவன்?' என்று எண்ணிய துருவன், ஆவலோடு பெருநடை போட்டு ஓடி, அந்த வாலிபனின் தோளைப் பற்றினான். எதிரில் சென்றவன், ''என்ன வேண்டும் உங்களுக்கு?'' என்றான் நிதானமாக.

''என்னை உனக்குத் தெரியவில்லை?''

''தயை செய்து நீங்கள் யாரென்று....''

''நான்தான் ஜார்ஜ் துருவன். ஆறுவது அணிவகுப்புப் படை..''

உடனே போரஸ்தியர் கைகளை நீட்டி, ''அடே நீயா! சௌக்கியமா? இங்கே என்னடா செய்கிறாய்?'' என்றான்.

''ஏதோ இருக்கிறேன்! நீ என்ன செய்கிறாய்?''

போரஸ்தியர் தன் பழைய நண்பனுக்கு முழு விவரங்களையும் கூறினான். 'பிரெஞ்சு வாழ்க்கை' என்ற பத்திரிகையில் 'அரசியல் அரங்கம்' என்ற கட்டுரைத் தொடரையும், 'வந்தனம்' என்ற சஞ்சிகையில் 'சட்ட ஞானம்' என்ற கட்டுரைத் தொடரையும் தீட்டி வருவதாகப் போரஸ்தியர் சொன்னான்.

''இப்போது நீ எங்கே போகிறாய், துருவா?'' என்று போரஸ்தியர் கேட்டான்.

''எங்கேயு மில்லை! சும்மா ஊர் சுற்றுகிறேன்.''

''சரி; 'பிரெஞ்சு வாழ்க்கை' என்ற பத்திரிகாலயம் வரைக்கும் வருகிறாயா? அங்கே சில 'புரூப்' பிரதிகள் திருத்தவேண்டும். பிறகு நாம் இருவரும் ஒரு கோப்பை பானம் அருந்தலாம்..''

''தாராளமாக வருகிறேனப்பா....''

இரு தோழர்களும் பழையபடி ஒன்று சேர்ந்து நடக்கலானார்கள்.

''துருவா, நீ இந்தப் பாரிஸ் பட்டணத்தில் என்ன செய்கிறாய்?''

''பசியால் வாடுகிறேன்; அவ்வளவுதான்! ராணுவ சேவை முடிந்ததும் இங்கே வாழ வந்தேன். ஆறு மாதமாக வடக்கு ரெயில் நிலையத்தில் கணக்கனாக இருக்கிறேன். வருஷ ஊதியம் 1,500 பிராங் காசு! பார்த்தாயா வறுமையை?''

''ஒன்றும் செழிப்பாக இல்லையே?''

இரு நண்பர்களும், பத்திரிகாலயத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

எழுத்துலகத் தோழர்களான ஜாக்ரிவால், கவி நொபேர் ஆகியோருக்குத் துருவனை அறிமுகம் செய்துவைத்த பின்பு, தாகசாந்தி செய்துகொள்ள அவனைப் போரஸ்தியர் ஒரு கிளப்புக்கு அழைத்துச் சென்றான். துருவனுக்கு மன ஆறுதலாக இருந்தது. அப்போது போரஸ்தியர், ''ஆமாம்! நீ எழுத்துத் துறையில் ஏன் முயற்சி செய்யக் கூடாது, துருவா?'' என்று கேட்டான்.

துருவனுக்கு வியப்பு மேலிட்டது. ''நான்....நான்....எழுதுவதா? எனக்குப் பயிற்சியே கிடையாதே!'' என்றான்.

''முயற்சியால் முடியாதது எதுவுமில்லை. சம்மதமானால் சொல்லு. எனக்கு உதவியாசிரியனாக உன்னை அமர்த்திக்கொள்வேன். இருநூற்றைம்பது பிராங் காசு மாதச் சம்பளமாகக் கிடைக்கும். என்ன? எங்கள் பத்திரிகை முதலாளியிடம் பேசவா?'' என்று கேட்டான் போரஸ்தியர்.

"பூர்ண சம்மதம்'' என்றான் துருவன்.

''அப்படியானால் ஒரு காரியம் செய். நாளைக்கு என் வீட்டில் விருந்துண்ண வா. பத்திரிகை முதலாளி வால்டேர் துரையும், அவருடைய மனைவியும் விருந்துக்கு வருவார்கள். ஜாக்ரிவால், நொபேர் மற்றும் பல எழுத்தாளர்கள் இருப்பார்கள். பேச வசதியாக இருக்கும். என்ன சொல்லுகிறாய்?''

''நீ மிகவும் நல்லவன்; மிக்க நன்றி. அவசியம் வருகிறேன்'' என்றான் உணர்ச்சியோடு.

பிறகு விடை பெற்றான்.

அடுத்த நாள்.

''முஸியே போரஸ்தியர் வசிக்கும் இடம் எது?'' என்று கேட்டான் துருவன்.

''மூன்றாவது மாடியில் இடது பக்கத்து அறையின் கதவைத் தட்டுங்கள்!'' என்று பதில் கூறினான் காவற்காரன். ஜார்ஜ் துருவன் மாடிப் படிக்கட்டில் ஏறினான்.

மூன்றாம் மாடி அறைக் கதவருகே வந்து அங்கிருந்த மணியை அடித்தான்.

மறு கணம் கதவு திறந்தது. ஒரு பணியாள் வெளியே வந்தான். துருவனின் கோட்டை அன்புடன் வாங்கிக்கொண்டான்.

ஒரு யௌவனப் பெண் தன்னந்தனியாக, அடுத்த அறையில் தங்கச் சிலைபோல நின்றுகொண்டிருந்தாள். அது விசாலமான அறை. பளிங்குக் கூண்டு விளக்குகள் அங்கே ஒளி வெள்ளத்தைச் சிந்திக்கொண் டிருந்தன.

''அம்மணி, நான்..வந்து..'' என்று துருவன் திணறினான். அந்த மங்கை துணிச்சலாக, அவனருகில் வந்து புன்னகையுடன் உபசரித்து வரவேற்றாள்.

''நீங்கள் யாரென்பது எனக்குத் தெரியும். என் கணவர் சார்லஸ் போரஸ்தியர் நேற்றிரவு உங்களைச் சந்தித்ததுபற்றி என்னிடம் கூறினார். இன்று எங்கள் வீட்டுக்கு விருந்தினராக வரும்படி உங்களை அழைத்தாராம். அதுவரையில் நான் மிகவும் பாக்கியசாலிதான்'' என்றாள் குதூகலமான குரலில்.

துருவனின் முகம் மட்டுமல்ல; இரு காதுகளும், குப்பென்று நாணத்தால் சிவந்தன. அந்த வனிதைக்கு என்ன பதில் சொல்வதென்றே விளங்கவில்லை.

போரஸ்தியரின் மனைவியை ஏறிட்டுப் பார்த்தான். மதலேன் என்னும் பெயருள்ள அந்தப் பெண் மணிமீது வைத்த பார்வையை அவனால் எடுக்கவே முடியவில்லை.

அவள் - திருமதி மதலேன் - மதமதவென இளமையின் பொலிவுடன் விளங்கினாள். தெள்ளிய வானைப்போன்ற வெண்நீல நிறத்திலே காஷ்மீரத்துப் பட்டுக் கவுன் அணிந்திருந்தாள். தந்தத்தினால் புனைந்த சிற்பம் போன்ற அவளுடைய சதைப் பிடிப்பான கழுத்தும் தோள்களும், கவுனில் பின்னல் சுருக்க வேலைப்பாடுகளுடைய அடர்த்தியான ரேந்தாக்களிலிருந்து புறப்பட்டன. பொன்னிறமான கடல்அலை போன்ற அவளுடைய கூந்தல், தலையிலிருந்து

பின் கழுத்தில் விழுந்து குலுங்கியது.

மீண்டும் மணி ஒலித்தது. மாரவல்லி தேவியின் வருகையை வேலைக்காரன் அறிவித்தான்.

அவளும் கவர்ச்சியான ஒரு சுந்தரிதான். கொஞ்சம் குள்ளமாக இருந்தாள். அவளுக்குத் 'தளுக்குத் தங்கம்' என்று பொருத்தமாகப் பட்டம் சூட்டலாம்!

கன்னங் கறேலென்ற அவளுடைய கூந்தலிலே செருகியிருந்த சிவப்பு ரோஜா மலர் கண்ணைப் பறித்தது.

சின்னஞ்சிறு கவுன் அணிந்திருந்த ஒரு சிறுமியும் அந்த மாரவல்லி தேவியுடன் வந்தாள். அந்த இருவரையும் உபசரித்து வரவேற்க, அவளுடன் எழுந்தாள் போரஸ்தியரின் மனைவி மதலேன். அங்கே ஒரு புறம் நின்ற துருவனைத் தன் சிநேகிதிக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

மற்றொரு விருந்தினருக்காகக் கதவு மீண்டும் திறந்தது. உடல் பருத்துக் குள்ளமான ஒரு மனிதர், உருண்டு திரண்ட பழம்போல உள்ளே வந்தார். உயரத்தில் அவரைவிடச் சிறிது அதிகமாக, ஆனால் நல்ல இளமைப் பூரிப்புடன் எடுப்பான தோற்றமுள்ள ஒரு பெண்மணியோடு கை கோத்தபடி, அந்தக் குள்ள மனிதர் வந்தார். அவர்தான் பத்திரிகை முதலாளியான முஸியே வால்டேர் துரை. அவர் பெரும் பணக்காரர்; லேவாதேவிக்காரர்; பிரபல வர்த்தகர்; மேல்சபை அங்கத்தினர்; ஜாதியில் யூதர்; 'பிரெஞ்சு வாழ்க்கை' என்ற பத்திரிகையின் அதிபர். அவருடைய யௌவன மனைவியோ ஒரு பிரெஞ்சுக்காரி; பாங்க் முதலாளி ஒருவரின் செல்வக் குமாரி.

அதன்பின் எழுத்தாளர் ஜாக்ரிவால், கவிஞர் நொபேர் இருவரும் வந்தார்கள். விருந்து வைத்த போரஸ்தியரும் வேர்க்க விறுவிறுக்க உள்ளே ஓடிவந்தான். சுணக்கத்துக்காகத் தன்னை மன்னிக்கும்படி அனைவரையும் அவன் வேண்டிக்கொண்டான்.

''விருந்துக்குச் சமையலெல்லாம் தயாராகிவிட்டது. உணவு பரிமாறலாமா?'' என்று வேலையாள் வந்து கூப்பிடவே அனைவரும் சாப்பாட்டறைக்குள் சென்றார்கள்.

மாரவல்லி தேவிக்கும், அவளுடைய மகளுக்கும் நடுவே துருவன் உட்காரும்படி யாயிற்று. விருந்தாளிகள் சாப்பிட்டுக்கொண்டே உல்லாசமாக உரையாடினார்கள். ஆனால் துருவன்மட்டும் வாய் திறக்கவில்லை.

விருந்துண்போரின் முகமெல்லாம் ரத்தச் சிவப்பேறியது. மதுக் கிண்ணங்கள் மாறி மாறி நிறைந்தன. அல்ஜேரியாபற்றிப் பேச்சு வந்தது.

''அல்ஜேரியா பிரதேசத்தைக் கைப்பற்றியிருக்கும் நம் பிரான்ஸ் நாடு, அந்தத் தேசத்திலே நிலையானதொரு ராணுவ ஆட்சியை முதலில் நிறுவ வேண்டும். விளைவு நிலங்களை யெல்லாம் பறிமுதல் செய்யவேண்டும். முப்பது ஆண்டுகளாகக் காலனி ஆட்சி ஸ்தாபிப்பதற்காகப் பாடுபடும் ராணுவ உத்தியோகஸ்தர்களுக் கெல்லாம் அந்த நிலங்களைப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும்'' என்றார் எழுத்தாளர் ஜாக்ரிவால்.

துருவன் வாய் திறந்தான். ''அங்கே நல்ல நிலம் கிடைப்பது அரிது. வளமான கிராமங்கள் இங்கிருப்பது போல விலையேறப் பெற்றவையாக இருக்கின்றன. பெட்டிப் பணத்தை முடக்குவதற்காக வழிதேடும் பாரிஸ் நகரத்துச் சீமான்கள் அவற்றை வாங்குகிறார்கள். பசிக்கு ஒரு துண்டு ரொட்டி இல்லாத துரைமார்கள், தாய் நாட்டிலே பிழைக்க வழியற்றுப் போனவர் இவர்களைப் புல்பூண்டு முளையாத நீர் வறண்ட தரிசல் வனத்திலேதான் தள்ளுகிறார்கள்!'' என்றான்.

எல்லாரும் அவனையே வியப்புடன் பார்த்தார்கள். துருவனின் முகம் குப்பென்று சிவந்துவிட்டது. மூக்குக் கண்ணாடியை நெற்றிமீது இழுத்துவிட்டுக்கொண்ட வால்டேர் துரை, ''உங்களுக்கு அல்ஜேரியா பிரதேசத்தைப்பற்றித் தெரியுமா, தம்பி?'' என்றார்.

''ஆமாம்; தெரியும். அந்தப் பிரதேசத்தில் இருபத்தெட்டு

மாதம் இருந்திருக்கிறேன்; அதன் மூன்று மாகாணங்களில் வசித்திருக்கிறேன்'' என்றான் துருவன்.

வால்டேர் துரையின் மனைவி அப்போதுதான் துருவனை விசேஷமாகக் கவனித்தாள். ''உங்கள் அநுபவ நினைவுகளையெல்லாம் ஒழுங்குபடுத்தி எங்கள் பத்திரிகைக்குத் தொடர் கட்டுரைகள் வரையலாமே!'' என்றாள் மெதுவாக.

போரஸ்தியரோ இந்த அருமையான சந்தர்ப்பத்தைத் தன் எண்ணத்துக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான். ''உங்களிடம் சொல்லலாம் என்றிருந்தேன், முதலாளி. துருவனை ஒரு பத்திரிகை நிருபனாக நம் அலுவலகத்தில் அமர்த்திக்கொள்ளலாம். அவசரச் செய்திகளையும் அந்தரங்கமான விஷயங்களையும் அறிந்து வர ஒரு நம்பிக்கையான ஆள் நமக்கு அமையவில்லை. பத்திரிகை ஓட்டத்துக்கும் முன்னேற்றத்துக்கும் இது ஒரு பெருந்தடையாக இருந்து வருகிறது..'' என்று கூறினான் போரஸ்தியர்.

வால்டேர் துரை பொறுப்புடன் மீண்டும் ஒரு தடவை துருவனைக் கவனித்தார். ''துருவன், சுய சிந்தனையாளராக இருக்கிறார். நாளைய தினம் மூன்று மணிக்கு அவர் நமது பத்திரிகாலயம் வந்தால், அந்த விஷயத்தைக் கவனித்து ஆவன செய்யலாம்!'' என்று சொல்லிவிட்டுத் துருவனை நோக்கி, ''தம்பி, இப்போதே அல்ஜேரியா தேசத்தைப்பற்றிய ருசிகரமான தகவல்கள் நிறைந்த கட்டுரைகளை உருவாக்குங்கள். உடனே எழுதுங்கள். நாளைக்கோ, அதற்கு அடுத்த நாளன்றோ, என் கைக்கு முதல் கட்டுரை வந்தாக வேண்டும்'' என்றார் ஆர்வத்துடன்.

''அதுதான் சரி! 'ஆப்பிரிக்க வனவேடனின் அநுபவ நினைவுகள்' என்று கட்டுரைக்குத் தலைப்பிடலாம்'' என்று உற்சாக மூட்டினாள் வால்டேரின் மனைவி.

விருந்து முடிந்தது.

விருந்தினர் விடை பெற்றுச் செல்லும் வேளை வந்தது. துருவன் மங்கையரின் மெல்லிய மலர்க் கரங்களை மிருதுவாகப் பற்றிக் குலுக்கினான்; ஆண்களின் முரட்டுக் கைகளை முரட்டுத்தனமாக அழுத்தினான். கடைசியாக, போரஸ்தியர் தன் நண்பனை நோக்கி, ''துருவா, முதலாளி குறித்தபடி நாளைக்கு மூன்று மணிக்கு எங்கள் பத்திரிகாலயத்துக்கு வரத் தவறாதே'' என்றான்.

''அவசியம் வருகிறேன்'' என்றான் துருவன்.

மாடிப் படிக்கட்டுக்கு வந்ததும், தடதடவென்று குதித்தோட வேண்டும்போல் துருவனுக்குக் குதூகலம் பொங்கி எழுந்தது. உடனே ஒரே தாவில் பாய்ந்தான்!

தெருவை அடைந்ததும், பெரு நடை போட்டுக்கொண்டு தன் குடியிருப்பு ஸ்தலத்தை நோக்கி விரைந்தான்.

அவன் வசித்த இடம் ஒரு பெரிய கட்டிடம். ஆறு மாடிகள் அதற்கு இருந்தன. எண்ணற்ற ஏழைத் தொழிலாளிகளின் குடும்பங்கள் அங்கே ஒன்றாகத் திணித்தது போல வசித்துக்கொண்டிருந்தன. அந்தக் கட்டிடத்தின் மாடிப் படிக்கட்டில் துருவன் நெருப்புக் குச்சிகளைக் கொளுத்தி, அதன் வெளிச்சத்தில் வழியைப் பார்த்துக்கொண்டே ஏறினான். கிழிந்த காகிதங்களும், எச்சில் சிகரெட் துண்டுகளும், சமையலறைக் கழிவுகளும் வழிநெடுகக் குவிந்திருந்தன. அவற்றின் துர்நாற்றம் சகிக்கவில்லை. போதாததற்கு மாடிதோறும் அமைந்திருந்த கக்கூஸ்களின் நாற்றமும், சுவர்களில் பற்றியிருந்த அசுத்தப் பத்தைகளின் பிசுபிசுப்பும், அந்தச் சுவர்களுக்குப் பின்னே வசிக்கும் மக்களின் அழுக்கு வாசனைகளும், உணவுப் பண்டங்களின் புகை சூழ்ந்த வீச்சமும், காற்றோட்டமில்லாத அந்த இடத்திலே தேங்கி உறைந்து போயிருந்தன. எங்கும் ஒரே புழுக்கம்; பல வித வீச்சங்கள்; வறுமையின் அசுத்தங்கள்!

துருவனின் அறை ஐந்தாவது மாடியில் அமைந்திருந்தது. அதற்குள்ளே சென்று ஜன்னல் கதவைத் திறந்தான். அவனுக்குப் பழக்கப்

பட்ட காட்சிகளே எதிர் நின்று விஷமமாய்ச் சிரித்தன.

'சரி; கட்டுரை எழுதும் வேலை யில் முனைவோம்' என்று துருவன் நினைத்தான். மெழுகுவர்த்தி விளக்கைக் கொளுத்தி மேஜைமீது நட்டு வைத்தான்.

மெல்ல மைக்கூட்டில் இறகு பேனாவைத் தோய்த்து, 'ஆப்பிரிக்க வனவேடனொருவனின் நினைவுகள்' என்ற தலைப்பைத் தனக்கே உரிய அழகான கையெழுத்தில் தீட்டினான். அதன் பிறகு கட்டுரைக்குரிய வசனத்தை எப்படித் தொடங்குவதென்று சிந்தித்தான். வேர்க்கும் நெற்றியில் கையை ஊன்றி, வெறுந்தாளை வெறித்துப் பார்த்தவனாக அசைவற்றிருந்தான்.

அவன் சொல்ல விரும்புவதென்ன? ஒன்றும் புலப்படவேயில்லை, அவனுக்கு!

'ஓஹோ! எனக்குப் பழக்கமில்லை. ஏனைய தொழிற் கலை போல இதுவும் கற்க வேண்டிய ஒரு கலை. ஆரம்ப காலத்தில் யாராவது எனக்கு உதவவேண்டும். என் நண்பன் போரஸ்தியரைக் காண்பேன். பத்தே நிமிஷத்தில் கட்டுரையை உருவாக்கித் தருவான்' என்ற முடிவோடு மறுநாள் காலையில் துருவன் உடையணிந்து கிளம்பினான். போரஸ்தியரின் வீட்டை அடைந்தான்.

அப்போதுதான் போரஸ்தியர் வெளியே புறப்பட்டுக்கொண்டிருந்தான். துருவனைக் கண்டதும் ஆச்சரியம் மேலிட்டது அவனுக்கு. ''எங்கே வந்தாய்? என்ன வேண்டும், துருவா?'' என்றான் பிரியத்தோடு.

''வந்து....வந்து....! என்னால் கட்டுரை எழுத முடியவில்லை. அல்ஜேரியாபற்றி வால்டேர் துரை கேட்டாரல்லவா? இதிலென்ன ஆச்சரியம் இருக்கிறது; எனக்குத்தான் எழுதிப் பழக்கம் இல்லையே! சீக்கிரத்தில் பழகிவிடுவேன். ஆரம்பத்தில் கொஞ்சம் உதவி செய்தால், அப்புறம் நான் நிச்சயம் முன்னேறி விடுவேன். கருத்துக்கள் நிறைய இருக்கின்றன. .வெளியிடத்தான் வகை தெரியவில்லை'' என்று தடுமாற்றத்துடன் கூறினான் துருவன்.

போரஸ்தியர் குறும்புச் சிரிப்புச் சிரித்தான். பிறகு, அவன் பூரிப்புடன் நண்பனின் தோளைத் தட்டி, ''துருவா, இப்போது எனக்கு ஒய்வில்லை; அவசரமாக வெளியே போக வேண்டிய வேலை இருக்கிறது. என் மனைவியிடம் செல். அவள் உன் காரியத்தை வெற்றிகரமாக முடிப்பாள்; எழுத்துக் கலையில் அவளை நான் பழக்கியிருக்கிறேன்'' என்றான் போரஸ்தியர்.

அதன் பின், போரஸ்தியர் கீழே இறங்கினான்; துருவன் மேலே போனான்.

அறையில் மதலேன் பஞ்சணை பதித்த ஓர் உயரமான நாற்காலியில் வனப்புடன் உட்கார்ந்திருந்தாள்.

''அதற்குள்ளாகவா வந்து விட்டீர்கள்! கோபித்துக்கொள்வதாக எண்ணுதீர்கள். இது ஒரு சாதாரணக் கேள்விதான்'' என்றாள் மதலேன், உதடுகளில் புன்னகை உதிர.

''வணக்கம், அம்மணி! வந்து.. வந்து..நான் இங்கே வரவே துணியவில்லையம்மா? உங்கள் கணவர்தான், கீழே சந்திக்கும் போது, இங்கே என்னைப் பிடித்துத் தள்ளிவிட்டார்....!'' என்று துருவன் தட்டித் தடுமாறி, தான் அங்கே வந்த செய்தியைக் கூறினான்; மதலேன் மெல்லச் சிரித்துக்கொண்டாள்.

அவன் கூறிய செய்தியையெல்லாம் பொறுமையாகக் கேட்டதும், 'கலகல' என்று குழந்தை போல் கை கொட்டிச் சிரித்தாள். . ''கட்டுரை எழுதித் தருவதற்காக என்னிடமா உங்களை வரச்சொன்னார், என் கணவர்?'' என்று அவள் கேட்ட போது ஆனந்தம் அவள் நெஞ்சை அடைப்பதுபோல் இருந்தது.

துருவனின் ஆசைப்படி ஒரு நல்ல கட்டுரையை உருவாக்க அவள் தன்னாலான உதவியையெல்லாம் செய்ய முன் வந்தாள்.

ஓரளவு எழுதி முடிந்ததும், மதலேன் மெல்லத் துருவனை நெருங்கினாள்.

''என் சிநேகிதியான மாரவல்லி தேவியைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று திடீரென்று விசித்திரமான ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டாள்.

''பிறரை மயக்கும் அதியற்புதமான அழகு அந்தச் சௌந்தரிய தேவிக்கு இருக்கிறது!'' என்று துருவன் தயங்கித் தயங்கிச் சொன்னான்.

''மாரவல்லி தேவி எவ்வளவு வேடிக்கையானவள்! மிகவும் சாமர்த்தியக்காரி; குணவதி. சொல்லப் போனால், அவள் ஒரு நாடோடிப் பெண்; நரிக் குறத்தியைப் போன்ற உள்ளம் படைத்தவள். எப்போதும் எந்த நேரமும் குதூகலம் ஒன்றை மட்டுமே விரும்புவாள். அதனால்தான் அவளுடைய கணவர் அவளை விரும்புவதில்லை. குணத்தை அநுபவியாமல் குறைகளை மட்டும் அவர் கவனிக்கிறார். ம்.... அவள் புருஷர் ரெயில்வே டிக்கட் பரிசோதகர். மாதத்தில் எட்டு நாள் தான் மனைவியோடு இருப்பார். அவளுடன் நீங்கள் நெருங்கிப் பழகினால்தான் அவள் எவ்வளவு குதூகலமானவள், எவ்வளவு நளினமானவள், எவ்வளவு அன்பானவள் என்று தெரியவரும். ஒரு நாள் அவளைப் போய்த்தான் பாருங்களேன்!'' என்று மதலேன் கூறித் துருவனின் ஆசைக்குத் தீபமேற்றி வைத்தாள்.

பிறகு துருவன் அங்கிருந்து வெளியேறினான்.

'பிரெஞ்சு வாழ்க்கை' என்னும் பத்திரிகை நிலையத்துக்கு அன்று பிற்பகல் மூன்று மணிக்குத் துருவன் சென்றான். போரஸ்தியர் வந்து துருவனை அன்புடன் வரவேற்று, தக்க தருணம் பார்த்து, முதலாளியிடம் அழைத்துச் சென்றான். சொன்ன சொல் தவறாமல் துருவன் கட்டுரையைக் கொண்டு வந்ததுபற்றிப் பத்திராதிபருக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிற்று. அன்றுமுதல் துருவனை அந்தப் பத்திரிகையில் ஒரு நிருபராகச் சேர்த்துக்கொண்டார்கள்.

இரண்டு மாத காலம் சென்றது. துருவன் எதிர்பார்த்திருந்த திடீர்ப் பணப் பெருக்கம் கைகூடி வரவில்லை. தன் இழிந்த நிலையை எண்ணி எண்ணி அவன் வருந்தினான்; கவலைப்பட்டான். எந்த வழியில் முனைந்தால், வல்லமை, செல்வம் என்ற இரு பெருஞ் சக்திகளையும் பெற்றுச் சிறந்தோங்கலாம் என்பதையும் அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

படுமோசமான நிருபர் வேலையில் அகப்பட்டுக் கொண்டது போல் அவனுக்குக் கசப்பான ஒரு பிரமை உண்டாயிற்று. அவனுடைய தாழ்ந்த அந்தஸ்துக்கு ஏற்ற மரியாதைதான் அவனுக்குக் கிடைத்து வந்தது. நண்பன் போரஸ்தியர்கூட அவனை விருந்துக்கு அழைப்பதில்லை. 'வா, போ' பாஷையில் உரையாடி நண்பனைப் போல் இருந்தபோதிலும், மிகவும் தாழ்ந்த நிலையிலேயே அவனைப் போரஸ்தியர் நடத்தி வந்தான்.

இந்த நிலையில், ஒரு நாள் இரவு ஓர் உணவு விடுதியில் மாரவல்லி தேவி ஒரு விருந்து நடத்தினாள். அதற்குத் துருவனும் சென்றிருந்தான். விடைபெறும் வேளை நெருங்கியது.

தேவி போதையால் சொக்கித் தன்னை மறந்து தள்ளாடிக் கொண்டிருந்தாள்.

''உங்களுடன் வீடுவரைக்கும் துணைக்கு நான் வரட்டுமா, தேவி?'' என்று கேட்டான் துருவன்.

''என்ன!..உம்.. வாருங்கள்'' என்றாள் தேவி.

இருவரும் போரஸ்தியர் தம்பதிகளுக்குக் கைகுலுக்கி விடையளித்ததும், ஓடும் பெட்டி வண்டியில் அடைபட்டார்கள்.

வண்டி ஓடும்போது, வீதியோரத்தில் நின்ற ரம்மியமான புகை விளக்குகள், வண்டிக்குள் குளுமையான ஒளிக் கதிர்களை வீசின. இருள் சூழ்ந்த வண்டியின் பெட்டிக்குள் சௌந்தரிய தேவியின் அருகிலே அடைபட்டிருந்த துருவன், அந்த யௌவன தேவதை

யின் விகசிப்பான அழகு தன் மனத்தைக் கிளறுவதை உணர்ந்தான்.

'நான் விரும்பினுல் இவள் என்ன செய்வாள்?' - இப்படி நினைத்தான் துருவன். ஆனுல் ஏதேனும் கலாட்டா நேர்ந்துவிட்டால் என்ன செய்வது என்ற பயம் அவன் மனத்தை உறுத்தியது.

சற்று நேரத்தில் தேவி சிறிது சுயநினைவு பெற்றவளாய், அசைவதைத் துருவன் உணர்ந்தான். வறட்சியும் துடிதுடிப்பும் பொறுமையின்மையும் கலந்த அந்த அசைவு, துருவனின் உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரைக்கும் சருமப் படலத்திலே ஒரு விதச் சிலிர்ப்பை உண்டாக்கியது. சட்டென்று தேவியின் பக்கம் திரும்பினுன். பாசப்பரிவோடு அவளுடைய கழுத்தை வளைத்துத் தன் இரு கைகளாலும் பற்றினுன்.

தேவி லேசாக - மிகவும் லேசாக ஒரு சப்தமிட்டாள்! அவள் நிமிர்ந்து திமிறித் துருவனைக் கைகளால் எட்டித் தள்ள விரும்பினுள். ஆனுல் அதிக நேரம் அந்த அன்பின் பிடிப்பை எதிர்த்து நிற்கத் தனக்குச் சக்தியில்லையென்று உணர்ந்து அடங்கியொடுங்கி அந்தக் காதலுக்குக் கட்டுப்பட்டு விட்டாள்!

அதன்பின் மூன்று வாரங்கள் வரை இரு தினங்களுக்கு ஒரு முறை அல்லது மூன்று தினங்களுக்கு ஒரு முறையாகக் காலையிலோ மாலையிலோ துருவன் காதல் பரவசத்தோடு மாரவல்லி தேவியைச் சந்தித்து வந்தான்.

பிறகு கூத்துக்கும் கேளிக்கைக்கும் ஓட்டல் உணவுக்கும் இருவரும் செல்லத் தொடங்கினுர்கள். துருவனிடம் பணவறட்சி ஏற்பட்டபோது, மாரவல்லி தேவியே பணம் கொடுத்து உதவினுள்.

கடைசியில் ஒருநாள், இருவருக்கும் பெரிய சச்சரவு ஒன்று ஏற்பட்டது. ஒருவரையொருவர் பல நாள் வரைக்கும் சந்திக்கவேயில்லை.

துருவன் மிக்கவருத்தம் கொண்டான். மீண்டும் மிகச் சிக்கனமாக வாழத் தொடங்கினுன்.

இதே சமயம், துருவனின் நண்பன் போரஸ்தியர் இருமல் வியாதி முற்றிப் படுத்த படுக்கையாகும் நிலைக்கு வந்துவிட்டான். ஓயாது இருமினுன். பத்திரிகை நிலையத்தில் வேலை செய்வதும் போரஸ்தியருக்கு வெகு கடினமாக இருந்தது.

ஒரு நாள் பத்திரிகைச் செய்திகளுக்காக அவன் விசாரித்து வரச் சொன்ன தகவல்களைத் துருவன் சேகரித்து வராமல் வெறுங்கையை விரித்துக்கொண்டு வரவே, போரஸ்தியர் அளவில்லாத ஆத்திரம் அடைந்தான்.

''ஏய், துருவா! நான் நினைக்காத அளவு நீ மிருகமாக இருக்கிருயடா!'' என்று போரஸ்தியர் சீறினுன்.

துருவனுக்கு அந்த விமரிசனத்தைக் கேட்டதும், நண்பனை ஓங்கி அறையலாம் போல் இருந்தது. 'இரு; உன்னைக் கவனித்துக் கொள்கிறேன்' என்று மட்டிலும் தன் மனத்தில் அவன் கறுவிக் கொண்டான். பளிச்சென்று ஒரு நினைவு அவன் உள்ளத்தில் உதித்தது. 'இரு, இரு! திமிர் பிடித்தவனே! என்னை வைதாயா? உன் பெண்சாதியை என் கைக்குள் போட்டுக்கொண்டு உன்னை ஏமாந்த சோணகிரி ஆக்குகிறேன், பார்! அதுதான் உனக்குச் சரியான பாடமா யிருக்கும்!' என்று தன் மனத்தில் வன்மம் பாராட்டியவனுக, ஆத்திரத்துடன் கைகளைப் பிசைந்துகொண்டு துருவன் வெளியே நடந்தான்.

மறு நாளே அவன் தன் மனத்தை உறுத்திக்கொண் டிருந்த அந்தத் திட்டத்தை நிறைவேற்றிவிட முனைந்தான். அந்த உத்தேசத்தோடு போரஸ்தியரின் மனைவியிடம் சென்றுன்.

துருவனைக் கண்டதும், மங்கை மதலேன் சற்றும் அசையாமல் தலையைமட்டும் திருப்பி, ''வணக்கம், அழகு ராஜா!'' என்று சொல்லி வரவேற்றுச் சம்பிரதாயப்படி கை குலுக்கினுள். துருவனுக்கு நெஞ்சிலே மோகத் தீ விர்ரென்று ஏறியது.

''என்னை ஏன் இப்படி அழகு ராஜா என்று அழைக்கிறீர்களாம்!'' என்று துருவன் கூச்சப் பட்டவன் போல் ஆசையோடு கேட்டான்.

''ம்! அதுவா? போன வாரம் மாரவல்லி தேவியைப் பார்த்தேன். அவள் வீட்டில் உங்களுக்கு இப்படி அழகான பட்டம் கட்டியிருக்கிறார்கள் என்று தெரிந்துகொண்டேன்! ம்..மாரவல்லி தேவி என்றால் நீங்கள் அடிக்கடி போய்ப் பார்ப்பீர்கள்; அவளைப்பற்றியே சதா நினைப்பீர்கள். உம், என்னை எப்போதாவது நினைத்துக்கொண்டால் தான் உண்டு'' என்று பெருமூச்செறிந்தாள்.

துருவன் சிந்தனையில் ஆழ்ந்தான்: 'அந்த மாரவல்லி தேவியை விட இந்தக் குலமங்கை நிச்சயமாகப் பல மடங்கு உயர்ந்தவள் தான்' என்று எண்ணமிட்டான். தான் அடையப் போகும் வெற்றியைப்பற்றி அவன் சிறிதும் சந்தேகிக்கவில்லை.

''மதலேன், நீங்கள் என்ன தான் நினைத்துக்கொண்டாலும் சரி; தப்போ, சரியோ, என் மனத்திலுள்ளதை உங்களிடம் வாய் திறந்து சொல்லாவிட்டால் எனக்கு ஆறுதலே இராதுபோல் இருக்கிறது!..மதலேன், வந்து.. வந்து..உங்கள்மீது எனக்குக் காதல்! அது முற்றி முழுதும் பித்தனாக நான் விரும்பவில்லை'' என்றான் துருவன்.

அதைக் கேட்டதும் மங்கை மதலேன் அணுவளவேனும் அதிர்ந்ததாகவோ, பிரமித்ததாகவோ, மயங்கியதாகவோ காட்டிக் கொள்ளவில்லை. எதையும் லட்சியம் செய்யாதவள் போல் சிரிப்பைத்தான் சிந்தினாள்.

''உங்கள் மனத்தை உறுத்திக் கொண்டிருக்கும் இந்த எண்ணத்தை முன்னமேயே நீங்கள் சொல்லியிருந்தால், உங்கள் மனப் பிராந்தியைத் தெளியவைத்து, நல்லுரைகள் கூறி, நல்ல மனத்துடனே அடிக்கடி இந்த வீட்டுக்குத் தாராளமாக வந்து போகும் படி செய்திருப்பேனே!'' என்றாள் மதலேன், கணீரென்ற குரலில்.

''அப்படித்தான் மனத்தின் பாச உணர்ச்சிக்குக் கட்டளையிடுவதா?'' என்று முனகினான் துருவன்.

அவள் சிரிக்கவில்லை; மிகவும் அமைதியான, ஜில்லிட்ட முகத்துடன், ஒவ்வொரு வார்த்தையையும் அழுத்தந் திருத்தமாக உச்சரிக்கலானாள்: ''துருவா, நான் ஒருகாலும் உம் ஆசைக்கிழத்தி ஆக மாட்டேன்; ஒருபோதும் உமக்குக் கள்ளக் காதலி ஆகமாட்டேன்; ஒருபோதும் அது நடக்கவே நடக்காது. என்ன, நான் சொல்வது காதில் விழுந்ததா? உங்கள் துர் எண்ணத்தில் இனிமேலும் நீங்கள் நிலைத்திருக்க முற்படுவது உங்களுக்கே தீங்கு. ஓர் ஆணும் பெண்ணும் காதல் ஒன்றை முன்னிட்டுத்தான் உறவாட முடியுமா? கெட்ட எண்ணங்கள் இல்லாத தூய்மையான நட்பும் பாசமும் நிலவ முடியாதா? ம்..விஷய விளக்கம் முடிந்தது. துருவா, இனிமேல் நாம் இருவரும் உண்மையான, வேறுவித எண்ணங்கள் இல்லாத சிறந்த சிநேகிதனும் சிநேகிதியுமாக விளங்குவோம்; சரியா?'' என்றாள் மதலேன்.

'அப்பீல்' எடுக்க முடியாத அந்தத் தீர்ப்பின் முன், அடுத்த நடவடிக்கைகள் உபயோகம் இல்லாது உறைந்து போய்விடுமென்று துருவன் புரிந்துகொண்டான்.

உடனே அவன் கையை நீட்டி, ''உங்கள் முடிவுப்படியே நான் வெறும் சிநேகிதன்தான்'' என்றான்.

மதலேனும் மனப்பூர்வமாக அவன் நட்பை நம்புவதுபோல் சம்பிரதாயப்படி தன் கையைக் கொடுத்தாள்.

அவள் கைகளைத் துருவன் நன்றாக முத்தமிட்டு, ''உங்களைப் போன்ற பெண்ணொருத்தி எனக்குக் கிடைப்பாளேயானால், எவ்வளவு பெரிய பாக்கியம் என்று மதித்து அவளை மணப்பேன், தெரியுமா?'' என்று பெருமூச்செறிந்தான்.

அவள் அவன் கரத்தைப் பற்றியபடி சொன்னாள்: ''நீங்கள் கொஞ்சம் அசமந்தமான ஆள்!..

ம்! நீங்கள் உத்தியோகத்தில் முன்னேறுமல் இருப்பதைத்தான் அசமந்தம் என்று குறிப்பிட்டேன்! ம்... உங்கள் முதலாளி வால்டேர் துரையின் மனைவியைப் போய்ப் பாருங்கள். வால்டேர் துரைசானியம்மாள் உங்கள்மீது நல்லபிப்பிராயம் வைத்திருக்கிருள். அந்த அம்மாள் மனம் மகிழும்படி நடந்து கொள்ளுங்கள். பத்திரிகாலயத்தில் நீங்கள் இன்னும் பழைய எளிய உத்தியோகத்திலேயே இருந்து வருவது எனக்குத் தெரியும். பத்திரிகை முதலாளியின் சம்சாரம் மனம் வைத்தால் உங்கள் உத்தியோகம் உயர்ந்துவிடும். நான் சொல்வதை நம்புங்கள்'' என்று மதலேன் ஆலோசனை கூறினுள்.

''மிகவும் நன்றி. நீங்கள் என்னை ரட்சிக்கும் தேவதைதான்!'' என்று துருவன் உச்சி குளிர்ந்தவனுய்ச் சொன்னுன்.

பிறகு துருவன் அவளிடம் விடை பெற்றுக் கதவருகே சென்றதும், ''நீங்கள் எப்போதாவது விதவையானுல், அடுத்த மணமகன் தேர்வுக்கு என் மனுவைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்ருன். இப்படிச் சொன்னதும் குலமங்கை மதலேனுக்குக் கோபம் வருவதற்கு முன்பே, அந்த வீட்டி விருந்து ஒரே பாய்ச்சலில் எடுத்தான் ஓட்டம்!

சில நாளைக்கெல்லாம் போரஸ்தியரின் உடல்நிலை மிக மோசமாய்ப் போய்விட்டது. வைத்தியர் கட்டளைப்படி அவனை அழைத்துக்கொண்டு, ஆரோக்கிய ஸ்தலமான கான் நகருக்கு மதலேன் சென்றுவிட்டாள்.

துருவன் ஒரு நாள் அதிகாலையில் கண் விழித்து எழுந்தான். சந்தைப் பக்கம் சென்று நல்ல பழங்கள் சிலவற்றை வாங்கி வந்தான். அவற்றை வர்ணத்தாள்களில் சுற்றி வெகு தூரத்திலிருந்து விசேஷமாகக் கிடைத்ததுபோலத் தோன்றும்படி செய்து வால்டேர் துரைசானியம்மாளுக்கு அனுப்பினுன்.

மறுநாள் அவனுக்கு இந்தப் பதில் கிடைத்தது: ''துருவன் அவர்களுக்குத் துரைசானியம்மாள் நன்றி செலுத்துகிருள். சனிக்கிழமை தோறும் விருந்தாளியை எதிர் நோக்கி வீட்டிலே இருப்பாள்.''

அடுத்த வாரம் துருவனின் வாழ்க்கையில் மகத்தான இரண்டு மாறுதல்கள் நிகழ்ந்தன. பத்திரிகை நிருபர்களுக்கெல்லாம் துருவனே தலைவனுகப் பதவி பெற்றுன். அவன் இட்டதே இனிக் கட்டளை! மேலும், வால்டேர் துரைசானியம்மாள் அவனை நன்கு மதித்துத் தன் மாளிகையிலே விருந்துண்ண அவனுக்கு அழைப்பும் அனுப்பி விட்டாள்!

முதலாளியின் வீட்டில் துரைசானியம்மாள் கொடுக்கப் போகும் விருந்துக்குச் செல்லவேண்டிய வேளை நெருங்கியதும், துருவன் உற்சாகமாக எடுப்பான உடை அணிந்துகொண்டு கிளம்பினுன்.

பத்திரிகை முதலாளி வால்டேர் துரையின் வீட்டில் முக்கியமான விருந்தினர் பலர் குழுமியிருந்தார்கள்.

அவனுடைய பார்வை சட்டென்று பின்னுல் சென்றது. அங்கே அவனுடைய காதலியான மாரவல்லி தேவி வந்துகொண்டிருந்தாள். அவனுக்குச் சமீபமாகவே வந்துவிட்டாள்.

''வணக்கம், அழகு ராஜா! என்னை உங்களுக்குத் தெரியவில்லையா?'' என்று சற்று உரக்கச் சொல்லித் தேவி சட்டென்று சம்பிரதாயப்படி அவன் கையைப் பற்றிக் குலுக்கினுள். ''இப்போதெல்லாம் என்ன வந்துவிட்டது உங்களுக்கு? ஆளையே பார்க்க முடியவில்லையே!'' என்ருள்.

அதற்குத் துருவன் ஒப்புக்காக ஏதோ பதில் கூறினுன்.

விருந்துண்ணும் வேளை வந்தது. விருந்து சாப்பிடுவதற்காக எல்லாரும் மகிழ்ச்சி ததும்ப ஆசனங்களில் அமர்ந்தார்கள். துருவன் இரண்டு பெண்களுக்கு நடுவே அமர்ந்தான். ஒருத்தி மாரவல்லி தேவி; இன்னெருத்தியோ முதலாளி வால்டேர் துரையின் மூத்த மகள். குமாரி

ரோஸ் என்று பெயர் கொண்ட அவள் ஒரு விகாரமான படைப்பு.

விருந்து மேஜையில் மாரவல்லி தேவியின் அருகே துருவன் அமர நேர்ந்தது, அவனுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. தாளத்தைத் தவறவிடும் வாத்தியக்காரன் போல அவன் தடுமாறினான். போகப் போக அவன் மனம் திடப்பட்டது. விருந்து அருந்தும்போது அவனும் மாரவல்லி தேவியும் அடிக்கடி பார்த்துக்கொண்ட பார்வையிலே பழைய ஆசை உறவு புதிதாக உருவாகிவிட்டது.

"அன்பார்ந்த நண்பரே, தங்கள் மீது நான் நம்பிக்கை வைக்கலாமென்று நீங்கள் சொல்லியிருந்தீர்களல்லவா? ஆமாம்; நான் உங்களிடம் கொடுமையான ஓர் உதவியைக் கேட்கப் போகிறேன். வாங்கும் மூச்சு ஓங்கி அணைந்து பிணக்கட்டையாக மாறும் கட்டத்திலே என் கணவர் இருக்கிறார். இந்த நிலையில் என்னை யாரும் அற்றவளாகத் தனியே தவிக்க விடாது, இங்கே வந்திருக்க வேண்டும். அவர் எழுந்திருக்கும் நிலையிலிருந்தாலும் இன்னும் ஒரு வாரத்தில் அவருடைய உயிரின் தீபம் அணைந்துவிடுமாம்; டாக்டரே இப்படிச் சொல்லிவிட்டார்.

உதவிக்கு வாருங்கள்; தயை செய்து வாருங்கள்.

உங்கள் தோழி
மதலேன் போரஸ்தியர்".

இந்தக் கடிதத்தைத் துருவன் படித்துவிட்டுப் பத்திராதிபர் வால்டேர் துரையிடம் காட்டிய போது, "சரி, சரி. போய் விட்டுச் சீக்கிரமாக வந்துவிடு, துருவா. பத்திரிகைக்கு நீ மிகவும் அவசியம்!" என்று கூறி அனுமதி அளித்தார்.

அடுத்த நாள் மாலை நான்கு மணியளவில் கான் நகருக்குத் துருவன் போய்ச் சேர்ந்தான். போரஸ்தியர் குடும்பம் வாழும் விலாசத்தை விசாரித்துக்கொண்டு உரிய இடத்தை அடைந்தான்.

வீட்டுக்குள் துருவன் நுழைந்த அறை, நீலப் பூக்கள் வேய்ந்த பாரசீகப் பட்டுக் கம்பளம் விரித்து அலங்காரமாக இருந்தது.

பெண்ணொருத்தி உடுத்து வரும் ஆடையின் ரம்மியமான சலசலப்புத் துருவனின் கவனத்தைத் திருப்பியது. ஸ்ரீமதி மதலேன் போரஸ்தியர் அன்புடன் ஆறுதலுக்காகத் தன் இரு கரங்களையும் நீட்டியபடி விரைந்து வந்தாள்.

"எவ்வளவு அன்பானவர் நீங்கள்!" என்று அவள் வாய் மொழிந்தது.

உடனே துக்கம் தாங்காதவளாய், தன்னை மறந்து அவனருகில் ஓடி வந்து அவனைக் கட்டிக் கொண்டாள். அடுத்த கணம் கண்களை நோக்கின கண்கள்!

ஸ்ரீமதி மதலேன் இப்போது கொஞ்சம் வெளுத்திருந்தாள்.

"என் நண்பன் போரஸ்தியர் எப்படி இருக்கிறான்?" என்று கேட்டான் துருவன்.

"அவர் நிலை படு மோசமாகிவிட்டது. தன்னம்பிக்கையையும் அவர் இழந்தே விட்டார். என்னை ஈவிரக்கமற்றுத்தான் உயிரை வாங்குகிறார். உங்கள் வருகையை அவருக்கு அறிவித்திருக்கிறேன். வாருங்கள், உயரச் செல்வோம்!" என்றாள் மதலேன்.

அவளைத் துருவன் பின் தொடர்ந்தான். முதல் மாடியில் ஒரு கதவைத் திறந்தாள் மதலேன்.

அங்கே ஜன்னலருகே சோபா ஒன்றில் அமர்ந்து, கம்பளிப் போர்வைக்குள் உடம்பைச் சுருட்டிக்கொண்டு, அந்திச் சூரியனின் கடைசிச் செங்கதிர் ஒளியில் தோய்ந்தபடி கிடந்த ஒரு நடைப் பிணம் துருவனைப் பார்த்தது: அது போரஸ்தியர்தான் - மங்கை மதலேனின் மணாளன்!

அந்த அறையிலே ஜுர வாடை, மிக்சர் மருந்துகளின் வீச்சம், கரிய தார் முதலியவற்றின் துர்நாற்றம் எல்லாம் சேர்ந்து வீசின.

போரஸ்தியர் மெல்லக் கையை உயர்த்திப் பலவீனமான குரலில், "வந்தாயாடா, துருவா! வா. நான்

சாகப் போவதைப் பார்த்துப் போக வந்தாயா? மிகவும் வந்தனம் உனக்கு!'' என்றான்.

பிறகு திணறிக்கொண்டே, மிகச் சிரமப்பட்டுச் சுவாசம் விட்டான்.

துருவன் மெல்லிய குரலில், ''இங்கே வந்ததிலிருந்து நிலைமை மோசமாய்த்தான் இருக்கிறதோ?'' என்று பரிவுடன் கேட்டான்.

போரஸ்தியர் பொறுமை இழந்தது போலத் தோளைக் குலுக்கி, ''நீயேதான் அதைப் பார்த்துத் தொலைக்கிறாயே! இல்லையா?'' என்றான்.

''பாரீஸ் பட்டணத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த ஊரின் சீதோஷ்ண நிலை ரம்மியமாய் இருக்கிறது'' என்றான் துருவன்.

''நம் பத்திரிகாலயத்திலே ஏதாவது விசேஷம் இல்லையா?'' என்று கேட்டான் போரஸ்தியர்.

''அப்படி ஒன்றும் இல்லை. உனக்குப் பதிலாக ஒருவனைச் சேர்த்திருக்கிறார்கள். அந்த ஆளோ கொஞ்சங்கூடப் பக்குவப்பட்டவனாக இல்லை. நீ துரிதமாகத் திரும்பி வந்துவிடவேண்டும்!'' என்றான் துருவன்.

''நானா! பூமிக்குள் ஆறடி ஆழத்தில் போயல்லவா கட்டுரைகள் வரையப் போகிறேன், இப்போது...'' என்றான் போரஸ்தியர்.

மறு நாள் அதிகாலையில் போரஸ்தியர் முதல்முதலாக வாய் திறந்து கேட்டது, ஒரு நாவிதனை வரவழைக்க வேண்டும் என்பது தான்! ஒவ்வொரு நாளும் அவன் க்ஷவரம் செய்துகொள்வது வழக்கம். அந்த அலங்காரம் முடிந்ததும், போரஸ்தியர் தலை சாய்த்துப் படுத்துவிட்டான். மூச்சு அதிகமாகத் திணறியது. சுவாசம் விட்டுவிட்டுக் கட்டையாக ஓடியது. மதலேன் மிகவும் மிரண்டு விட்டாள். துருவனை எழுப்பிக் கையோடு மருத்துவரை அழைத்து வரச் சொன்னாள்.

துருவனும் ஓடோடிச் சென்று வைத்தியரைக் கையோடு கூட்டி வந்தான். அவர் நோயாளியைப் பரிசோதித்துவிட்டு ஒரு கஷாயம் போடச் சொல்லிச் சில ஆலோசனைகளும் கூறி விட்டுச் சென்றார்.

துருவனும் அவருடன் சென்று உண்மை நிலையை விசாரித்தான்.

பிறகு அவன், மதலேன் போரஸ்தியரிடம் வந்து, ''நாளைக்கு ஆயுள் முடிந்து விடுமாம். டாக்டரே சொல்லிவிட்டார். பாதிரியாரைக் கூப்பிடும்படி சொல்கிறார்'' என்றான்.

அவள் வெகு தயக்கத்துடன் நிதானித்து எல்லாவற்றையும் கணக்கிட்டு விட்டது போல், ''ஆம், அதுவும் நல்லதுதான். அதற்கானபடி அவரை நான் சரிப்படுத்துகிறேன்! அவருடன் பாதிரியார் ஏதோ பேச விரும்புவதாகச் சொல்கிறேன். நீங்கள் ஒரு பாதிரிச் சாமியாரை அழைத்து வாருங்கள்!'' என்றாள்.

துருவன் ஓடிப்போய் ஒரு கிழச் சாமியாரை அழைத்து வந்தான். பாவ மன்னிப்பு அளிப்பதற்காக நோயாளியின் அறைக்குள் பாதிரியார் நுழைந்ததுமே, அந்த இருவரையும் அங்கே தனியே விட்டு விட்டு, அங்கிருந்து ஸ்ரீமதி மதலேன் வெளியே வந்து விட்டாள்.

போரஸ்தியரின் அறைக்குள் பாதிரியார் சென்றபோது, துருவனும் மதலேனும் பூந்தோட்டத்தில் இறங்கிச் சென்றார்கள்.

பூந்தோட்டத்தில் கொத்துக் கொத்தாக ரோஜா மலர்கள் பூத்துக் குலுங்க, சம்பங்கிப் பூக்கள் புன்னகை உதிர்த்திடும் மேடையருகிலே அந்த இருவரும் நடந்து சென்றார்கள். அங்கே மந்தமாருதம் வீசியது.

துருவன் ஸ்ரீமதி மதலேனை உற்று நோக்கியபடி, ''நீங்கள் பாரீஸ் பட்டணத்துக்குத் திரும்பி வரச் சுணங்குமா?'' என்று கேட்டான்.

''இல்லை; காரியம் முடிந்ததும், அங்கே வந்துவிடுவேன். சுமார் பத்து நாளாவது கழிய வேண்டுமே'' என்றாள் மதலேன்.

பிறகு மௌனம்.

மலருக்கு மலர் தாவிப் பறந்து தேனமுது உண்டு செல்லும் ஓர்

அழகிய வண்ணத்திப் பூச்சியை இருவரும் ஆழ்ந்த சிந்தனையோடு கவனித்தார்கள்.

போரஸ்தியரின் அறையில் சாமியார் மரண கால உபதேசம் செய்துவிட்டுச் சென்றார். துருவனும் ஸ்ரீமதி மதலேனும் திரும்பி வந்து அறைக்குள் சென்றார்கள்.

மனைவியைக் கண்டதுமே, போரஸ்தியர் இரு கரங்களையும் விரித்து, ''என்னைக் காப்பாற்று.. கண்ணே, என்னைக் காப்பாற்று.. நான் சாக விரும்பவில்லை.. என்னைக் காப்பாற்று! என்ன செய்யவேண்டுமென்று சொல்லு! உடனே டாக்டரை அழைத்து வா! என்ன மருந்து சொன்னாலும் சாப்பிடுகிறேன்..சாக மாட்டேன். சாகமட்டும் என்னால் முடியாது!'' என்று புலம்பினான்.

அவன் கண்களிலிருந்து பளிங்கு ரவைகளைப்போல நீர்த் துளிகள் உதிர்ந்தன; வாய் பச்சைக் குழந்தையின் வாயைப்போல் சுருங்கியது.

மனைவி மதலேனும் வாய்விட்டு ஓவென்று கதறி அழுதாள். ''அதெல்லாம் ஒன்றுமில்லை. உங்கள் உடம்பு கொஞ்சம் படபடப்பாக இருக்கிறது. நாளைக்குச் சரியாகிவிடும்!'' என்று தேற்றினாள்.

நேரம் நகர்ந்தது. இருவரும் என்ன செய்வதென்று அறியாமல் 'கப்சிப்' என்றிருந்தார்கள். டாக்டர் அனுப்பிய ஒரு நர்ஸ் ஜன்னலோரத்தில் தூங்கி வழிந்தாள்.

அறைக்குள் இனம் புரியாத எதுவோ ஒன்று நிகழ்வதுபோல் இருந்தது. துருவன் பெருமூச்செறிந்தான். அவனுடைய வெகு நாளையச் சகாவான போரஸ்தியரின் கண்கள் அணையும் சுடர்களைப் போல் மூடிக்கொண்டன. போரஸ்தியரின் தொண்டைக் குழியில் ஏதோ ஒரு விம்மல் எழுந்தது. வாய் ஓரத்தில் இரண்டு ரத்த தாரைகள் தோன்றின; அது சட்டையின்மீது வழிந்து ஓடியது. அசைந்துகொண்டிருந்த கைகளும் அசைவற்று, நாடி ஒய்ந்தது. கடைசி மூச்சும் நின்றுவிட்டது.

மதலேன் புரிந்துகொண்டாள். ஓவென்று விம்மியழுது முகத்தில் அறைந்துகொண்டாள். புலம்பினாள். மாண்ட கணவனின் முழங்கால்களில் விழுந்து கதறினாள். திடுக்கிட்ட துருவன் நெற்றியிலும், இரு தோள்பட்டைகளிலும், நெஞ்சிலும் வலக்கையால் தொட்டுச் சிலுவைச் சின்னமிட்டுக் கொண்டான். நர்ஸ் கண் விழித்தாள். ''உயிர் போச்சு!'' என்றாள் நர்ஸ், அநுதாபத்துடன். ''நான் நினைத்த அளவு துரிதமாகிவிட்டது!'' என்றான் துருவன்.

வடிக்க வேண்டிய கண்ணீரெல்லாம் வடித்து, புலம்ப வேண்டிய புலம்பலெல்லாம் புலம்பித் தீர்த்த பிறகு, பிரேத அடக்கத்துக்கான ஏற்பாடுகளைச் செய்ய முற்பட நேர்ந்தது. அதற்காக இரவுவரை அலைந்துவிட்டு, துருவன் கடும் பசியோடு வீடு திரும்பினான்.

மிகவும் வற்புறுத்தலுக்குப் பிறகு, மதலேன் சிறிதளவு உணவை வேண்டா வெறுப்போடு விழுங்கினாள். அதன் பின் போரஸ்தியரின் பிணத்தைக் காவல் காப்பதற்காகத் துருவனும் மதலேனும் அறையில் அமர்ந்தார்கள். அறைக்குள் இரண்டு மெழுகுவர்த்திகள் வெளிச்சம் சிந்தின.

பருவப் பெண்ணும் கட்டுத் தளராத காளையும் அங்கே தனியாகச் சவக்கட்டை யருகே உட்கார்ந்திருந்தார்கள். ஆனால் வாய் திறக்கவில்லை.

குழப்பமான, பூதாகாரமான, நெஞ்சை நெரிக்கும் பாரமான ஒரு பீதி துருவனின் ஆத்மாவிலே கனத்தது!

இருப்பவை அனைத்தும் அணு அணுவாக ஈவிரக்கமில்லாது துரிதமாய்ச் சங்காரமாகிவிடும், பாழின் பயங்கரத்தால்! சில மணி நேரமே உயிர் வாழும் ஈக்கள், சில தினம் வாழும் உயிரினங்கள், சில நூற்றாண்டு இருக்கும் நிலப்பரப்புகள் இவற்றையெல்லாம் பற்றித் துருவன் சிந்தித்தான். இவற்றுக்கிடையே என்னதான் வித்தியாசம்? சிறிது காலம் கூட்டல், குறைத்தல்; அவ்வளவுதானே?

இனி அந்தப் பிணத்தையே பார்க்க முடியாதபடி தன் பார்

வையை அவன் திருப்பிக்கொண்டான்.

பொறுக்க முடியாத ஓர் ஆவல் துருவனைப் பிடித்து வாட்டியது. அவளையே கேட்டு, அவளுடைய அபிப்பிராயத்தை அறிய வேண்டுமென்று அவன் மனம் துடிதுடித்தது. அந்த வீட்டிலே அந்த யுவதியுடன் தனியாக இனி இருக்கவும் முடியாது. நாளை மறுநாள் அவன் புறப்பட வேண்டும். பாரீஸ் திரும்புமுன் தன் எண்ணங்களை அவளிடம் வெளியிட்டு விடுவதே சரி. இல்லையானால் இன்னொருவன் முற்றுகை போட்டுவிட இடங் கொடுத்த தாகிவிடும்! ஆமாம், அதுதான் சரி....

சவம் கிடந்த அறையின் அமைதி ஆழமாக இருந்தது. கடிகாரத்தின் 'டிக் டிக்' ஒலி மட்டுமே அங்கே கேட்டுக்கொண் டிருந்தது.

''மதலேன், உங்களுக்கு மிகவும் களைப்பா யிருக்குமே?'' என்று துருவன் பரிவோடு கேட்டான்.

''ஆமாம். வேதனை என்னை வெலவெலக்கச் செய்துவிட்டது. நான் என்ன செய்வேன்?'' என்றாள் மதலேன்.

துருவன் துயருடன், ''ஆ! தாங்க முடியாத துக்கம் உங்களுக்கு. வாழ்வே முற்றும் மாறிவிட்டது. மென்மையான உங்கள் நிலையும், கபடமில்லாத இதயமும் அதிர்ந்து சரிந்துவிட்டனவே!'' என்றான்.

மதலேன் பதில் சொல்லாது பெருமூச்செறிந்தாள். துருவன் மறுபடியும் தொடர்ந்து சொல்லலானான்: ''ஓர் இளம் பெண் தன்னந்தனியாக இருப்பதென்றால், அது மிகவும் துக்கமானது. இனி நீங்களும் அப்படித்தான் ஆகப் போகிறீர்கள்'' என்றான் துருவன்.

சிறிது மௌனம் நிலவியது. அவள் ஒன்றும் சொல்லவில்லை.

''மதலேன், எந்தச் சமயத்திலும் நமக்கிடையே நிகழ்ந்த உடன்படிக்கையை நினைத்துக் கொள்ளுங்கள். என்னை எப்படி வேண்டுமானாலும் கருதலாம். நான் உங்களுக்குரியவன்!''

அவனை மதலேன் கவலை ததும்பப் பார்த்துத் தன் கையை நீட்டினாள்; ஆண்கவின் எலும்புக் குருத்துக்களில் அசையும் பசையையும் ஆட்டுவிக்கும் சக்தி வாய்ந்த அமுதப் பார்வை அது!

''துருவா, நன்றி! மிகவும் நல்லவர் நீங்கள்; சிறந்தவர் நீங்கள். உங்கள் விஷயத்தில் நான் ஏதேனும் செய்ய முடிந்தால், செய்ய விரும்பினால் செய்வேன்; நம்புங்கள்'' என்றாள் மதலேன்.

துருவன் ஜன்னலை அணுகி, அதைத் திறந்தான். இரவின் மணங்கலந்த குளிர்தென்றல் சிலுசிலு என்று அறைக்குள் நுழைந்தது.

''மதலேன், கொஞ்சம் இப்படி வாருங்களேன்! சுத்தமான காற்றைச் சுவாசிக்கலாம். வெகு ரம்மியமாக இருக்கிறது!'' என்றான் துருவன்.

அவளும் அவனருகே வந்தாள். முழங்கைகளை ஜன்னலில் ஊன்றிக் கொண்டு வெளியுலகின் வனப்பை ரசித்தாள்.

ஒருவர் அருகே ஒருவராக இருவரும் வெகு நேரம் நின்றார்கள்.

கடைசியில் மதலேன் மெல்லத் திரும்பி உட்பக்கம் நகர்ந்தாள். ''கொஞ்சம் குளிரடிக்கிறது!'' என்றாள். சவக்கட்டிலை நெருங்கினாள். துருவனும் அவளைப் பின் தொடர்ந்தான்.

போரஸ்தியர் மீதிருந்து நாற்றம் கிளம்புவதாகத் துருவன் உணர்ந்து கொண்டான். தன் ஆசனத்தைச் சற்று நகர்த்திப் போட்டுக்கொண்டான். அந்த ஊன் வாடையை அவனால் வெகு நேரம் தாங்க முடியாது!

''நாளைக்கே திராவகம் இட்டுவிட வேண்டும்!'' என்றான்.

''ஆமாம். தச்சன் எட்டு மணிக்கு வருவான்'' என்றாள் அவள்.

சவத்தைச் சற்றுக் குறைவாகவே நோக்கினார்கள். சற்று நேரத்துக்கு முன்னாலெல்லாம் அவர்கள் மனம் போராட்டம் அடையவில்லையா? இப்போதோ இந்தச் சவம் எப்போது மறையும் என்று இருந்தது! அவர்களும் ஒரு நாள் அப்படி ஆக வேண்டியவர்கள்தானே?

இருவரும் பேசவில்லை. நடு இரவில் துருவனே முதலில் கண்

ணயர்ந்தான். பொழுது விடிந்ததும் மதலேனைப் பார்த்தான். உட்கார்ந்தபடியே ஒரு போர்வைக்குள் சுருண்டு தன்னை மறந்து அவள் சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்தாள்!

வெளியிலிருந்து வந்த ஒரு சப்தம் துருவனை உலுக்கியது. காவலாளி உள்ளே வந்தான். பொழுது விடிந்துவிட்டது. எதிர்ப்புறத்தில் தூங்கிய யுவதியும் கண் விழித்தாள்.

பிணத்தைப் பார்த்த துருவன் மெய் நடுங்கினான். அடேடே! பிணத்துக்குத் தாடி முளைத்துவிட்டதே! உயிருள்ளவனுக்குப் பல நாள் சென்று முளைக்கும் அளவு இந்தக் கட்டற்றுப் போகும் கட்டைக்கு முளைத்துவிட்டதே! இந்தப் பிரேதத்தில் ஏதோ ஓர் உயிரணுவின் ஊசல்தான் இப்படி இயங்குகிறது! இயற்கையை மீறிய ஏதோ ஓர் அதீத சக்தி இதற்கு உயிரூட்டி எழச் செய்வது போல் இருந்தது; அறிவைக் கலங்க அடித்துப் பீதி அடையச் செய்யும் விசித்திர சம்பவங்கள் நிகழ்வது போல் இருந்தது. துருவனும் அவளும் மிரண்டார்கள்.

பிறகு இருவரும் பதினொரு மணி வரையில் இளைப்பாறினார்கள். பின்பு, பிணத்தை அடக்கம் செய்வதற்காகச் சவப் பெட்டிக்குள் வைத்தார்கள். சடங்குகள் முடிந்ததும், உணவுண்ணத் துருவனும் மதலேனும் எதிர் எதிரே அமர்ந்தார்கள். பழைய வாழ்வுதான் பிணத்தோடு மறைந்தொழிந்துவிட்டதே! இனிப் புது வாழ்வு!

மதலேன் தன்னுடன் சிறிது தோட்டத்தில் உலவிவரத் துருவனை அழைத்தாள். அவனும் அதற்கு இணங்கினான்.

''கேளுங்கள், தோழரே! நான் நன்றாகச் சிந்தித்துவிட்டேன், நீங்கள் சொன்னதைப்பற்றி. ஒரு பதிலும் தராமல் உங்களை அனுப்ப விரும்பவில்லை. சம்மதம் என்றோ, முடியாது என்றோ இப்போது நான் எதுவும் சொல்லமாட்டேன். பொறுத்திருப்போம்; காலம் மாறும். அப்போதுதான் ஒருவரையொருவர் நன்றாக அறிய முடியும். நீங்களும் நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள். திடீர் முடிவுக்கு இடங் கொடுத்துவிடாதீர்கள். துருவா, கல்யாணம் என்பது கட்டிப் போடும் பொன் சங்கிலியல்ல எனக்கு. அது ஆழ்ந்ததோர் அன்பின் உடன்பாடு. நான் எந்த நிலையிலும் சுதந்தரமாக இருக்கவே விரும்புகிறேன். என் நடையுடை பாவனை, செய்கை, நடவடிக்கை, வெளியே செல்வது எல்லாவற்றிலும் என்றென்றும் நான் சுதந்தரமாகவே நடந்து வருவேன். மணமான பிறகு கட்டுக் காவல், பொறாமை, என் நடத்தைபற்றி ஒரு விவாதம் எதையும் நான் சகிக்க முடியாது. என்னை மணப்பவரை உலகம் நையாண்டி செய்யாத விதமாக, என் மணாளரை யாரும் பரிகசிக்காத அளவு என் கடமையைச் சரிவரச் செய்வேன். புரிந்ததா? என்னை மணப்பவரும் அதுபோலவே எந்த விதத்திலும் என்னை அவருக்குச் சமமாகவே கருதி வரவேண்டும். இந்த இடத்திலேயே நீங்கள் முடிவு சொல்ல வேண்டாம்; அது முறையல்ல. நீங்கள் கொஞ்சம் உலாவி வாருங்கள். நான் வீட்டுக்குச் செல்கிறேன். இரவு சந்திப்போம்'' என்றாள் மதலேன்.

துருவன் உடனே அவள் கையைப் பற்றி முத்தமிட்டுவிட்டுப் பதில் பேசாமல் நடந்தான்.

இரவுப் போஜனத்துக்குத்தான் வீட்டுக்கு வந்தான். அவனும் அவளும் தனித்தனியே தங்கள் தங்கள் சயன அறைக்குச் சென்றார்கள்.

மறு நாள் கான் நகரப் பிரதேசக் கொல்லையிலே போரஸ்தியரின் உடல் அடக்கமாயிற்று.

அடுத்த நாள் பாரீஸ் பட்டணத்துக்குத் துருவன் கிளம்பினான். மதலேன் அவனை வழியனுப்ப ரெயில் நிலையத்துக்கு வந்தாள். பிளாட்பாரத்தில் ரெயில் புறப்படும்வரை இருவரும் ஏதேதோ பேசிக்கொண்டு உலாத்தினர்கள்.

ரெயில் புறப்படும் சமயம் வண்டிக்குள் துருவன் சென்று அமர்ந்து ஜன்னல் வழியே தலையை நீட்டினான். வண்டியும் நகர்ந்தது.

பிளாட்பாரத்திலே அவனையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்ற காரிகையைக் கட்டழகன் கண்டான். தன் இரு கரங்களையும் உதடுகளில் அழுத்தி ஓர் அன்பு முத்திரையை அவளை நோக்கி வீசினான்.

அவளும் அதே அன்பு முத்திரையைச் சற்று மனம் தயங்கியபடி அவனை நோக்கி வீசினாள்.

துருவன் தன் பழைய பழக்க வழக்கங்களை மேற்கொண்டு விட்டான்.

கான்ஸ்டாண்டிநோபிள் வீதியிலுள்ள ஒரு கட்டிடத்தில், தெருவைச் சார்ந்தாற்போலுள்ள ஒரு சிற்றறையே அவன் வசிக்குமிடம். அதில் துருவன் பரம சாதுவாக, புதிய நிலைக்குத் தயாராகிறவன் போல வாழ்ந்தான். மாரவல்லி தேவியுடன் வைத்திருந்த தொடர்பைக்கூட ஒரு வரையறைக்கு உட்படுத்திவிட்டான்.

விதவை ஆகிவிட்ட மதலேன் திரும்பி வரவில்லை; அவள் கான் நகரிலேயே தாமதித்தாள். ஏப்ரல் மாத வாக்கில் பாரீஸ் மாநகர் திரும்புவதாகமட்டும் ஒரு கடிதம் அவனுக்கு வந்தது. அதையும் அவன் எதிர்பார்த்திருந்தான். மங்கை மதலேன் தயங்கினாலுங்கூட எப்படியும் அவளை மணந்தே தீருவதென்று துருவன் தீர்க்கமாக முடிவு செய்துவிட்டான். தவிர, தன் எதிர்காலத்துச் செல்வச் செழிப்பில் அவனுக்கு அசையாத தன்னம்பிக்கை இருந்தது. கடைசியாக ஒரு செய்தி அவனுக்கு வந்தது: ''நான் பாரீஸில் இருக்கிறேன். என்னை வந்து சந்தியுங்கள்—மதலேன் போரஸ்தியர்.''

அன்றே அவள் வீட்டுக்குச் சென்றான். அன்புச் சிரிப்பு அதரங்களில் தவழ, அவனை நோக்கி இரு கரம் விரித்து வரவேற்றாள் மங்கை மதலேன். சில விநாடி இருவர் பார்வையும் ஒருவரையொருவர் ஆழம் பார்த்தன.

''நெருக்கடியான நேரத்தில் நீங்கள் உதவிக்கு வந்தீர்கள். நல்லவர் நீங்கள்'' என்றாள் மதலேன்.

''நீங்கள் கட்டளையிடுவதையெல்லாம் சிரமேற்று முடிப்பேன்'' என்றான் துருவன். இருவரும் அமர்ந்தார்கள். பத்திரிகை முதலாளியான வால்டேர் தம்பதிகளைப்பற்றி மதலேன் விசாரித்தாள். பத்திரிகை நிலையக்காரர்களைப்பற்றித் தகவல் கேட்டாள். பிறகு சற்று நேரம் மதலேன் மௌனமாக இருந்தாள். அவளுடைய இனிய புன்னகையிலும் இன்னிசை போல் இருக்கும் குரலோசையிலும், உதிரும் முத்துச் சொற்களிலுங்கூட ஒரு வகை அன்பழைப்பு இருப்பதாகத் துருவன் நம்பினான்.

அவளுக்குத் தன்னை வெகு காலமாகவே பிடித்துப் போயிருப்பதாகப் புரிந்துகொண்டான். ''கேளுங்கள், தோழரே! இன்னும் நான் ஒரு முடிவும் செய்யவில்லை. அந்த முடிவு ஆமோதிக்கும் முறையிலேதான் இருக்கக்கூடும். இறுதி முடிவு தெரியும் வரையில் விஷயத்தை ரகசியமாக வைத்திருக்க வேண்டும்!'' என்றாள். அப்படியே செய்வதாகத் துருவனும் சத்தியம் செய்துவிட்டுக் குஷியாகக் கிளம்பினான்.

அன்று முதல் துருவன் கடினமாக உழைத்தான். சொற்பமாகச் செலவிட்டான். கல்யாண காலத்தில் கையில் காசு வறண்ட நிலை ஏற்படக்கூடாதே என்பதற்காக முடிந்தவரைக்கும் சிக்கனம் செய்து காசு சேர்க்கலானான்.

கோடை கழிந்துபோயிற்று. இலையுதிர் காலமும் உதிர்ந்து சென்றது. துருவனும் மங்கை மதலேனும் பிறர் சந்தேகிக்காத அளவு வெகு சொற்பமாகவே சந்தித்து வந்தார்கள். ஒரு நாள் இரவு துருவனின் உள்ளத்தைத் தொடுமாறு ஒரு பார்வையை வீசிவிட்டு மதலேன் கேட்டாள்: ''நம் திருமணத் திட்டத்தை மாரவல்லி தேவியிடம் சொன்னீர்களா?''

''இல்லை, மதலேன். விஷயத்தைத்தான் ரகசியமாக வைத்துக்

கொள்ளச் சொன்னீர்களே! அப்படி இருக்கும்போது அதைப்பற்றி யாரிடமாவது மூச்சுப் பேச்சு விடக் கூடியவனா நான்?'' என்றான் துருவன்.

''அப்படி யென்றால், இனி இந்தச் செய்தியை வெளியிட்டு விட வேண்டியதுதான். வால்டேர் துரைத் தம்பதிகளுக்கு நான் அறிவித்துவிடுகிறேன். இந்த வாரமே இதைச் செய்துவிடுவேன். சரிதானே?'' என்று கேட்டாள் மதலேன்.

''ஆகட்டும். நாளைக்கே இந்த ஆனந்தச் செய்தியை நானும் பரப்பிவிடுகிறேன்'' என்றான் துருவன்.

''உங்களுக்குப் பிடித்தமானால், நாம் மே மாத ஆரம்பத்தில் திருமணம் செய்துகொள்வோமே?'' என்றாள் மதலேன்.

''மட்டற்ற மகிழ்ச்சி; எனக்குச் சம்மதம்'' என்றான் துருவன்.

மே மாதம் பத்தாந் தேதி வந்தது. அன்றுதான் திரு. காந்தல் துருவனுக்கும் திருமதி மதலேன் போரஸ்தியருக்கும் திருமணம் நடைபெற நிச்சயித்த நாள்.

மண விழாவில் மதச்சடங்கு அவசியமில்லை யென்று புதுமணத் தம்பதிகள் கருதியதால் குருமார் எவரையும் கல்யாணத்தில் பங்கு கொள்ள அழைக்கவில்லை. நேரே மண மக்கள் இருவரும் நகரசபை மன்றத்துக்குச் சென்று மண உடன்படிக்கையை முடித்துக் கொண்டு திரும்பினார்கள்.

துருவன் ஒரு நாள் மாலை வேலை முடிந்து வீடு திரும்பிய போது, மனைவி மதலேனை மனங் குளிரச் செய்ய, பெரியதொரு மலர்ச் செண்டை வாங்கி வந்தான். வீட்டுக்குள் வந்ததும், சாப்பாட்டு அறைப் பக்கம் சென்றான். அங்கே மேஜைமீது மூவர் உண்பதற்கு ஏற்பாடாகி யிருந்தது!

''மதலேன், நீ யாரையாவது விருந்துண்ண அழைத்திருக்கிறாயோ?''

அவள் அவனைத் திரும்பிப் பாராமலே, ''என் தோழர் வொத்ரெக் பிரபு திங்கள்தோறும் இங்கே வந்து விருந்துண்பது வழக்கம்'' என்றாள்.

துருவன் முணுமுணுத்தபடி, ''சரி, சரி! இதோ பார்! உனக்காக ரோஜா மலர்கள் வாங்கி வந்திருக்கிறேன்'' என்றான்.

மதலேன் புன்னகையுடன் திரும்பி, 'நீங்கள் மிகவும் அன்பானவர்!'' என்றாள். அவனை அணைத்தாள். அதிலே அவன் மனம் ஆறுதல் அடைந்தது.

விருந்து முழுவதும் குதூகலமாக நடந்தது. துருவனும், வொத்ரெக் பிரபுவுடன் சகஜமாகப் பழகினான். அவரும் புதுத் தம்பதிகளுடன் வெகு நேரம் உரையாடிச் சென்றார்.

''அவர் நல்லவர் இல்லையா?'' என்று கேட்டாள் மதலேன்.

துருவன், ''ஆமாம்; மிகவும் குஷாலான பேர்வழி'' என்றான்.

மேல்சபை அங்கத்தினர் லரோஷ் மத்தியோ செவ்வாய்க் கிழமைதோறும் இவர்கள் வீட்டுக்கு வந்து விருந்துண்ணும் வழக்கத்தைக் கடைப்பிடித்தார். புறப்படும் போதெல்லாம் துருவன் தம்பதிகளுடைய கைகளை இறுக்கிக் குலுக்கி விட்டுத் தம் அழியா அன்பை அறிவுறுத்திச் செல்வார். அவருடைய கனவெல்லாம் வெளி விவகார மந்திரி பதவியைக் கைப்பற்றுவது தான்! பளிங்கு மனம் படைத்தவர் போல் பழகினாலும், சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி எந்த வேஷமும் அணியத் தயங்காத அரசியல்வாதி. இரண்டு எதிர்க் கட்சிகளில் எதிலும் பட்டும் படாமலும் மகா தந்திரமாக நடந்துகொள்வார். தேர்தல் என்னும் எருக் குவியலிலே கேள்வி முறையின்றி முளைக்கும் பேய்க் குடைகளில் ஒரு ரகம்!

துருவனை இப்போது புதிய கவலை ஒன்று பீடித்தது. பத்திரிகை நிலையத்துக்கு அவன் வந்ததும் வேண்டியவர்களெல்லாம், ''என்னப்பா, ஸ்ரீமதி போரஸ்தியர் சௌக்கியமா?'' என்று விசாரிக்கத் தலைப்பட்டார்கள். ''ஹே, போரஸ்தியரே'' என்ற கிண்டல் மொழியும் அவனைப் பின்தொடர்ந்தது. ஒரு சமயம் பத்திரிகை டைரக்டரின் அறைக்குப் போனான்.

அவர்கூட, ''மன்னித்துக் கொள் ளப்பா! உன்னிடந்தான் பேச வேண்டும். கட்டுரைகளைப் படிக்கும் போதெல்லாம், உன்னையும் காலஞ் சென்ற போரஸ்தியரையும் போட் டுக் குழப்பிக்கொள்கிறேன்! உன் கட்டுரைகளெல்லாம் என்னடா வென்றால், அவன் கட்டுரை மாதிரியே இருக்கின்றன'' என் றார்.

துருவன் பதில் ஏதும் சொல்ல வில்லை. செத்துப்போன போரஸ் தியர்மீதுதான் - தன் மனைவியின் மாஜி கணவன்மீதுதான் - அவனுக் குச் சீற்றம் எழுந்தது.

ஒரு நாள் ஆபீசிலிருந்து வீட் டுக்கு வந்தான் துருவன். அங்கே, மதலேனுடன் பத்திரிகை முதலாளி வால்டேர் துரையின் சம்சாரமும், மாரவல்லி தேவியும் பேசிக்கொண் டிருந்தார்கள். துரைசானியம்மா ளோடு அவளுடைய குமாரத்திக ளும் அங்கே வந்திருந்தார்கள். அவர்களைத் துருவன் உபசரிக்க, முறையாகக் கை குலுக்கிவிட்டுக் கடைசியில் மாரவல்லி தேவியிடம் கை கொடுத்தான். கையைச் சற்று இறுக்கியே குலுக்கினான். அது, 'உன்மீது என்றுமே எனக்குக் காதல்தான்' என்று ரகசியமாகச் சொல்வது போல் இருந்தது. மார வல்லி தேவியின் கை குலுக்கும் அதற்குச் சரியான பதிலே சொல்லி யது.

துருவன் மெல்ல மாரவல்லி தேவியை நோக்கி, ''தேவி, நாம் கடைசியாகச் சந்தித்து எத் தனையோ நூற்றாண்டாகிவிட்டாற் போல் இருக்கிறதே! சௌக்கியந் தானா?'' என்று கேட்டான்.

''ஆமாம்; நீங்கள் எப்படி இருக் கிறீர்கள், அழகு ராஜா?'' என்று தேவி கேட்டுவிட்டு, மதலேன் பக் கம் திரும்பி, ''உன் புருஷனை அழகு ராஜா என்று அழைக்கலா மல்லவா? நீ கோபிக்க மாட்டாயே?'' என்று கேட்டாள்.

''ஏன் கோபிப்பதாம்? உன் இஷ்டப்படியே கூப்பிடு!'' என்றாள் மதலேன்.

அந்தப் பதிலிலே அந்தரங்கக் கருத்தொன்று அமிழ்ந்திருப்பதாக அவளுடைய குரலே எடுத்துக் காட்டியது.

துருவன் அருகில் பத்திராதி பரின் பத்தினியான துரைசானி யம்மாள் வந்து பேசலானாள்: அநாதைக் குழந்தைகளின் உதவி நிதிக்காக எழுத்தாளர் ஜாக்ரிவால் ஒரு கத்திச் சண்டைப் போட்டி நடத்தப் போவதாயும், அதற்கு வால்டேர் துரையவர்கள் வேலை காரணமாக வர இயலாதிருப்ப தாயும் துரைசானியம்மாள் சொன்னாள். தான் அவளுக்குத் துணையாக வரத் துருவன் உத்தரவு கேட்டான். எஜமானியம்மாள் உடனே ஒப்புக்கொண்டாள்.

துரைசானியம்மாள் சென்ற தும் மாரவல்லி தேவி எழுந்தாள். ''நானும் போய் வருகிறேன். அழகு ராஜா'' என்று கை குலுக் கினாள்.

வியாழக்கிழமை வந்தது.

துருவன் குஷியுடன் வால்டேர் துரைசானியம்மாள் வீட்டுக்குச் சென்றான்.

துரைசானியம்மாளைக் கண் ணுற்றபோது துருவனுக்கு ஆச் சரியம் தாங்க முடியவில்லை. அம் மாள் பிரமாதமாக அலங்கரித்துக் கொண்டிருந்தாள். அழகும் இள மையும் அவளிடம் திரும்பியிருந் தன. மெல்லிய ஆடைகளையே உடுத்திருந்தாள்.

எழுத்தாளர் ஜாக்ரிவால் வீட் டின் முன், வண்டிச் சாவடி போல வாகனங்கள் குழுமியிருந்தன. வீட்டுக்குள் அலங்காரமான இடத் தில் எழுத்துலகச் சிற்பிகளும் அரசியல் புலிகளுமான ஆடவரும் பெண்டிரும் குழுமியிருந்தார்கள். கத்திச் சண்டைப் பயிற்சியும் வெகு சிறப்பாக நடந்தது.

காட்சி முடிந்ததும், தன் முத லாளியின் மனையாள் துரை சானியம்மாளை அவளுடைய மாளி கையில் கொண்டுபோய் விட்டு விட்டுத் தன் வீடு வந்து சேர்ந்தான் துருவன். அங்கே மதலேன் ஒரு செய்தியை வைத்துக்கொண்டு துருவனை எதிர்பார்த்திருந்தாள்.

''முக்கியமான செய்தி, ராஜா! மரோக் தேசத்தின் அரசியல் விவ

காரங்கள் மிகவும் குழம்பிக் கிடக்கின்றன. இன்னும் ஒரு மாத காலத்துக்குள் நம் பிரான்ஸ் தேசம் அந்தத் தேசத்தைக் கைப்பற்ற ஒரு படையை அங்கே அனுப்பலாம். இந்தக் காரணத்தைப் பயன்படுத்திக்கொண்டு இப்போதைய மந்திரி சபையைக் கவிழ்க்கவும் ஒரு முயற்சி நடைபெறுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் நம் லரோஷ் மத்தியோ அயல் நாட்டு விவகார மந்திரி பதவியைக் கைப்பற்றிக் கொண்டுவிடுவார்!'' என்றாள் மதலேன்.

''ம்! மதலேன்! நாளை நம் வீட்டில் நடைபெறப் போகும் விருந்துக்கு எல்லாரையும் அழைத்தாயிற்றா?'' என்று கேட்டான் துருவன்.

''ஆயிற்று'' என்றாள் மதலேன்.

அடுத்த நாள் விருந்துக்கு எல்லாரும் வந்திருந்தார்கள். வால்டேர் துரைசானியம்மாள் மிகவும் அமைதியாகத் தென்பட்டாள். சாப்பாடு முடிந்ததும் துரைசானி வெகு துரிதமாக வீடு திரும்ப விரும்பினாள். அவளுக்குத் துணையாக வருவதற்குத் துருவன் உத்தரவு கேட்டான். அவள் வேண்டாமென்று மறுத்தாள். துருவன் வற்புறுத்தினான். கடைசியில் அம்மாள் சம்மதித்தாள்.

தனியாக இருவரையும் சுமந்துகொண்டு மூடு வண்டி நகர்ந்தது தான் தாமதம், துருவன் துரைசானியின் கரத்தை வெடுக்கென்று பற்றி அன்புச் சம்பிரதாயப்படி முத்தமிட்டான்.

''உங்களைக் காதலிக்கிறேன். உங்கள்மீது வற்றாத ஆசை. நான் சொல்வதைக் கேளுங்கள். உங்களைத் தொடப் போவதில்லை. 'காதலிக்கிறேன்' என்ற ஜபத்தை உச்சரிக்கமட்டும் எனக்கு உத்தரவு கொடுங்கள் போதும்'' என்று துருவன் மோக வசனங்களைப் பொழிந்தான்.

துரைசானி அவன் பிடியிலிருந்து தன் கையைப் பிடுங்கிக்கொள்ளாமலே அவன் போக்கில் விட்டு விட்டு, ''ஊஹூம், என்னால் முடியாது! முடியவே முடியாது! என் வேலைக்காரர்கள் எல்லாரும் இருக்கிறார்கள். என்ன சொல்லுவார்களென்பதைச் சிந்தித்துப் பார், துருவா! ஊஹூம், ஐயோ, அம்மாடி!'' என்றாள்.

துருவன் மேலும் கெஞ்சியவனாய், ''நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது! உங்களைப் பார்க்காமல் நான் உயிர் வாழவே முடியாது! நாளைக்கு அவசியம் உங்களைச் சந்திப்பேன்!'' என்றான், உறுதியான குரலில்.

அந்தச் சமயம் கோச்சு வண்டி துரைசானியம்மாளின் வீட்டை நெருங்கிவிட்டது. அவள் சட்டென்று, ''நாளைப் பிற்பகல் மூன்றரை மணிக்குத் திரினீதே தேவாலயத்துக்கு வருவேன்'' என்று சொன்னாள்.

மறு நாள் குறித்தபடி தேவாலயத்தில் துருவன் காத்திருந்தான். வந்துவிட்டாள் வால்டேர் துரைசானியம்மாள்.

துருவன் எழுந்தான்; அவளை நெருங்கினான். துரைசானி கை நீட்டாமல், ''கொஞ்ச நேரத்தில் நான் வீடு திரும்பியாக வேண்டும். என் பக்கத்திலேயே பிரார்த்தனை செய்வதுபோல மண்டியிட்டு வணங்கும். யாரும் நம்மைச் சந்தேகித்து விடக்கூடாது!'' என்றாள் தாழ்ந்த குரலில்.

அவள் முகத்தில் மெல்லிய திரை தொங்கியது. துருவனும் அவளருகே மண்டியிட்டு வணங்கினான். இருவரும் தலை கவிழ்ந்து பிரார்த்திப்பதுபோல் இருந்தார்கள்.

துருவன் மெல்லிய குரலில், ''மிகவும் நன்றி! உங்களை நான் பூஜிக்கிறேன்!'' என்றான்.

அவன் அருகில் இருந்த துரைசானியின் தோள்கள் நடுங்கின. அவளுடைய குரல் கம்மிக் கரகரத்தது. அடித் தொண்டை துடிதுடித்தது. ''நானுந்தான் உம்மைக் காதலிக்கிறேன், துருவா!'' என்று சொல்லி விட்டாள் துரைசானி.

படீரெனத் தலையில் அடிபட்டது போல் துருவன் துள்ளிக் குதித்

தான். ''ஆ தெய்வமே!'' என்று பக்தி பரவசமாக மொழிந்தான்.

ஆனால் துரைசானி சட்டென்று பல்லைக் கடித்துக்கொண்டாள். ''ஐயையோ! இப்படியும் நான் உம்மிடம் சொல்வேனா? பாவி ஆகிவிட்டேனே! நான் இரண்டு புத்திரிகளுக்குத் தாய்!'' என்று முகத்தைக் கைவிரல்களுக்கிடையே மறைத்துக்கொண்டு வால்டேர் துரைசானி அழுதாள். அவளுக்கு மெய்யெல்லாம் சிலிர்த்தது.

துரைசானி மீண்டும் பிரார்த்தனையில் மூழ்கினாள். 'துருவனை இனித் திரும்பியும் பார்க்கக் கூடாது' என்று திட சங்கல்பம் செய்துகொள்வதுபோல் தன் இரு கண்களையும் இறுக மூடிக்கொண்டாள். மீண்டும் மீண்டும் அவளுடைய பெண்மனத்தில் படமெடுக்கும் அவன் உருவை விரட்டிவிட முயன்றாள். மனக் கண்ணில் தெரியும் அந்த உருவத்தின் மீது மல்யுத்தம் பிடித்தாள். ஆனால், நைந்த அவள் இதயத்தில் தெய்வத்தின் திருக்காட்சி தோன்றுவதற்குப் பதிலாகக் கட்டழகனின் முறுக்கிவிட்ட மீசைதான் தோன்றிச் சித்திரவதை செய்தது!

துருவன் சாப்பிடுவதற்காகத் தன் வீட்டுக்குச் சென்றான். அங்கே அவன் மனைவி மதலேன் அவனை எதிர்பார்த்துத் துடித்துக் கொண்டிருந்தாள்.

''துருவா, தெரியுமா சேதி? நம் லரோஷ் மந்திரி ஆகிவிட்டார்!'' என்று ஆனந்த பரவசத்துடன் சொன்னாள்.

அப்போது இலையுதிர் காலம். 'பிரெஞ்சு வாழ்க்கை'ப் பத்திரிகையின் மூலம் துருவன் தலைசிறந்த எழுத்தாளனாகப் பிரசித்தி அடைந்திருந்தான். அவனுடைய அரசியல் விவாதங்கள் ஆணித்தரமாக அமைந்திருந்தன.

பிரான்ஸ் தேசம் வட ஆப்பிரிக்க அரபு நாடுகளை ஆக்கிரமிப்பதற்காகத் தீவிர நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருந்த காலம் அது. அரசியல்வாதிகளுடன் அதிகத் தொடர்பு வைத்திருந்த 'பிரெஞ்சு வாழ்க்கை' நுட்பமான சில தகவல்களை வெளியிட்டு வரவே ஜனத் திரளின் பேராதரவைப் பெற்றது. அந்தப் பணியில் துருவனின் பங்கு மகத்தானதென்று பத்திராதிபர் வால்டேர் துரையே மதித்திருந்தார்.

வெளிநாட்டு மந்திரி பதவியைக் கைப்பற்றிய லரோஷ் மத்தியோவும், வால்டேர் துரையும் அத்தியந்த நண்பர்களானார்கள். துரையும் மேல் சட்ட சபை அங்கத்தினர்தான். ஆனால் சட்ட சபையிலே துரை தம் வாயைத் திறக்கமாட்டார்! அவர் மூளைமட்டும் தீவிரமான திட்டங்கள் போட, அந்தத் திட்டங்களெல்லாம் மந்திரி சபையால் வெளிவந்து அமலாகிக்கொண்டிருக்கும். கைப்பற்றப் போகும் மரோக் ராஜ்யத்தில் உள்ள ஒரு பித்தளைச் சுரங்கத்துக்கு முதலாளியாக வரவும் வால்டேர் துரை உள்ளூறத் திட்டம் போட்டிருந்தார்.

துருவனின் மனைவி மதலேனே அரசியலில் ஒரு தலையாக விளங்கினாள். எப்போது பார்த்தாலும் அவள் வீட்டில் பெரிய மனிதர்கள் கூடியிருந்தார்கள். மந்திரி லரோஷ் அவளுடைய வீட்டுக்கு வாரம் இரு முறை வந்து விருந்துண்ணும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார்.

துருவன் அன்று மாலை நான்கு மணிக்குக் கான்ஸ்டாண்டிநோபிள் வீதியிலுள்ள தன் வாடகையிடத்தில் தன் ஆசை நாயகியான மாரவல்லி தேவியைச் சந்திக்க ஏற்பாடு செய்திருந்தான். அங்கே அவளை வாரத்தில் திங்கள், வெள்ளி இரு தினங்களும் தவறாமல் தனித்துச் சந்திக்கும் வழக்கத்தை முறையாக மேற்கொண்டிருந்தான். அதைப்பற்றியே சிந்தித்தபடி பத்திரிகை நிலையத்துக்குச் சென்றான், கட்டுரை ஒன்று வரைவதற்காக!

அங்கே வால்டேர் துரைசானியம்மாளின் ரகசியத் தந்தி ஒன்று அவனை எதிர்நோக்கிக் காத்திருந்தது: ''இன்று கட்டாயம் உன்னுடன் பேசவேண்டும். மிகமிக முக்கியம். கான்ஸ்டாண்டிநோபிள்

வீதியில் பகல் 2 மணிக்கு என்னை எதிர்பார். உனக்கு மகத்தான உதவி ஒன்றை நான் செய்ய முடியும்.''

துருவனிடம் அலாதியான நட்புடன் பழகி வரவே துரைசானி விடாப்பிடியாக ஆசைப்பட்டாள். ஜன சஞ்சாரமற்ற ஒரு தெருக் கோடியிலே, ஒரு கடையிலோ ஒரு பூந்தோட்டத்தின் மூலையிலோ தன்னை வந்து பார்க்கும்படி ஓயாது அவனுக்குத் தந்திச் செய்தி அனுப்பியபடி இருந்தாள்.

அவன் எந்த விதமாகத் துரைசானியைப்பற்றி நினைத்திருந்தானே, அதற்கு நேர் விரோதமான முறையில் அந்த அரைக் கிழவி நடந்துகொண்டாள். தன்னுடைய பழைய காலத்து மோகனுஸ்திரங்களினுல், அவனை மயக்கி மகிழ்வூட்டப் படாத பாடு பட்டாள்.

அவர்கள் இருவரும் தனித்திருக்கும்போது, அவளுடைய அன்புப் பெருக்கைக் சகிக்க முடியாமல் துருவன் அவஸ்தைப்படுவான்; மருகித் திணறுவான். 'கைதி போல் இவளிடம் மாட்டிக் கொண்டோமே' என்று வேதனைப் படுவான். துரைசானியோ அளவற்ற பாசப் பிரேமையோடு, ''என் எலியே! என் நாய்க் குட்டியே! என் பூனையே! பொன் நகையே! நீலப் பறவையே! பொக்கிஷமே!'' என்றெல்லாம் அவனைச் செல்லமாகக் கூப்பிடுவாள்; அவையெல்லாம் அவளிடம் துருவனுக்கு அளவில்லாத அருவருப்பைப் பெருக்கின.

''உன்னை எவ்வளவு காதலிக்கிறேன், பையா! நீயும் என்னை அவ்வளவு காதலிக்கிருயா? குழந்தை'' என்று அடிக்கடி செல்லமாகத் துரைசானி சொல்லுவாள். 'இந்தா', 'பையா', 'குழந்தை!' என்ற வார்த்தையையெல்லாம் அவள் வாயால் கேட்கும்போது, 'என்னடி, பாட்டியே!' என்று பதில் கூறவேண்டும்போல் துருவனின் மனத்தில் எரிச்சல் எடுக்கும்.

''உன்மீது மிகவும் பிரேமை செலுத்துகிறேன், பையா! உன்னுடைய இந்தச் சின்னஞ் சிறிய நாயகியிடம் பிரேமை காட்டு'' என்று கரகரக்கும் குரலில் அவள் குழைவாள்.

துருவனுக்கு அந்தச் சமயங்களிலெல்லாம், ''சத்தியமாக நீ அந்த நிலையில் இல்லை!'' என்று சொல்லிவிட்டு, அங்கிருந்தே ஓடி விடவேண்டும் போல் இருக்கும்!

அன்று துரைசானியிடமிருந்து வந்த தந்தியை மீண்டும் ஒருமுறை துருவன் வாசித்துப் பார்த்தான். கான்ஸ்டாண்டிநோபிள் வீதியிலுள்ள ரகசிய அறைக்கு முக்கியமான செய்தி சொல்ல, அவனைப் பகல் இரண்டு மணிக்கு வரும்படி தந்தியில் குறிப்பிட்டிருந்தாள். அந்த நேரத்தில் அவள் அங்கே வந்து பார்க்காமல் இருக்க மாட்டாள் என்றும் தோன்றியது. அதை நினைத்ததும் துருவனுக்கு எரிச்சல் மூண்டது. ''இவளென்ன அவ்வளவு முக்கிய விஷயம் சொல்லப் போகிருள், கிழக் குரங்கு! பழைய பல்லவியைத்தான் படிப்பாள். நான்கு மணிக்கு என் மாரவல்லி தேவி அங்கு வருவாளே! அதற்கு முன் எப்படியும் இவளை அங்கிருந்து துரத்தியாக வேண்டும். ஆம்; என்ன உயிர்வாதை இந்தப் பெண்கள் தான்!'' என்று துருவன் தன் மனத்துக்குள் சொல்லிக்கொண்டான்.

துருவன் மனத்துக்குள் துரைசானியைத் திட்டியபடி சந்திப்புக்குச் சென்றுன். ''அவள் மட்டும் விஷயம் இல்லாமல் என் ரகசிய வீட்டுக்கு வரட்டும், காட்டுகிறேன் என் புத்தியை!'' என்று கறுவியது துருவனின் உள்ளம். ரகசிய அறைக்குத் துருவன் வந்து சேர்ந்த சிறிது நேரத்துக்கெல்லாம் துரைசானியும் அங்கே வந்து சேர்ந்தாள்.

''என் தந்தி கிடைத்ததா? என்ன அதிருஷ்டம் பாரேன்!'' என்று துரைசானி ஆவலுடன் குழைந்தாள். துருவனே எரிச்சலுடன், ''ஆமாமாமாம்! சட்டசபைக் கூட்டத்துக்குக் கிளம்பிக் கொண்டிருக்கும்போது தந்தி கிடைத்தது. எதற்காக என்னை

இங்கே வரச் சொன்ஞய்?'' என்று இரைந்தான்.

அவள் சிரித்தபடி கட்டிலருகே சென்று அமர்ந்தாள். துருவன் முகம் சுளித்தான்; எரிச்சலாகப் பேசினுன்.

அவனுடைய மாறுதலைக் கண்டதும் மிதிபட்ட பெண்நாய்போல் துரைசானி பயந்து மருண்டு அவனருகே வந்தாள்.

''துருவா, என்னிடம் கடுமையாக நடந்துகொள்கிருயே! நான் என்ன செய்தேன் உனக்கு? உனக்காக நான் எவ்வளவு கஷ்டப்படுகிறேன், தெரியுமா?'' என்ருள் துரைசானி.

''ஆரம்பித்து விட்டாயல்லவா, உன் சங்கீதத்தை?'' என்று சீறினுன் துருவன்.

அவள் அவனை நோக்கிப் பரிதாபகரமான குரலில், ''துருவா, என்னை இப்படிக் கொடுமையாக நடத்துவதற்காக என் மனத்தைக் கெடுத்திருக்க வேண்டியதில்லையே? நான் முன்பு இருந்த மாதிரி சௌபாக்கியவதியாகவே இருக்க விட்டிருக்க வேண்டும்! கோவிலிலே நீ பேசினது, சத்தியம் செய்தது, என்னை இங்கே முதல்முதல் வரும்படி அழைத்தது எல்லாம் உனக்கு நினைவிருக்கின்றனவா? இப்போது இந்த மாதிரி பேசுகிருயே! அட கடவுளே, கடவுளே, என்னை எவ்வளவு வதைக்கிருய்!'' என்று புலம்பினுள்.

துருவன் ஆத்திரத்துடன் படீரென்று காலைத் தரையில் உதைத்து, ''இந்தப் பழைய பாட்டையே திருப்பித் திருப்பிக் கேட்காத நிலையில் ஒரு நிமிஷங்கூட உன்னைக் காண முடியவில்லையே! என்னவோ பாவமறியாத கன்னி வயசிலே உன் மனத்தை நான் பாழாக்கிவிட்டது போலவும், நீ என்னவோ தேவகன்னிகை மாதிரி சூதுவாது தெரியாதவள் போலவுமல்லவா நினைத்துக்கொண்டு பேசுகிருய்! உன் கைப்பிடிக்குள்ளேயே நான் சாகும் பரியந்தம் அடிமை போல் கட்டுப்பட்டிருக்க வேண்டியதில்லை. உனக்கொரு குடும்பம் உண்டு; நாயகன் உண்டு. எனக்கொரு குடும்பம் உண்டு; பெண் சாதியும் உண்டு. நீயோ நானே சுதந்தரமா யில்லை! முன் பின் யோசித்து நெருங்கிப் பழகாமல் எதிர்பாராதவிதம் க்ஷணப் பித்தமாய் ஏதோ ஓர் எண்ணத்துக்கு அடிமைப்பட்டு அறிவிழந்தோம்; அவ்வளவுதான்! விஷயம் அதோடு முடிந்துவிட்டது!'' என்ருன்.

''ஐயோ, துருவா....''

''இதற்குத்தான் கூப்பிட்டாயோ? வந்தனம்; நான் போகிறேன்!'' என்று விர்ரென்று கிளம்பினுன் துருவன்.

அவள் வழி மறித்தாள். பேசும் போது அவள் குரல் நடுங்கியது.

''இல்லை, இல்லை! துருவா, சற்று நில்! நான் உனக்கு ஒரு செய்தி - அரசியல் செய்தி - சொல்லவேண்டும்..50 ஆயிரம் பிராங் காசு சம்பாதிக்கும் வழி சொல்ல வந்தேன்.''

அதைக் கேட்டதும் துருவன் சாந்தமாக, ''அப்படி யென்ருல் என்ன?'' என்று கேட்டான்.

''சொல்கிறேன், துருவா! கவனமாகக் கேள்: மத்தியோ அயல் நாட்டு விவகார மந்திரி பதவிக்கு வந்ததும், மரோக் ராஜ்யத்தின் ஒரு நகரான டான்ஜர்மீது போர்ப் படை அனுப்புவதென்று வால்டேர் துரையும் அவரும் முடிவு செய்துவிட்டார்கள்; அதற்கு முன்கூட்டியே அந்த மரோக் தேச ஸ்டேட்களின் பெயரால் உள்ள 'பங்கு மார்க்கெட்' கடன் பத்திரங்களை இவர்களே வாங்கிச் சேர்க்கத் தலைப்பட்டார்கள். அவற்றின் மதிப்பு இப்போது 74, 75 பிராங்காக இறங்கிவிட்டது. பிறர் சந்தேகிக்காதபடி ரகசிய ஆட்களைக் கொண்டு அவற்றை வாங்கிவிட்டார்கள். இப்போது மரோக் ராஜ்யத்திலே நம் தேசக் கொடியைப் பறக்கவிட்டதும், அரசாங்கம் அந்தக் கடன் பத்திரங்களுக்குப் பூர்ண உத்தரவாதம் அளிக்கும். நீ புரிந்துகொண்டாயோ?''

''திட்டம் பிரமாதமானதுதான். இந்தக் கழிசடை மந்திரியார் லரோஷ் இருக்கட்டும். இவரை

நான் சரியானபடி கவனிக்கிறேன். என்றாலும், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு லாபம் அடைவது சாமர்த்தியந்தான்'' என்றான் துருவன்.

''நானும் அதைத்தான் நினைக்கிறேன். நீயும் கொஞ்சம் அந்தக் கடன் பத்திரங்களை வாங்கி வைத்தால், பின்னால் அவற்றின் மதிப்பு உயர்ந்து நிறைய லாபம் கிடைக்கும்'' என்றாள் துரைசானி.

''வாங்கலாம். ஆனால், என் கையில் பணம் இல்லையே.''

''பத்தாயிரம் பிராங் காசுக்கு நான் உன் பெயருக்கு வாங்குகிறேன். லாபத்தை நீ அடை. நான் போடும் பணத்தை மட்டும் திருப்பித் தந்துவிடு'' என்றாள் துரைசானி.

அதற்கு ஒருவாறு சம்மதித்தான் துருவன்.

உடனே கிழவி கொஞ்சிப் பேசத் தயாரானாள்.

சிறிது அசந்தால் போச்சு! மெல்ல அவளைத் தட்டிக் கழிப்பது துருவனுக்குப் பெரும்பாடாய்ப் போயிற்று. அவளை அனுப்பிவிட்டுத் துருவன் வீடு சேர்ந்தான்.

இந்தச் சமயம் வொத்ரெக் பிரபு இறந்துவிட்டார். பிரபுவின் பிரேத அடக்கத்துக்குச் சென்ற துருவனும் மதலேனும் அது முடிந்ததும், மாதாகோயிலிலிருந்து மெல்ல வெளியே நடந்தார்கள்.

துருவன் தனக்குத் தானே பேசிக்கொள்வதுபோல, ''உண்மையிலேயே இது பிரமிக்கத் தக்கதுதான்!'' என்றான்.

''என்ன, ராஜா?'' என்றாள் மதலேன் மெல்லிய குரலில்.

''காலமான வொத்ரெக் பிரபு நமக்கு ஒரு சொத்தோ காசோ விட்டுச் செல்லவில்லையே!'' என்று குறைப்பட்டான் துருவன்.

அதைக் கேட்டதும் குபீரென மதலேனுக்கு முகம் சிவந்தது. ''நமக்கேன் அவர் சொத்து விட்டுச் செல்லவேண்டும்? ஒரு காரணமுமில்லையே! நாமென்ன உறவினர்களா?'' என்றாள் மதலேன்.

பின்னால், வொத்ரெக் பிரபுவின் மாண உயில் சம்பந்தமாகத் திருமதி மதலேனைப் பத்திரக்காரர் அழைத்தார். தம்பதிகளுக்கு உயிலின் வாசகத்தை அவர் வாசித்துக் காட்டினார்.

''இதன்கீழ்க் கையொப்பமிடும் வொத்ரெக் பிரபு என்ற நான், உடலும் உள்ளமும் பூர்ண ஆரோக்கியத்தோடு, பரிசுத்தமாக இருக்கும் நிலையில், என் இறுதி விருப்பங்களை இங்கே வெளியிடுகிறேன். எனக்கு நேரடியான வாரிசுகள் இல்லாததால், ஆறு லட்சம் 'பிராங்' ரொக்கமும் ஐந்து லட்சம் 'பிராங்' மதிப்புள்ள சொத்தும் அடங்கிய என் ஆஸ்தி முழுவதையும் திருமதி மதலேன் துருவனுக்கு எந்த வித நிபந்தனையும் ஈடுமின்றி வழங்குகிறேன்.''

மதலேன் முகம் வெளுத்துப் போய்த் தன் பாதங்களையே பார்த்துக்கொண் டிருந்தாள். பிரபுவின் உயில் கணவன் பெயருக்கு இராமல் மனைவியின் பெயருக்கு இருப்பது சிரிப்புக்கு இடமா யிருக்கிறதே என்று துருவன் அவமானப் பட்டவன்போல் தோன்றினான்.

பின்பு துருவன் மறு நாள் வருவதாகப் பத்திரக்காரரிடம் சொல்லிவிட்டு, அங்கிருந்து மதலேனுடன் தன் வீட்டுக்குக் கிளம்பினான். வீட்டுக்கு வந்ததும் துருவன் டக்கென்று கதவைத் தாழிட்டான். தொப்பியைக் கழற்றிக் கட்டிலில் வீசினான்.

''மதலேன், நீ வொத்ரெக் பிரபுவின் ஆசைநாயகியாக இருந்தாயோ?''

''ஐயோ! நானா?''

''ஒரு பெண் அப்படி ஆகாத வரைக்கும் சொத்து முழுவதையும் அந்தப் பிரபு தந்திடுவானோ?'' என்று சீறினான் துருவன்.

அதைக் கேட்டதும் மங்கை மதலேனின் மெல்லிய உடல் நடுங்கியது. துணிகளைப் பற்றியிருந்த ஊக்குகளைக்கூட அவளால் கழற்ற முடியவில்லை. சிறிது சிந்தித்துவிட்டு அவள் ஆத்திரமான குரலில் பேசினாள்: ''நீங்கள் பைத்தியமாகி விட்டீர்கள். 'அவர் ஏதாவது உனக்கு விட்டுச் சென்றாரா?' என்று நீங்களே கேட்கவில்லையா? அப்படி

ஆசைப்படவில்லையா?'' என்று சீறினுள் மதலேன்.

துருவன் அவளை நோக்கி, அழுத்தந் திருத்தமான குரலில், "ஆமாம்; அந்த மகாப் பிரபு எனக்கு எழுதி வைத்துவிட்டுச் சாகலாம்; எனக்கு - உன் புருஷனுக்கு - உயில் எழுதலாம்! எனக்கு என் சிநேகிதர் உயில் எழுதலாம். விழுந்ததா காதில்? ஆனல் உனக்கு அல்ல; நீ என் மனைவி; உனக்கு அந்தப் பிரபு உயில் எழுத எவ்வித நியாயமும் இல்லை. அந்த உயிலை நீ ஒப்புக்கொள்ளக் கூடாது'' என்று கத்தினன்.

''மிகவும் நல்லதாயிற்று! இப்போதே பத்திரக்காரரிடம் சென்று விஷயத்தை அறிவித்துவிடலாமே? சொத்திலே ஒரு சல்லிகூட நமக்கு வேண்டாமென்று கூறிப் பிரபுவின் உயிலை விட்டெறிந்து விடலாமே?'' என்ருள் மதலேன்.

துருவன் மெல்ல உலவியபடி, ''ஆமாம்! பத்து லட்சம் போனல் போகிறது. அந்தக் கிழட்டுப் பிரபு அவனுடைய ஆஸ்தியை எனக்குச் சரிபாதி யாகவும் உனக்குச் சரிபாதியாகவும் எழுதி வைத்துவிட்டுப் போயிருந்தால், ஒரு பழிச் சொல்லும் நேரிடாது!'' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டான்.

மதலேன் கோபமுற்ற குரலில், ''சரி, சரி! எனக்கு எல்லாம் புரிந்து விட்டது! பிரபுவின் ஆஸ்தியில் உங்களுக்குச் சரிபாதி பங்கு தர நான் தயார்'' என்ருள்.

இந்த முடிவுப்படியே மறு நாள் பிரபுவின் உயிலில் தம்பதிகள் இருவரும் கையெழுத்திட்டு ஆஸ்திகளையும் தொகையையும் சமமாக அடைந்தார்கள். துருவனின் ஆனந்தம் அணைகடந்தது. 5 லட்சத்துக்கு இன்று அவன் அதிபன்! தன் மனையாளுக்குத் தங்கச் சங்கிலி ஒன்று வாங்கிப் பரிசளித்தான். தனக்கு ஒரு தங்கக் கடிகாரம் வாங்கினன். அதிலே தன் பெயரைச் செதுக்கச் செய்து, பெயருக்கு மேல் பிரபுவின் சின்னத்தையும் பொறிக்கச் செய்தான்.

மதலேனுக்கு அது சிரிப்பைக் கிளப்பியது. துருவன் சரியான ஆள்தான் என்பதை உணர்ந்து கொண்டாள். இருவரும் பழைய அன்பில் மிதந்து களித்தார்கள்.

மரோக் ராஜ்யத்தைப் பிரான்ஸ் தேசம் ஆக்கிரமித்து இரண்டு மாதங்கள் பூர்த்தியாயின. டான்ஜர் நகரின் ராணியாகிவிட்ட பிரான்ஸ் தேசம், மத்தியதரைக் கடலைச் சார்ந்த ஆப்பிரிக்கப் பிரதேசங்கள் அனைத்தையும், திரிப்போலி ராஜ்ய எல்லை வரையில் தன் உடைமை ஆக்கிக்கொண்டது. வென்ற நாடுகளிலே வழக்கில் இருந்த கடன் பத்திரங்கள் அனைத்துக்கும் உத்தரவாதம் அளித்தது!

அந்த உத்தரவாத சம்பவத்தினல் பிரான்ஸ் தேசத்து மந்திரிகள் இருவர் பல கோடி 'பிராங்' பணம் சம்பாதித்துக் குவித்து விட்டதாக ஊரெங்கும் பேச்சுப் பரவியது. மந்திரியார் லரோஷ் மத்தியோவின் பெயரே அந்தப் பேச்சில் முக்கியமாக எங்கும் அடிபட்டது.

துருவன் வேலை பார்க்கும் பத்திரிகையின் முதலாளியான வால்டேர் துரை மிகவும் நிமிர்ந்து விட்டார்! கடன் பத்திரங்கள் வாயிலாக 3 கோடி; பித்தளைச் சுரங்கத்தின் மூலம் 10 கோடி; படையெடுப்புக்கு முன்பு மிகவும் தாழ்ந்த விலையில் வாங்கிச் சேர்த்த நிலப்பரப்புகளை விற்றதில் பல கோடி-இவை எல்லாம் பிரசித்தமாயின, பாரீஸ் பட்டணம் முழுவதும்!

சில நாட்களில் வால்டேர் துரை உலகில் ஒரு பெரிய ஆள் ஆகிவிட்டார். இப்போது வால்டேர் துரை மாபெரும் யூதப் பிரபு!

வால்டேர் துரையின் வீட்டுக்குத் துருவன் அடிக்கடி சென்று வந்தான். ஆனல் மதலேன் மட்டும் பல சமயம் சாக்குப் போக்குச் சொல்லி வீட்டிலேயே தங்குவதாகக் கூறி, கணவனை மட்டும் துரைசானியின் விருந்துக்கு அனுப்பி விடுவாள்.

துருவனும் வால்டேர் துரையின் குமாரி ஸுஜானும் சுதந்தரமாக அன்பு உணர்ச்சியுடன் பழகி வந்தார்கள். சகோதர பாசம் போன்ற அந்நியோந்நியத்தில் கட்டுண்டிருப்பவர்கள்போல் தென்பட்டார்கள். மணிக்கணக்கில் வம்

பளந்தார்கள். எல்லாரையும் எள்ளி நகையாடினுர்கள்.

ஒரு நாள் காலையில் சிற்றுண்டி கொள்ளத் துருவனை வால்டேர் துரை அழைத்தார். அது முடிந்ததும் ஒரு வேலையாகத் துரைசானி சென்றுவிட்டாள். தனிமையைப் பயன்படுத்திக்கொள்ள நாடிய துருவன் மெல்ல ஸுஜானை நோக்கி, ''வருகிருயா? மீன்களுக்கு வேடிக்கையாக இரை போடுவோம்!'' என்று அழைத்தான்.

அவளும் அதில் உற்சாகம் காட்டவே, ஆளுக்கொரு பெரிய ரொட்டித் துண்டை எடுத்துக்கொண்டு, மீன்கள் நிறைந்துள்ள தொட்டியருகே சென்றுர்கள்.

பளிங்குத் தொட்டியைச் சுற்றிலும் வெல்வெட்டு ஆசனங்கள் போட்டிருந்தன. அவற்றில் அமர்ந்து மீன்களுக்கு இரை போடுவது மிகவும் வசதியா யிருக்கும். இளமை கொழிக்கும் இருவரும் ஆசனங்களை இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்து, ரொட்டியைப் பிய்த்து விரல்களுக்கு இடையே வைத்து உருட்டித் தண்ணீரில் எறிந்தார்கள். அவர்களைக் கண்டதும் அழகிய மீன்கள் வாலை ஆட்டிக்கொண்டு அருகே வந்தன; கண்களை உருட்டிச் செதிள்களை அசைத்து, சுற்றிச் சுற்றி வட்டமிட்டு, போட்ட இரையை லபக்லபக்கென்று பற்றி விழுங்கிவிட்டு, மறு உணவு கேட்க நீர் மட்டத்துக்குமேல் தலையை நீட்டின.

அழகிய மீன்களின் வாயமைப்பு மிகவும் வேடிக்கையாக இருந்தது. அவை சுறுசுறுப்பாகப் பாய்ந்து நீந்துவது மகிழ்வூட்டியது. அடியில் கண்ட பொன்னிற மணலிலிருந்து மீன்கள் விடுபட்டு மேலே துள்ளி எழும்போது, தெள்ளிய நீரிலே செந்தீ அம்புகள் போல் தோன்றின.

துருவனும் குமாரி ஸுஜானும் தங்கள் சொந்த முகங்களையே தண்ணீருக்குள் பார்த்துச் சிரித்துக்கொண்டார்கள்.

துருவன் அவளை நோக்கி, பணிவான குரலில், ''என்னிடம் கண்கட்டி வித்தை விளையாடுவது சரியல்ல, குமாரி ஸுஜான்!'' என்றுன்.

''புரியவில்லையே! என்ன சொல்கிறீர்கள், அழகு ராஜா?'' என்று கேட்டாள் துரையின் குமாரி.

''உன் திருமணப் பேச்சு ஆரம்பித்திருக்கிறது. உன்னை மணக்கச் சம்மதம் கேட்க வருவான் மணமகன்.''

''யார் அவ்விதம் கேட்பதாம்?''

''உனக்குத்தான் அது தெரியுமே!''

''சத்தியமாகச் சொல்கிறேன். எதுவுமே எனக்குத் தெரியாது!'' என்றுள் குமாரி.

''இருக்கலாம். ஆனுல் அந்தப் பெரிய இடத்து இளைஞன், சூதாடிப் பொருள்களை யெல்லாம் இழந்தவன். ஸ்திரீலோலன்; கோழை; சக்தி தேய்ந்தவன்; அழகற்றவன். உன்னைப்போன்ற கட்டிளங் குமரிக்கு - அழகான தங்கக் கட்டிக்கு, குணவதிக்கு - ஏற்ற ஜோடிதான் அவன்!'' என்று எரிச்சலுடன் ஏளனமாய்ச் சொன்னுன் துருவன்.

குமாரி ஸுஜான் அவனை ஏறிட்டுப் பார்த்து, ''எதற்காக அவர் மீது உங்களுக்குப் பொருமை?'' என்று கேட்டாள்.

''எதற்காகவா? குமாரி, உன் மீது நான் காதல் கொண்டிருக்கிறேன். அதுதான் உனக்கே தெரியுமே, போக்கிரித் தங்கம்!'' என்றுன் துருவன்.

குமாரி ஸுஜான் கடினமான குரலில், ''நீங்கள் அசல் பைத்தியந்தான், அழகு ராஜா!'' என்றுள்.

''உன்னை யாரோ சீமான் மகனுக்கு மணமுடிக்கப் போவதாகக் கேட்கும்போதெல்லாம், யாரையுமே கொன்றுவிடும் வெறி எனக்கு ஏற்படுகிறது! என்னை மன்னிக்க வேண்டும், ஸுஜான்!'' என்று கூறிய துருவன் அதற்கு மேல் பேசவில்லை.

குமாரி ஸுஜான் பாதி கவலையும் பாதி ஆனந்தமும் தோய்ந்த குரலில், ''அழகு ராஜா, உங்களுக்கு மணமாகி யிருப்பதல்லவா கைச் சேதமாக இருக்கிறது! இப்போது எதுவும் நடக்க முடியாதே! என்ன செய்வது?'' என்றுள்.

துருவன் சட்டென்று அவள் பக்கம் திரும்பி, ''நான் சுதந்தரம் அடைந்துவிட்டால் - என் பழைய விவாகத்தை ரத்து செய்து அந்தப் பந்தங்களிலிருந்து அறுத்துக் கொண்டு விட்டால் - என்னை மணப்பாயா?'' என்று கேட்டான்.

''ஆமாம், அழகு ராஜா; உங்களையே மணப்பேன்! காரணம் மற்றவர்களைவிட நீங்கள்தான் சிரித்துப் பேசி எனக்குப் பெரிதும் குதூகல மூட்டுகிறீர்கள்....'' என்றாள் துரையின் குமாரி.

''நன்றி..நன்றி....நன்றி.... உன்னை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். வேறு யாரையும் மணப்பதற்கு நீ சம்மதித்து விடவேண்டாம். கொஞ்ச காலம் பொறுத்திரு! பொறுத்திருப்பதாக வாக்களிக்கிறாயா?''

கன்னி ஸூஜான், ''அப்படியே வாக்களிக்கிறேன். சத்தியம்!'' என்றாள்.

கையிலே வைத்திருந்த முழு ரொட்டியைத் துருவன் மீன் தொட்டியின் தண்ணீரில் வீசி விட்டு, 'வருகிறேன்' என்றுகூடச் சொல்லாமல், தலைபோகிற காரியம் போல், அங்கிருந்து எடுத்தான் ஓட்டம்.

தன் வீட்டுக்கு வந்தான். அங்கே மனைவி மதலேன் கடிதங்கள் எழுதிக்கொண்டிருந்தாள்.

''மதலேன், இந்த வெள்ளிக் கிழமை வால்டேர் துரை வீட்டுக்கு விருந்து சாப்பிட வருகிறாயா? நான் போகப் போகிறேன்'' என்று தன் மனைவியைக் கேட்டான்.

அவள், ''ஊஹூம்! எனக்கு உடம்பு சரியில்லை. இல்லை, இங்கேயே நான் இருப்பது மேல்!'' என்றாள்.

துருவன்,''உம், உம். உன் பிரியம் போல் ஆகட்டும். யாரும் உன்னை நிர்ப்பந்திக்கவில்லை!'' என்றான்.

வெகு காலமாகவே, அவன் தன் மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு, அவளை மிகவும் கவனித்து வந்தான். துப்பறிபவன் போல அவளுடைய ஒவ்வோர் அசைவையும் வேவு பார்த்து ஆராய்ந்தான். அவள் செல்லும் . இடங்களையெல்லாம் நன்றாக அறிந்து அவளுக்குத் தெரியாமல் அவளைப் பின் தொடர்ந்து வந்தான். அவன் எதிர்பார்த்திருந்த வேளையும் வந்தது. 'விருந்துக்கு வராமல் வீட்டிலே இருப்பது மேல் என்று பசப்பினாளே, அந்த மேல் பூச்சு வார்த்தையிலே துருவன் ஏமாறவில்லை. அன்று அவள் கள்ளத்தனமாக எங்கே போவாள் என்பதை அவன் ஊகித்துக்கொண்டு விட்டான்.

வெள்ளிக் கிழமை வெளியே வந்ததும், துருவன் ஒரு கோச்சு வண்டியை வாடகைக்கு அமர்த்திக் கொண்டான்.

ரோஷ்புகல் வீதிக்குச் சென்று ஒரு கட்டிடத்துக்குள் நுழைந்தான் துருவன். சற்று நேரத்தில் எடுப்பான ஒரு மனிதர் உள்ளே வந்தார். அவர் மார்பில் பல பதக்கங்கள் தொங்கின. அவர் மாஜிஸ்திரேட் அலுவலையும் போலீஸ் கமிஷனர் அலுவலையும் ஏக காலத்தில் பார்ப்பவர்.

துருவன் அவருக்கு வணக்கம் செலுத்திவிட்டு, ''ஸார், நான் உங்களுக்கு முன்னறிவிப்புச் செய்தபடி என் மனைவி அவளுடைய கள்ளப் புருஷனுடன், தியாகிகள் வீதியிலுள்ள அந்த இடத்தில் இன்று விருந்துண்ணுகிறாள்!'' என்றான்.

போலீஸ் கமிஷனர் அவனுடன் கிளம்பினார். போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று, மூன்று போலீஸ் ஜவான்களைத் துணைக்கு அழைத்துக் கொண்டு, தியாகிகள் வீதிக்குச் சென்றார்.

இரண்டாவது மாடியின் ஓர் அறையில் துருவன் வாசல் மணியை அடித்தான். அறைக்குள்ளிருந்து ஒரு பெண்ணின் கம்மிய குரல், ''யாரது?'' என்று கேட்டது.

போலீஸ் கமிஷனர், ''கதவைத் திறவுங்கள். சட்டத்தின் பெயரால் சொல்கிறேன்: கதவைத் திறவுங்கள்'' என்றார்.

துருவன் ஆத்திரத்துடன் அறைக் கதவின் கைப்பிடியைப் பலமாகத் திருகினான். தோளைப் பொருத்திக் கதவை உடைப்பது போல் தள்ளினான்.

கதவின் பழைய பூட்டுக் கழன்று விழுந்தது. கதவு திறந்தது. துருவன் உள்ளே பாய்ந்தான்.

காணத் தகாத நிலையில் மெழுகு வர்த்தியை ஏந்தி வெடவெட வென்று நடுங்கியபடி நின்று கொண்டிருந்த மதலேன் மீது மோதிக்கொள்ளாமல் சமாளித்துக்கொண்டான் துருவன்.

''இவள்தான்! இவள்தான்!'' என்றான் ஆத்திரத்துடன்.

கமிஷனர் அவளை நோக்கி, ''நீங்கள்தானே திருமதி மதலேன் துருவன் - திரு. ஜார்ஜ் துருவனின் சட்டபூர்வமான மனைவி?'' என்று கேட்டார்.

மதலேன், ''ஆம்'' என்றாள்.

''இங்கே எதற்காக வந்தீர்கள்?'' என்று கேட்டார் போலீஸ் கமிஷனர்.

மதலேன் பதில் சொல்லவில்லை.

அப்போது கட்டிலிலே ஓர் உருவம் கம்பளிப் போர்வைக்குள் பதுங்கிக் கிடப்பது தென்பட்டது. போர்வைக்குள் படுத்துப் பதுங்கிக் கிடந்த பேர்வழி ஆடாமல் அசையாமல் சவம்போல் கிடந்தான்; தலையைத் தலையணைக்குள் புதைத்துக்கொண்டு குப்புறக் கிடந்தான்!

அந்தப் பேர்வழியின் தோளைப் போலீஸ் கமிஷனர் பற்றினார். ''ஐயா!'' என்று உலுக்கி எழுப்பினார். ஆனால் போர்வையை இழுத்து மூடிக்கொண்டிருந்த அந்த உருவம் பிணம் போல் கிடந்தது.

துருவன் அந்த உருவத்தின் அருகே ஆத்திரமாக நெருங்கினான். போர்வையைப் பிடித்து வெடுக்கென்று இழுத்தான். தலையணையைப் பிடுங்கினான். கட்டிலில் கிடந்த உருவம் மந்திரியார் லரோஷ்தான்! சவக்களை தட்டிய அந்தப் பெரிய மனிதரின் முகத்தைக் கண்டுவிட்டான் துருவன். உடனே ஆத்திரத்துடன் பற்களை நறநற வென்று கடித்து மந்திரியின் பிடரியைப் பிடித்து உலுக்கப் போனான்.

''உம் அயோக்கியத்தனத்தை நிலைநாட்ட வேண்டும்; தைரியமாக இருமையா!'' என்று கூவினான்.

கள்ளக் காதலர் வாயே திறக்கவில்லை. மந்திரியாரை நோக்கிக் கமிஷனர், ''நான் போலீஸ் கமிஷனர். உம் பெயரென்ன, சொல்லும்'' என்று அதட்டினார். துருவனும் அதட்டியவனாய், ''சொல்லையா, உன் பெயரை, கோழைப் பயலே! சொல்கிறாயா, நானே சொல்லட்டுமா?'' என்றான், மிருகத்தனமான கோபத்துடன்.

பெரிய மனிதர் லரோஷ் பதில் சொல்லவில்லை.

''சொல்லாவிட்டால் உம்மைக் கைது செய்வேன்'' என்றார் போலீஸ் கமிஷனர்.

''என்னைத் தொடாதீர்கள். என்னைக் கைது செய்ய முடியாது'' என்றார் மந்திரி லரோஷ்.

துருவன் ஆத்திரத்துடன் அவரை ஒரே அடியில் வீழ்த்துவது போல் பாய்ந்து நெருங்கி, ''அயோக்கியப் பதரே! நான் விரும்பினால் உன்னை ஜெயிலில் அடைப்பேன். நான் விரும்பினால் உன்னைச் சந்தி சிரிக்க வைத்து, ஊரெல்லாம் காறி உமிழச் செய்து, உன் பதவியையும் காற்றிலே பறக்கவிடுவேன்'' என்று சீறிவிட்டு, அவரைச் சுட்டிக் காட்டிப் போலீஸ் கமிஷனரிடம், ''ஐயா, இவன் பெயர் லரோஷ் மத்தியோ. மகா பெரிய மனிதன்! அயல் நாட்டு விவகார மந்திரி!'' என்றான்.

இதைக் கேட்டதும் கமிஷனருக்குத் தூக்கி வாரிப் போட்டது! சற்றுத் தயங்கிப் பின்னடைந்தார்.

அவர் லரோஷை நோக்கி, ''உண்மையிலேயே நீங்கள் யாரென்பதை முடிவாகச் சொல்கிறீர்களா?'' என்று கேட்டார்.

லரோஷ் ஆத்திரத்துடன் துருவனைச் சுட்டிக் காட்டி, ''இந்த முறைதான் இந்தப் பயல் பொய் சொல்லவில்லை! இவன் சொன்னபடி நான்தான் மந்திரி லரோஷ்'' என்று கத்தினார்.

மூன்று மாதங்கள் ஓடி மறைந்தன. துருவனின் விவாக ரத்துச் சட்ட பூர்வமாக நிறைவேறியது. அவனுடைய மாஜி மனைவி மதலேனும் பழையபடி மதாம் போரஸ்தி

யரம்மா என்ற பெயருடன் வாழ ஆரம்பித்தாள்.

ஜூலை மாதம் 15 - ஆம் தேதி வால்டேர் துரை 'டுவில்' நகருக்குப் பிரயாணம் செல்லத் தீர்மானித்திருந்தார். அதன் முன் ஒரு நாளை இனிமையாகக் கழிப்பதென்று முடிவாயிற்று.

அதிக உஷ்ணமோ, குளிர்ச்சியோ இல்லாத அருமையான வேளை. 'தாயிலாங்' குருவிகள் நீல வானிலே வளைந்து வளைந்து விளையாடின.

துருவனும் துரையின் இளைய குமாரி ஸுஜானும், ஒருவரையொருவர் அடிக்கடி கடைக்கண்களால் பார்த்துக்கொண்டார்கள். அவர்களின் பார்வையே ரகசியம் பேசியது. துருவன் அந்த வீட்டுக்கு விருந்து சாப்பிட வந்ததால், வால்டேர் துரைசானி குதூகலமாகத் தோன்றினள். விருந்து முடிந்ததும் ஒவ்வொருவரும் தனித் தனியே பிரிந்தார்கள். துருவனும் குமாரி ஸுஜானும் தனித்தார்கள்.

துருவன் மெல்லிய குரலில் பாசத்துடன், "ஸுஜான்!" என்றான்.

"உம்! ஏன், அழகு ராஜா..?"

"உன்னையே விரும்புகிறேன்... உன்னை அடையா விட்டால் பித்தனாகிவிடுவேன்!" என்றான் துருவன்.

"நானுந்தான், அழகு ராஜா. என் அப்பாவைக் கேளுங்களேன். என்னை உங்களுக்குக் கலியாணம் செய்து தர அவர் இணங்கக்கூடும்" என்றாள் குமாரி ஸுஜான்.

"உன் அப்பாவிடம் கேட்பதா? வந்தது ஆபத்து! பத்துத் தரம் சொல்கிறேன்: இது உருப்படாத செய்கை. உங்கள் வீட்டு வாசலிலேயே நான் அதன் பிறகு ஏற முடியாது. பத்திரிகை நிலையத்திலிருந்து 'கல்தா' கிடைக்கும்!"

"அப்படியானால் என்ன செய்ய வேண்டும்?"

"ஒரே ஒரு வேடிக்கை காட்ட வேண்டும். உன் பெற்றோரையும் மீறியாக வேண்டி வரும். நெஞ்சில் துணிவு இருக்கிறதா, குமாரி?"

"இருக்கிறது, ராஜா."

"ஒரே ஒரு வழிதான் உண்டு!"

"என்ன வழி? சொல்லுங்கள், என் அழகு ராஜா!"

"இன்றிரவே நீ வீடு திரும்பினதும், உன் அம்மாவை மட்டும் தனியாகப் போய்க் காணவேண்டும். என்னையே நீ மணக்க விரும்புவதாகச் சொல்லி விட வேண்டும். அவளுக்கு உடனே கோபமும் ஆத்திரமும் பொங்கும்!"

"ஊஹூம்! ஆத்திரம் பொங்காது. அம்மா இதற்குச் சம்மதிப்பாள்."

"அதுதான் இல்லை, குமாரி! துரைசானியைப்பற்றி உனக்குத் தெரியாது! உன் தந்தையைவிட அம்மாவுக்குத்தான் கோபாக்கினி எல்லை மீறும். அம்மா மறுப்பாள். நீ சளைக்கக்கூடாது! என்னைத்தான் மணக்கப் போவதாகச் சொல்லிப் போராட வேண்டும். செய்வாயா இதை?"

"செய்வேன், ராஜா!"

"அப்புறம் கேள்! துரைசானியிடம் அப்படிச் சொல்லிவிட்டு, இதையே உன் தந்தையிடமும் தீர்க்கமாகச் சொல்லிவிட வேண்டும்!"

"சரி....பிறகு?"

"பிறகு, இந்த இடத்தில் தான் நேரடி நடவடிக்கையின் முழு ஜீவனும் இருக்கிறது!"

"நான் துணிந்துவிட்டேன், ராஜா!"

"அப்படியானல், அப்படியானல், சரி..சரி, நல்லது..நல்லது.. நல்லது. நீ தீர்மானித்தே விட்டாயா என் கண்ணே, ஸுஜான்!...... நான் உன்னைச் சிறைவாரிச் செல்வேன்; அது வேடிக்கையா யிருக்கும்!"

அதைக் கேட்டதும் கன்னி ஸுஜான் பெருஞ் சிரிப்புடன் குலுங்கிக் கைகளைத் தட்டிக் கொண்டு, "ஆகா! என்ன பாக்கியம்! என்னைக் கடத்திக் கொண்டு செல்வீர்களா? சிறைவாரிச் செல்வீர்களா? எப்போது? எப்போது?" என்று கேட்டாள்.

"இன்றிரவே - நடுச்சாமத்தில்..."

"இரவில் எங்கே உங்களைச் சந்திப்பது?"

''கோன்கோர்த் சதுக்கத்துக்கு வந்துவிடு. அங்கே ஒரு மூடு வண்டியுடன் நான் தயாராகக் காத்திருப்பேன்'' என்ருன் துருவன்.

''நானும் தயாராக வந்துவிடுவேன், ராஜா!''

துருவன் பாசப்பரிவோடு அவள் கையைப் பற்றிக் குலுக்கி, ''ஆகா! உன்மீது எவ்வளவு பிரியம் எனக்கு! எவ்வளவு நல்ல பெண் நீ! எவ்வளவு துணிவு! வீரகுல மகளிர் போன்றவள் நீ!'' என்ருன்.

அன்றிரவு சரியாகப் பதினெரு மணிக்குத் துருவன் தன் ஜாகையை விட்டுக் கிளம்பி, அங்குமிங்கும் சுற்றிவிட்டுக் கோன்கோர்த் சதுக்கத்தை வந்தடைந்தான். ஒரு வாடகை வண்டியை அமர்த்தி, நிறுத்திவைத்தான். குறித்தபடி குமாரி ஸுஜான் ரகசியமாகத் தன் மாளிகையிலிருந்து கிளம்பி வந்துவிட்டாள்.

துருவன் ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தான். ''ஸுஜான்!'' என்ருன்.

''ஆமாம், நான்தான், ராஜா!'' என்ருள் குமாரி ஸுஜான்.

''வந்துவிட்டாயா? வா, வா. சீக்கிரம் வண்டிக்குள் ஏறு!'' என்ருன் துருவன்.

அவள் உள்ளே நுழைந்து, துருவனின் தோள்களைப் பற்றிக்கொண்டு சாரதியிடம், ''ஓட்டும் வண்டியை!'' என்ருள்.

வண்டி விரைந்தது. அது போகும் வேகத்தில், கட்டிளங்கன்னிக்குப் பேசவே நா எழவில்லை!

அவளை நோக்கித் துருவன், ''உம்! என்ன நடந்தது, தங்கம்?'' என்று கேட்டான்.

''அம்மாவிடந்தான். . . மிகவும் படுமோசமாக இருந்தது!'' என்ருள் ஸுஜான்.

''என்ன சொன்னுள் துரைசானி?''

''மிகமிக மோசம், ராஜா! நான் அவளை அணுகிச் சாதுரியமாகக் கதையை அவிழ்த்துவிட்டேன். கேட்டுக்கொண்டிருந்த அவள் சவம் போல் வெளுத்துவிட்டாள். 'முடியாது; ஒருபோதும் முடியாது' என்று தொண்டை கிழியக் கத்தினுள். என்னை அடித்து விடுவாளோ என்றுகூடப் பயந்தேன், ராஜா! அவள் பைத்தியம் பிடித்தவள் போல் ஆனுள். நாளையே என்னைக் கன்னிகா மடத்துக்கு அனுப்பிவிட்டு மறு வேலை பார்ப்பதாகச் சொன்னுள். அப்பாவும் இதையெல்லாம் காதில் வாங்கிக்கொண்டே அங்கே வந்தார். ஆனுல் நீங்கள் தகுதியான மணமகனல்ல என்று மட்டும் சொன்னுர்! . . என் ஆத்திரத்தையெல்லாம் அவர்கள் கிளப்பிவிட்டார்கள். அவர்களுக்குமேல் நான் கத்தினேன். 'வெளியே போ!' என்று அப்பா கூச்சலிட்டார். 'வெளியே போ!' என்று அவர் கத்தின அந்த அதிர்ச்சிதான் என்னை அங்கிருந்தே விடுபட வைத்தது; வந்துவிட்டேன்!'' என்ருள் குமாரி ஸுஜான்.

தன் அறையிலிருந்து இளம் பெண் ஸுஜான் உறுதியான குரலில் துருவனையே மணக்க விரும்புவதாகச் சொல்லிவிட்டு வெளியேறியதும், துரைசானியும் வால்டேர் துரையும் ஒன்றும் புரியாமல் விழித்தார்கள்.

துரைசானி மிகவும் குன்றிப் போனவளாய், ''இதென்ன விபரீதம்! ஐயோ!'' என்ருள்.

வால்டேர் துரை கோபமாக, ''என்ன விபரீதமா? அந்தப் பயல் துருவன் அவளை மயக்கிவிட்டான் என்று அர்த்தம்!'' என்று உறுமிவிட்டு அறையிலே அங்குமிங்கும் நடந்தபடி, ''நீயுந்தான் அந்த மாயக்காரக் கள்ளனுக்கு அதிகமாக இடங் கொடுத்துவிட்டாய். எப்போது பார்த்தாலும், அந்த வெறும் பயலுக்கு இங்கே உபசாரம்! அழகு ராஜா என்று பட்டம்! இங்கே பார்த்தால் அழகு ராஜா; அங்கே பார்த்தால் அழகு ராஜா; இரவும் பகலும் அழகு ராஜாதான்! அதற்கெல்லாம் கைமேல் பலன் கிடைத்துவிட்டது!'' என்று கத்தினுர்.

அதன் பின் துரைசானி ஓசைப்படாமல், வெறுங் கால்களுடன் பூனைபோல நடந்து, கையிலே ஒரு மெழுகுவர்த்தியை ஏந்தி, கன்னி ஸுஜானின் அறையை அடைந்தாள். அங்கே ஸுஜானைக் காண

வில்லை. ஒரே பாய்ச்சலில் வால்டேர் துரையின் அறைக்குத் துரைசானி ஓடிவந்தாள்.

துரைசானியைக் கண்டதும் அவர் துள்ளியெழுந்தார்.

''இம், இம். என்னது?'' என்று பதறினர் வால்டேர் துரை.

''ஸுஜானைப் பார்த்தீர்களா?'' என்று கேட்டாள் துரைசானி.

''நானு? இல்லையே! ஏன்?''

''அவள்....அவள்....ஓடி...ஓடிவிட்டாள்! அறையிலே காணவில்லை'' என்று அலறினள் துரைசானி.

வால்டேர் துரை ஓடிவந்து மாளிகையெங்கும் தேடிப் பார்த்தார். சந்தேகமே இல்லை. குமாரி ஸுஜான் ஓடியே விட்டாள். எதுவும் பேசவே அவருக்கு ஜீவன் இல்லை. அவர் கோபமும் கொள்ளவில்லை. ஏங்கி ஏங்கிச் சோர்ந்து போனர்.

''போச்சு...போச்சு...போச்சு என்கிறேன்!.. போச்சு...மோசம் போச்சு! அந்தப் பயல் அழகு ராஜா தான் நம் கன்னிப் பெண்ணைக் கிளப்பிக்கொண்டு போய் எங்கே யாவது வைத்திருப்பான்!..நாம் மோசம் போனேம்..!'' என்று வால்டேர் துரை ஆயாசப்பட்டார்.

''மோசம் போனேமா? ஏன் அப்படி?'' என்று கேட்டாள் துரைசானி.

''பின்னே என்ன? இனி அவளை அவன் மணந்தே ஆகவேண்டும்!'' என்ருர் வால்டேர் துரை.

இதைக் கேட்டதும் துரைசானி மிருகம்போலக் கத்தினள்: ''அவனையா? ஒருபோதும் முடியாது. உங்களுக்கென்ன பைத்தியமா?''

வால்டேர் துரை கவலையுடன், ''இதோ பார்! இனி உறுமுவதில் உபயோகமில்லை. அவளை அந்தப் பயல் கிளப்பிக்கொண்டு போய் விட்டான். அவளுடைய கௌரவத்தை யெல்லாம் அழித்துவிட்டான். இனி அந்தப் பெண்ணை அவன் தலையிலேயே கட்டிவிடுவது தான் மிகவும் சிறந்தது! அப்படிச் செய்துவிட்டால் ஊரார், உலகத்தார் எவருக்கும் இந்த வெட்கக் கேடு தெரிய வராது!'' என்ருர்.

மறு நாள் காலையில் வால்டேர் துரைக்குத் துருவனின் நீண்ட கடிதம் ஒன்று கிடைத்தது.

மயங்க வைக்கும் மரியாதைச் செறிவுள்ள வசனங்களில் அந்தக் கடிதத்தைத் துருவன் தீட்டியிருந்தான். துரையின் குமாரி ஸுஜானை வெகு காலமாகவே தான் நேசித்து வருவதாகவும், தங்களிடையே விபரீதமான சகவாசம் எதுவும் எச்சமயத்திலும் நிகழ்ந்ததில்லையென்றும், ஆனல் அவள் முற்றும் சுதந்தரமாகத் தன் எதிரே வந்து, 'நான் உங்கள் மனைவியாக இருக்க விரும்புகிறேன்' என்று சொன்ன படியால்தான், அவளை அப்படி அடைய நினைப்பது சரியென்று தான் கருதியதாகவும், அவளுடைய பெற்றோர்களின் சம்மதம் கிடைக்கும் வரையில் அவளை மறைத்து வைக்கவும் துணிந்ததாகவும் எழுதியிருந்தான்.

வால்டேர் துரை அவனுக்குத் தன் இளைய குமாரத்தி ஸுஜானைக் கல்யாணம் செய்து கொடுக்கச் சம்மதிப்பதாக உடனே பதில் கடிதம் எழுதினர்.

துருவன் - ஸுஜான் திருமணத்துக்கு அக்டோபர் 20-ஆம் தேதி நிர்ணயமாயிற்று. மாதா கோயிலில் மணவிழா இனிது நடைபெற இருந்தது. இதைப்பற்றிப் பல விதமான பேச்சுக்கள் அடிபட்டன.

வால்டேர் துரைசானியம் மாளோ யாருடனும் பேசுவதில்லை. தன்னை அலங்கரித்துக் கொள்வதில்லை. அவள் கிழத்தோற்றத்தை அடைந்துவிட்டாள். ஞாயிற்றுக் கிழமைகளில் பிரார்த்தனைகளைத் தவறவிடாமல் கோயில் சென்று வந்தாள்; துரைசானியின் போக்கே முற்றும் மாறிவிட்டது!

துருவன் 'பிரபு துருவனு'க மாறினன்! 'பிரெஞ்சு வாழ்க்கை'யின் பிரதம அதிகாரியாக உயர்ந்தான்.

மணவிழா நாள்.

பாரீஸ் பட்டணத்தின் அரச வீதியில் கம்பீரமாக அமைந்திருக்கும் மாதா கோயிலின் படிக்கட்டுகளில் நகரின் பிரமுகர்களெல்லாம் நின்று கொண்டிருந்தார்கள். ஜனத்திரள் எங்கும் நிறைந்திருந்தது.

மாதா கோயிலுக்கு வந்திருந்த பிரமுகர்களில் யாராவது ஒரு கூட்டாளி தமக்கு அகப்படுவானு என்று கும்பலைத் துழாவித் தேடினுர், கிழக்கவிஞர் நொபேர். எழுத்தாளர் ஜாக்ரிவாலைக் கண்டதும் அவருடன்சேர்ந்து கொண்டார்.

''பார்த்தீரா, ஐயா? இது சூழ்ச்சிக்காரனுக்கே காலம்!'' என்ருர் கவிஞர் நொபேர்.

''உம்...எங்கிருந்தோ வந்த துருவனின் வாழ்க்கை எப்படியோ அமைந்துவிட்டது. நன்ருக இருக்கட்டும்!'' என்ருர் எழுத்தாளர் ஜாக்ரிவால்.

மண ஊர்வலம் கோயிலுக்குள் நுழைந்தது. மணமகள் ஸுஜான் பிரமாத அழகுடன் தன் தந்தையின் கையைப் பற்றியபடி வந்தாள். எப்போதும் போலவே அவள் தங்கப் பதுமையாகப் பொலிவுடன் விளங்கினுள். அவளைக் கண்ட பெண்களெல்லாம் வாய்க்குள் முணுமுணுத்தார்கள்; சிரித்தார்கள். ஆடவரோ, 'வழிபடும் வனதேவதை' என்று அவளை வாயாரப் புகழ்ந்தார்கள்.

வால்டேர் துரைசானி நடைப் பிணம்போல் நடந்துவந்தாள். அவள் பாதங்கள் தரையோடு ஒட்டிக்கொண்டனவோ? அல்லது அடுத்த அடி எடுத்து வைக்கத்தான் மறுத்தனவோ? அவள் நடக்கவில்லை. ஏதோ ஒரு சக்தியே அவளை இழுத்துச் சென்றது.

மணமகன் துருவன் வந்தான். அவன் விவரம் தெரியாத ஒரு கிழச் சீமாட்டியின் கையைப் பற்றியபடி இருந்தான். தலை நிமிர்ந்து, எந்தப் பக்கமும் பாராது, கம்பீரமாக வந்தான். அவன் மிகவும் அழகான இளைஞனென்று அனைவரும் அபிப்பிராயப் பட்டார்கள்.

விளக்கு அலங்காரங்களால் ஜொலித்துக்கொண் டிருந்த தெய்வ விக்கிரக பீடத்தின் முன்னிலையில் துருவன் தன் மனைவியருகே மண்டியிட்டு வணங்கினுன். மணம் செய்விக்கும் குரு வந்ததும் சடங்குகளை நிறைவேற்ற வழக்கமான கேள்விகளை விடுத்தார். மணமக்களின் மோதிரங்களை மாற்றினுர். இருவரையும் கூட்டுவிக்கும் வார்த்தைகளை உச்சரித்தார். புதுத் தம்பதிகளுக்கு வேத உபதேசம் செய்தார். மணச் சடங்கு முடியும் நேரம் வந்தது.

அப்போது ஓர் அழுகுரல் சிலரைத் திரும்ப வைத்தது. வால்டேர் துரைசானிதான் தன் முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டு விம்மி விம்மி அழுதாள்!

துரைசானி இனி எதுவும் வாய் திறக்க முடியாது. அதைத் தடுத்து நிறுத்தவும் அவளால் இயலாது. ''இவனுடைய அன்பு என் ஒருத்திக்குத்தான் உரியது! இந்த மணம் நடப்பதை நான் அநுமதிக்க மாட்டேன்!'' என்று அவள் கூச்சலிடவும் முடியாது. துரைசானி அழும் நிலையைக் கண்ட பெண்கள், ''பாவம்! பெற்ற மனம் பித்து அல்லவா? வளர்த்த பாசம், இன்று மணமகனுக்குப் பெண்ணை உரியவளாக்கினதும், அவளைப் பிரிய வேண்டுமே என்ற கவலையில் உருகி அழுகிருள்!'' என்று சொல்லிக் கொண்டார்கள்.

மணச் சடங்கு முடிந்தது. கபடமற்ற குமாரியான ஸுஜானைத் துருவன் உடைமை கொண்டுவிட்டான். அவளுடைய கரத்தைப் பற்றியபடி நிமிர்ந்தெழுந்தான். சுற்றிலும் வரையறுக்க முடியாத ஜனத்திரள். மக்கள் ஆரவாரிக்கும் மன்னனுகத் தன்னை எண்ணிக்கொண்டான் துருவன். அவனிடம் எல்லாரும் கை குலுக்கினுர்கள். அவனும் ஏதேதோ சொன்னுன். வாழ்த்துக்களுக்குப் பதில் உரைத்தான்.

அந்தச் சமயம் கவிஞர் நொபேர், ''ஓ, பரம பிதாவே! தாங்கள் என்ன செய்கிருர்கள் என்பதை அறியாமல் மமதையுடன் இந்த மாந்தர் செய்யும் தவறுகளையெல்லாம் மன்னிப்பீராக!'' என்று தம் மனத்துக்குள் பிரார்த்தித்தது, துருவனின் காதுக்கு எங்கே எட்டியிருக்கப்போகிறது!

வெள்ளாட்டியும் வேந்தரும்

ஒரு தினம் தம் பணியாட்களுக்குப் பொற்காசுகளை வாரி இறைத்தார் பகுதாது நகரத்து வேந்தர் ஹாரூனர் ரஷீத்.

பாதுஷா இறைத்த பொற்காசுகளைப் பொறுக்க மறுத்து விட்டாள் ஒரு பணிப்பெண்.

''பொற்காசுகளைப் புறக்கணித்ததேன்?'' என்று அந்தப் பணிப்பெண்ணிடம் வினவினர் பார்த்திபர்.

''பொற்காசுகளை அல்ல; அவற்றுக்குரியவரையே விரும்பு கிறேன்'' என்று பதில் அளித்தாள் அந்தப் பெண்.

அவளுடைய பதிலைக் கேட்டுப் பூரிப்படைந்து அவளை மணந்துகொண்டார் மன்னர்.

வேந்தர் வெள்ளாட்டியை விவாகம் புரிந்துகொண்டது பலருக்குப் பிடிக்கவில்லை. பாதுஷா பணிப்பெண்ணை மணப்பதா என்று பரிகாசம் செய்தார்கள்.

தோழர்களுக்குத் தக்க பாடம் கற்பிக்க வேண்டுமென்று கருதிய காவலர், விருந்தொன்றுக்கு ஏற்பாடு செய்தார்.

குறித்த காலத்தில் விருந்துக் கொட்டாரத்தில் குழுமினர் தோழரெல்லாம். அரசர் மணந்துகொண்ட அடிமை மாதும் வந்து அமர்ந்திருந்தாள்.

மாணிக்கக் கற்கள் பதித்த தட்டுக்களை விருந்தினருக்கு விநியோகிக்கச் செய்தார் வேந்தர்.

''தட்டுக்களைத் தரையிலே வீசுங்கள்'' என்று அமர்ந்திருந் தோரை நோக்கி அவர் ஆணையிட்டார்.

அவர்களோ, தட்டுக்களின் தரத்தை எண்ணி அவற்றைத் தரையிலே வீசித் தாறுமாறுக்குவதா என்று தயங்கினர்கள்.

ஆனல், பணிப்பெண் மட்டும் சட்டென்று போட்டாள் தட்டை; அது பட்டென்று உடைந்தது.

''என் உத்தரவை எல்லாரும் உதறித் தள்ளியபோது நீ மட்டும் அதற்கு உடன்பட்டதேன்?'' என்று வெள்ளாட்டியிடம் வினவினர் வேந்தர்.

''தட்டு உடைந்தால் திரவியத்துக்குத்தான் நஷ்டம். தாங்களோ, என் கணவராக இருப்பது மட்டுமன்றி, இந்த நாட்டின் காவலராகவும் இருக்கிறீர்கள். எனவே, தங்கள் ஆணையை அலட்சியம் செய்வது கணவர் அந்தஸ்துக்கும் களங்கம்; மன்னர் மதிப்புக்கும் மாசு'' என்று தன் செய்கைக்கு விளக்கம் தந்தாள், அந்த வெள்ளாட்டி. அதைக் கேட்டு வெட்கித் தலை குனிந்தார்கள் விருந்தாளிகள். (நுஸ்ஹத்துல் மஜாலிஸ்.)

—எஸ். ஏ. ஜைனுல் ஆபிதீன், 'முஸ்லிம் முரசு'.



அலிகார் பூட்டு

மூர்க்கோத்து குஞ்ஞப்ப

அலிகாரிலே பல குடும்பங்களில் பரம்பரையாக வந்த இந்தத் தொழில் உலகப் பிரசித்தி பெற்றிருக்கிறது.

வட இந்தியாவில் 'அலிகார்' நகரத்துக்கு அருகே ஓர் ஊரில் ஏழைப் பெண் ஒருத்தி இருந்தாள். அவள் அன்றாடம் வேலை செய்து கிடைத்த அற்பமான வருவாயைச் சேர்த்து வைத்து, நாளடைவில் நோட்டாக மாற்றிக் காப்பாற்றி வந்தாள். இப்படிப் பல ஆண்டுகள் சென்றன. அவள் சிரமப்பட்டுச் சேர்த்த ரூபாய்கள் ஆயிரத்து அறுநூறு இருந்தன. எல்லாவற்றையும் ஒரு மண் பானையில் போட்டு மூடி வீட்டுக்குள்ளேயே பள்ளம் தோண்டிப் புதைத்து வைத்தாள். தினம் அந்தப் பெண் அதன் மேலேதான் பாய் விரித்துப் படுப்பாள். ஒரு நாள் அவசியமான காரியத்துக்காக அவள் பணம் எடுக்க எண்ணினாள். புதைத்திருந்த பானையை எடுத்துத் திறந்து பார்த்தாள். ஐயோ பாவம்! பாத்திரத்துக்குள் ஆயிரம் கறையான் பூச்சிகளும் கொஞ்சம் மண்ணுந்தான் இருந்தன. அந்தப் பெண்ணுக்கு ஒரு பெட்டியும் பூட்டும் இருந்திருந்தால், இந்த நிலைமை ஏற்பட்டிருக்குமா?

நாம் இந்த உலகத்தில் அனுபவிப்பது எல்லாம் வினைப்பயன் மட்டுல்ல; பல சமயம் நம் மூடத்தனத்தின் பயனுந்தான். இதுவும் வினைப் பயனைப்போல் தடை செய்ய முடியாதது என்றே சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் இந்தியாவிலேயே சிறந்த பூட்டும் திறவுகோலும் உற்பத்தியாகும் அலிகாரின் அருகிலேயே இந்த நிகழ்ச்சி நடந்திருக்க முடியாது.

அலிகாரில் நூற்றில் இருபத்தைந்து பேர் பூட்டுச் செய்வதாலும் விற்பதாலுந்தான் வாழ்க்கை நடத்துகிறார்கள். அவர்கள் நவீன முறையில் யந்திரங்களின் உதவியைக் கொண்டு பூட்டுக்களைத் தயாரித்து நாடு முழுவதும் விற்கவில்லை. அவர்களுக்கு இது பரம்பரையாக வந்த குடும்பத் தொழில். இந்தத் தொழில் திறமையால் அவர்கள் செய்யும் பூட்டுக்கள், யந்திரங்கள் செய்யும் பூட்டுக்களையும் திறவுகோல்களையும்விட மிகச் சிறந்து விளங்குகின்றன. இந்தப் பட்டணத்தின் சில பகுதிகளில் பூட்டுச் செய்பவரைத் தவிர மற்றவரைப் பார்ப்பதுகூடக் கடினம்.

பூட்டுக்களையும் சாவிகளையும் முழுவதும் ஒரே குடும்பம் உருவாக்கிவிடுவதில்லை. ஒவ்வொரு குடும்பம் ஒவ்வொரு பகுதியை உருவாக்குவதில் பெயர் பெற்றது. ஒரு குடும்பம் லீவர் என்ற வில்லை

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 10-11-'57), கோழிக்கோடு.

யும், மற்ருென்று கொக்கியையும், வேருென்று பூட்டின் மேல் புறத்தையும், இன்னுென்று திறவுகோலையும் உருவாக்கும். யந்திர சாலைகளில் வெவ்வேறு பகுதிகளையும் மொத்தமாக வாங்கி ஒரேவிதமான பூட்டுக்களையும் சாவிகளையும் தயார் செய்கிருர்கள். இதனுலேயே ஒரே சாவியைக் கொண்டு யந்திர சாலையின் பல பூட்டுக்களையும் திறந்துவிட முடிகிறது. அது அதற்கே உரிய சாவி இல்லாவிட்டால் திறக்க முடியாத பூட்டுக்களை நம் நாட்டுக் குடிசைத் தொழிலாளிகள் உற்பத்தி செய்வது நமக்குப் பெருமையாகும்.

பல் எண்ணிக்கை, நீளம், பருமன், பிளவு இவற்றின் மாறுபாடுகளால் ஒவ்வொரு திறவுகோலும் தனிப்பட்டு நிற்கிறது. பல்லின் அகலம் சில சமயம் ஓர் அங்குலத்தில் பத்தில் ஒரு பங்காக இருக்கலாம். ஓர் அங்குலத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கு அளவை மாற்றுவதால், ஆறு பல் கொண்ட திறவுகோல்களில் எத்தனையோ ஆயிரம் கோடி மாறுபாடுகளை ஏற்படுத்தலாம். பீஜகணிதம் படித்தவர்கள் இந்த விஷயத்தை ஒரு நொடியில் உணர்ந்துகொள்வார்கள். ஆங்கிலத்தில் இந்தக் கணக்கைப் 'பெர்முட்டேஷன் காம்பினேஷன்' என்று கூறுவார்கள். மிகவும் நுட்பமான கை வேலைகளால் இத்தகைய வேற்றுமைகளை உருவாக்கும் இந்தியச் சிற்பிகளுக்கு நாம் தலை வணங்கத்தான் வேண்டும்.

பெரிய பெரிய பாங்குகளுக்கும், பொருளையும் தஸ்தாவேஜுகளையும் காக்கும் பெட்டிகளுக்கும் கஜானுக்களுக்கும், சாதாரண ஆறு பல் சாவிப் பூட்டுக்களைவிட எவ்வளவோ அதிக நுட்பமாகச் செய்த பூட்டுக்கள் வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். கஜானு முதலியவற்றுக்கு எத்தகைய மறு சாவிகளைக் கொண்டும் எந்தக் காலத்திலும் திறக்க முடியாத பூட்டுக்கள் வேண்டும். அத்தகைய பூட்டுக்களின் திறவுகோல்களில் உள்ள பல்லில் ஒன்றுக்கொன்று ஓர் அங்குலத்தில் இரண்டாயிரத்தில் ஒரு பங்கு வேற்றுமையை ஏற்படுத்தித்தான் தயார் செய்கிருர்கள். அவ்வளவு நுட்பமான மாறுதல்களை மாற்றி மாற்றிப் பதினைந்து பற்களில் ஏற்படுத்துவதானுல், எவ்வளவு சாவிகள் உருவாக்கலாம் என்பதைக் கணக்கிட, கடற்கரை மணலைக் கணக்கிடத் தெரிந்தவரால்தான் முடியும். பூட்டையும் சாவியையும் இவ்வளவு நுட்பமாகச் செய்வதால், அவற்றின் உலோகம் சற்றும் தேயாததாக இருக்க வேண்டும் என்பது தெளிவு. இப்படிச் செய்த நல்ல பூட்டின் விலை மிக அதிகமாகத் தானே இருக்கும்; ஆகவே, கடைக்காரனிடம் பேரம் செய்வது சரியா?

ஆனுல், பெருவாரியாக இத்தகைய நல்ல பூட்டுக்களை உற்பத்தி செய்ய, யந்திரங்களின் உதவியில்லாமல் முடியாது. கையால் செய்த பூட்டுக்களின் எண்ணிக்கையோ போதவில்லை. யந்திரங்கள் முன் காலத்தில் நம் நாட்டில் இல்லை. அதனுல் அயல் நாடுகளிலிருந்துதான் சிறந்த பூட்டுக்களை ஏராளமாக வரவழைத்தார்கள். 19-ஆம் நூற்ருண்டில் ஒரு பூட்டு யந்திரசாலை முதல்முதலாகப் பம்பாயில் ஏற்பட்டது. இதில் உண்டான பூட்டுக்களும் சாவிகளும் அயல்நாட்டுக் கம்பெனிகளைத் தோற்கடித்தன. சாவிகளும் முன்னேறத் தொடங்கின. இந்தத் தொழில் இன்றும் வளர்ந்துகொண்டே வருகிறது. இன்று சில இந்தியப் பூட்டுக் கம்பெனியில் இருக்கும் அத்தனை தொழிலாளிகள் எந்த அயல் நாட்டுக் கம்பெனிகளிலும் இல்லையாம். இப்போது நம் நாடு பூட்டு ஏற்றுமதி செய்யும் நாடுகளில் முக்கியமான ஸ்தானம் வகிக்கிறது. நியூஸிலண்டு, தென்கிழக்கு ஆசிய நாடுகள் இவையெல்லாம் நம்மிடமிருந்து பூட்டு வாங்குகின்றன. வங்காளத்திலிருந்து மாத்திரம் வருஷத்துக்கு 35 லட்சம் பூட்டுக்களும் சாவிகளும் ஏற்றுமதியாகின்றன. நம் நாட்டில் பம்பாய், அலிகார் இந்த இடங்களில் உற்பத்தியாகும் பூட்டுக்களுக்குத் தான் மவுசு அதிகம்.

அலிகார், பம்பாய் இரண்டையும் விட்டால், மேற்கு வங்காளம் ஒன்றில்தான் பூட்டுத் தொழில் நடக்கிறது. இங்கே பம்பாயைப் போல் யந்திரசாலை இல்லை; அலிகாரைப்போல் குடிசைத் தொழிலாகவே பூட்டு உற்பத்தி நடக்கிறது. ஹௌரா பகுதியில் இரும்பு வேலைக்காரர் ஒருவர் 50 ஆண்டுகளுக்குமுன் ஒரு பூட்டுக் கடை வைத்தார். இந்தத் தொழில் பின்னால் பரவியதால் இப்போது அங்கே 600-க்கு மேற்பட்ட பூட்டுக் கம்பெனிகள் இருக்கின்றன. ஆண்டு ஒன்றுக்கு 2,40,000 பூட்டுக்களை அவை தயாரிக்கின்றன.

வங்காளத்தில் 'சாவிக் கண் காட்சி' ஒன்று நடந்தது. அது மிக நேர்த்தியான காட்சி. பெட்டி, மேஜை, அலமாரி, கஜானு, உள் வாசல் இந்த ஒவ்வொன்றுக்கும் ஏற்றபடி எத்தனை விதப் பூட்டுக்களும் சாவிகளும் அங்கே வைத்திருந்தார்கள் என்பதைக் கூறுவது சாத்தியம் இல்லை. பூட்டினால் பிழைப்பவர் இரு வகைப்படுவார்கள். பூட்டுச் செய்பவர் ஒரு வகையினர்; அவற்றை உடைக்கும் திருடர்கள் மறு வகையினர். பூட்டை உடைக்கும் திருடர்தான் முக்கியமாக இந்தக் கலையின் வளர்ச்சிக்கு ஆக்கம் அளிப்பவர்கள். பூட்டுக்களைத் திருடர் உடைக்க உடைக்க, அவற்றைச் செய்பவர் புது முறையில் பூட்டைத் தயாரிக்கிறார்கள். பதினுயிரக் கணக்கில் புது முறைப் பூட்டுக்கள் தயாரானாலும், அவற்றையும் உடைக்கும் முறையைத் திருடர்கள் கண்டுபிடித்து விடுகிறார்கள்! ஆகவே, பூட்டு உடைக்கும் கலையும் மேலும் மேலும் வளர்கிறது. பூட்டை உடைத்தால், அடுத்த படியாகப் பெட்டியைத் தானே உடைப்பார்கள்? அதனால் உடைக்க முடியாத பூட்டுக்களைத் தயாரிக்கும் கம்பெனிகள், உடைக்க முடியாத பெட்டிகளையும் தயார் செய்ய முன் வந்தன. இத்தகைய பெட்டிகள் அந்தக் கலைக் காட்சியில் இருந்தன.

முன் காலத்தில் மலையாளத்தில் ஒரு பணக்காரரின் பெட்டியை ஒரு திருடன் எடுத்துச் சென்றான். இந்த விவரம் அறிந்ததும், பணக்காரர் பயமில்லாது பேசாமல் இருந்துவிட்டார். 'பெட்டி போனால் என்ன? சாவி என்னிடந் தானே இருக்கிறது' என்று கூறினார். இந்தக் கூற்று முன்பெல்லாம் பரிகாசத்துக்கு இடமாக இருந்தது. இப்போது யோசித்துப் பார்த்தால், வருங் காலத்திய பூட்டு - பெட்டித் தொழில்களின் முன்னேற்றத்தை அறிந்து கூறிய அரிய சொல்லாகவே அது தோன்றுகிறது.

விளம்பரத் திறமை

நியூ யார்க் நகர மருந்துக் கடை ஒன்றின் முன் இந்த வாசகத்தை எழுதியிருக்கிறார்கள்: ''எங்களிடம் இல்லாத சரக்கு, உங்களுக்குத் தேவையில்லை.''

—ஏர்ல் வில்ஸன்

தற்பெருமைக்காரன் இயல்பு

தற்பெருமைக்காரனின் லட்சணம் என்ன தெரியுமா? இதுதான்: 'நான் பிறக்காது போயிருந்தால், ஏன் இவன் பிறக்கவில்லை என்று ஜனங்களெல்லாம் ஆச்சரியப்பட்டிருப்பார்கள்' என்று அவன் நினைப்பான்.

—'சேஞ்சிங் டைம்ஸ்'

மஞ்சரி

பத்தாம் ஆண்டு அட்டவணை

ஜனவரி 1957 — டிசம்பர் 1957

அரசியல்

அரசியலும் மனிதனும் ஜூலை '57..35
கம்யூனிஸ்ட் ராம்தூன் டிச.'57.33
சாணக்கியன் தந்திரம் ஏப்.'57..53
நேருவுடன் பேட்டி டிச.'57..17
பிரம்மாண்டமான தேர்தல் மார்ச்'57..33
வோட்டர்களின் தீர்ப்பு ஏப்.'57.. 2
வோட்டு யாருக்கு? மார்ச்'57..1
ஹிந்தியும் ஆங்கிலமும். ஜூன் '57..45

இலக்கியம்

பருவம் - ரவீந்திரர்—த. நா. கு. ஜன.'57..2
புத்த தரிசனம் - மகாகவி பாரதியார். ஜூன் '57..72
ஜெர்மனியில் சகுந்தலை மே '57..46
ஹிந்தி இலக்கியம் மார்ச்'57..9

உணவு, தாவரம், விவசாயம்

அர்த்தநாரி அவரை ஜூலை '57..22
இனிப்பான பப்பாளி ஆக.'57..57
உணவுக் கலப்படம் அக்.'57..3
காராமணியின் கதை ஏப்.'57..27
கேசரிப் பருப்பு அபாயம் அக்.'57..51
சாப்பாடு சரியா? ஜூலை'57..14
சிங்களம் தந்த செடிப்பசலை செப்.'57..60
தாவர உணவு மகாநாடு நவ.'57..15
தாழம் பூ ஜூலை '57.. 7
தோட்டங்களின் சரிதம் ஏப்.'57..37
நெய்யிலே சோதனை ஜன.'57..90
பயிர் காக்கும் சொக்கப் பனை பிப்.'57..51
பெருங்காய ரகசியம் பிப்.'57..23
வில்வமும் வில்லியும் ஏப்.'57..49

ஊரும் உலகமும்

பிப். '57.. 1 ஆக.'57..1
மே '57.. 1 செப்.'57..1
ஜூன் '57.. 1 அக்.'57..1
ஜூலை '57.. 1 நவ.'57..1
டிச.'57..1

என்னைக் கேளுங்கள்

ஜன. '57..40 ஜூலை '57..57
பிப். '57..6 ஆக.'57..13
மார்ச் '57..15 செப்.'57..45
ஏப்ரல் '57..5 அக்.'57..28
மே '57..25 நவ.'57..22
ஜூன் '57..48 டிச.'57..21

கல்வி

கல்விக் கருவிகள். மார்ச் '57..22
கல்வியின் கருத்து. மே '57..28
சீமையிலே ஒரு குருகுலம் மே '57..41
தமிழ் வளர வழி. ஆக.'57..53
திராவிட மொழிகள். டிச.'57..28
ஜெர்மனியில் தமிழ். ஜன.'57..31

கற்பனை உலகம்

இன்ப மடம் - ரா. ஸ்ரீ. தேசிகன் அக்.'57..25
குதிரை ராஜ்யம். ஏப்.'57..40
சித்திரக் குள்ளர் நாடு. மார்ச் '57..40
சுதந்தரச் சட்ட அரசு. நவ.'57..41
புலன் கடந்த நெறி. மே '57..31
புறம் கண்ட பொன்னுலகம் டிச.'57..3
பேதமற்ற நாடு. ஆக.'57..9
வையகமே ஒரு குடும்பம். ஜூன் '57..38

சமூகம்

உடை அணியும் கலை. மே' 57..32

பெண் எப்படி? மே '57..51
பெண்ணே உயர்ந்தவள். ஆக.'57..16

சரித்திரம்

ஆயிரம் வருஷத்துக்கு முன்னே தேர்தல். பிப்.57..57
ஒரே இந்தியா. செப்.'57..25
கப்பல் வெடித்தது. அக்.'57..58
சிப்பாய்க் கலகமா? ஆக.'57..4
சீனா-இந்தியா வைத்த பெயர் மே '57..53
தமிழரின் வீரமரபு. ஜூன் '57..58
முன் கால ஆயுதங்கள் செப்.'57..54

சிற்பம், கலை

கல்லிலே காவியம். மார்ச் '57..47
சிற்பி செதுக்கிய விலங்கு ஜன.'57..116
டால்ஸ்டாய் சித்திரம் செப்.'57..50
நாடோடி நர்த்தனம் மே '57..3
பந்தல் அலங்காரம், செப்.'57..57
புராதன இந்திய ஓவியம் மே '57..6
புராதன இந்திய விமானம் அக்.'57..13

சிறு கதை

அபிஷேகம் (ஆங்கிலம்) - மஞ்சேரி எஸ். ஈசுவரன். செப்.'57..65
இரவல் தாய் நாடு (மலையாளம்) - எஸ். கே. பொற்றெக்காட் - சௌரி. ஜூன் '57..65
காட்டின் அழைப்பு (வங்காளி) - விபூதி பூஷண்-ஸேனாபதி ஜன.'57..141
சட்டமும் அறிவும் - கலில் கிப்ரான் மே '57..88
சீசாப் பிசாசு (ஆங்கிலம்) - ஸ்டீவென்ஸன்-கே. எஸ். பி. நவ.'57..53
சென்னம்மா (கன்னடம்) - 'ஆனந்தா' - பாமா சிவராம் மே '57..56
தான்ஸேன் (ஹிந்தி) -ஜயசங்கர் பிரசாத் - சௌரி. ஜன.'57..49
நகரும் பானை (சம்ஸ்கிருதம்) - வித்தியாபதி-கா. ஸ்ரீ. ஸ்ரீ. ஜன.'57..14
நினைவுகள் (மலையாளம்) - எஸ். கே. பொற்றெக்காட் - சௌரி. ஜன.'57..56
படிக்கட்டு (பல்கேரியன்) - ஸ்மிர்னென்ஸ்கி. அக்.'57..61
பணங்காய்ச்சி மரம் (மராட்டி) - வி. ஸ. காண்டேகர் - கா. ஸ்ரீ. ஸ்ரீ. ஜன.'57..129
பல் வைத்தியம் (ருஷியன்) - ஜோஷெங்கோ - கே. எஸ். பி. ஜூன் '57..63
பிசாசு ஜோஸ்யர் - 'ஆனந்தா' - பாமா சிவராம் டிச.'57..35
புரட்சிக் கவிஞன் (சீனம்) - பெங் சூயே பெங். ஜூலை '57..61
பெரியவரின் உண்ணாவிரதம் (ஹிந்தி) - ப்ரேம்சந்த் - சௌரி ஏப்.'57..67
மூன்று துறவிகள் (ருஷியன்) - டால்ஸ்டாய் - ஆறுமுகம். ஜூலை '57..68
யமனின் புன்னகை (ஆங்கிலம்) - பெயின் - சாந்தகுமார். பிப்.'57..67
யார் துறவி? (கன்னடம்)-என்பீசம் - சீதா தேவி. ஜன.'57..9
ராஜாளி (ருஷியன்) - கார்க்கி - கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி ஏப்.'57..61
விநோதப் பிராணி (வங்காளி) - ரவீந்திரர்-ஸேனா. ஆக.'57..65
வெள்ளைக் குருவி (பல்கேரியன்) - யார்டன் யாவ்காவ் - 'ஆர்வி' மார்ச் '57..52
ஜனதா எக்ஸ்ப்ரஸ் (தெலுங்கு) - வேங்கடரமண - சீதா தேவி ஜன.'57..97

தத்துவம்

ஆலயத் தத்துவம் ஆக.'57..23
எது பக்தி? செப்'57..48
கடவுள் இருக்கிறார் ஜன.'57.. 7
சக்தியே பெண் ஜன.'57..127
சமயம் தேவை ஜன.'57..153
முன்னேற ஒரே வழி - ராஜாஜி அக்.'57..23

தனிப் படம்

அடிகள் நடந்த வழி. ஜூலை '57.29

தாய்மையும் குழந்தை வளர்ப்பும்

குழந்தையும் துக்கவீடும் மே '57..12

தாயும் குழந்தையும் ஆக.'57..27
பார்மியக் குழந்தைகள் ஏப்.'57..11
மனிதக் கண்ணுடிகள் மார்ச் '57.18

தொழில்

அலிகார் பூட்டு டிச.'57..81
எங்கள் தொழில்..ஜன.'57..114
ஏழைகளின் குடை..மே '57..15
சாணத்திலிருந்து சக்தி ஜன.'57..46
சீமையில் பஸ் டிரைவர் மார்ச் '57..31
செங்கல் உருவாகும் விதம் ஜூன் '57..25
ஜரிகை மாலை டிச.'57..44

நடைச் சித்திரம்

அரைத் தூக்கம் பிப்.'57..25
கல் எறி வித்தை செப்.'57..17
கல்யாணப் போட்டாக்கள் ஏப்.'57..19
வணங்கும் தினுசுகள் செப்.'57..63
வீட்டுப் பாடம் நவ.'57..17

நாடும் மக்களும்

ஆப்பிரிக்கர் வழிபாடு அக்.'57..32
குறும்பர் ஜன.'57..34
சட்கா கானம் பிப்.'57..62
சம்பல் நதிக் கரையில் ஏப்.'57.25
சுதந்தர பல்கேரியா அக்.'57..6
நேபாளத்தில் கல்யாணம் ஜூலை '57..5
பழங்குடிகளின் ஈமச் சடங்கு ஆக.'57..86
பாண்டவர் மடம் பிப்.'57..4
பில்லர்கள் ஜூலை '57..9
பூத நாட்டியம் ஏப்.'57..16
மாறி வரும் ஏனுதியர் அக்.'57..44

பல மொழிகளில் பாரதம்

2000 வருஷப் பயிர் - கி. வா. ஜகந்நாதன் ஜன.'57..67
கவிதைக்கு வழிகாட்டிய நூல் - சீதா தேவி. ஜன.'57..86
காலத்தை நிர்ணயித்த மகாராஷ்டிரம்—கா. ஸ்ரீ. ஸ்ரீ. ஜன.'57..72
கேரளத்துக் கிளிப்பாட்டு— வி. எச். எஸ். ஜன.'57..74
நாட்டுக்குப் புத்துயிர் தந்த காவியம் - த. நா. ஸேனுபதி ஜன.'57..83
பூமி சொல்லும் கதை - 'மதுகரம்' ஜன.'57..76
மாற்றி அமைத்த ஜைனகாவியம் - 'ராமப்ரியா' ஜன.'57..79
மூல காவியம்-வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி. ஜன.'57..65

பிரபல இடங்கள்

கோடைக்கானல் ஜூலை '57..54
கோல்கொண்டா கோட்டை நவ.'57..6
சனிக்குத் தனிக் கோயில் ஏப்.'57..58
நாகேசுவரர் கோயில் செப்.'57..41
பத்மாவதி அம்மன் ஜூன் '57.23
பேரூர் ஆலயம் அக்.'57..16
மலைக்கோட்டை ஜன.'57..17
ராணியின் மாளிகைகள் செப்.'57..38
ருஷியாவில் இந்துக் கோயில் ஆக.'57..59

பிராணிகள்

ஆயிரம் மைல் திரியும் குருவி ஜூலை '57..19
ஒட்டகப் பட்சி அக்.'57..9
ஓநாய்த் தொல்லை ஜூன் '57..27
கலைமான் ஜன.'57..21
கலைமானின் வயசு ஜூலை '57..30
கறையான் பிப்.'57..34
கொம்பில்லா யானை நவ.'57..34
சிலந்தி புரியும் உதவி நவ.'57..3
சிலந்தி விஷம் ஜன.'57..29
தூக்கணங் குருவி பிப்.'57..39
தேனீயின் அற்புத வாழ்க்கை ஜூன் '57..9
பாடும் பறவை மே '57..19
பைரி ஏப்.'57..44
மஞ்சள் சின்னுன் மார்ச் '57..6
மனிதனுக்கு உற்ற துணை டிச.'57..8
மனிதனை மிஞ்சும் மரங்கொத்தி ஆக.'57..47
யானை பிடித்தல் பிப்.'57..28
வரிக் கிளுவை ஜன.'57..111
விலங்கின் குடும்ப வாழ்க்கை அக்.'57..54

புத்தகப் பகுதி

அழகு கொஞ்சும் காஷ்மீர் (தமிழ்) —பகீரதன். நவ.'57..61

அழகு ராஜா - மாபஸான் - எம். ஏ. அலி. டிச.'57..49
அன்னை (இத்தாலியன்) - கிரேஸியா டெலடா - தி. ஜானகிராமன் மே '57..67
உங்கள் உடல் (தமிழ்) - எஸ். மகாலிங்கம் ஏப்.'57..75
உடலுக்குள்ளே (தமிழ்) - எஸ். மகாலிங்கம் ஆக.'57..69
கிளைகொண்ட சமயம் (ஆங்கிலம்) - டி. கே. பாய்-கா. ஸ்ரீ. ஸ்ரீ. ஜூன் '57..73
குருட்டுப் பெண் கதை (ஆங்கிலம்) ஹெலன் கெல்லர்-க. நா. சு. அக்.'57..65
குறும்புக்காரப் பையன் - மார்க் ட்வெய்ன் - 'அருணா' மார்ச் '57..57
கைகொண்டு சிந்தித்தவர் (ஆங்கிலம்) - காரெட் காரெட் பிப்.'57..71
மூத்த பிள்ளை (ஹிந்தி)-'பிக்கு' - சௌரி ஜூலை '57..73
வேதநாயகம் கதைகள் (தமிழ்)- வேதநாயகம் பிள்ளை செப்.'57..71

பொது

அந்தக் காலம் நவ.'57..36
அன்னம் பாலைப் பிரிக்குமா? பிப்.'57.. 2
ஆனந்தம் - விநோபா பாவே ஜன.'57..25
உயிரோடு இருக்கிறோம் பிப்.'57..41
என் தமிழ் ஆசிரியர்கள்— விநோபா பாவே..மே '57..11
கதவைத் திறந்தால்-? அக்.'57..22
சிறந்த நீதிபதி - கைலாசநாத் காட்ஜூ ஜன.'57..93
தற்செயல் விபத்து அக்.'57..19
நட்சத்திரக் கதைகள்—சங்கு சுப்பிரமணியம் ஜன.'57..155
நயா பைசா மே '57.. 5
பாக்கியம் தரும் கற்கள் டிச.'57.26
மனச்சாட்சி நெருக்கடி - ஜவாஹர் லால் நேரு ஜன.'57.. 5
ராஜாஜிக்கு ஞாபகக் கடிதம் பிப்.'57..88
வழிகாட்டும் தீபங்கள் பிப்.'57..54
விநோபா பேட்டி ஜூலை '57..25
விவாக மோதிரம் அக்.'57..57
வீட்டுக்காரிக்கு வேலை. மே '57..24
வெள்ளாட்டியும் வேந்தரும் டிச.'57..80

பொழுதுபோக்கு

இந்தியாவில் கிரிக்கெட் ஜூலை '57..44
காகிதப் பூ ஜூன் '57..41
கொசுவலையில் ஸ்வெட்டர் நவ.'57..45
துணை விளையாட்டு செப்.'57..34
தேர்தல் க்விஸ் மார்ச் '57.. 4

மகாபாரதம்

அர்ஜுனன் தீர்த்த யாத்திரை டிச.'57..12
அரக்கு மாளிகை ஜூன் '57..18
கடோத்கசன் பிறப்பு ஜூலை '57..62
கர்ணனும் அர்ஜுனனும் ஏப்.'57..32
சுந்தனும் உபசுந்தனும் நவ.'57..10
தபதியின் கதை செப்.'57.. 4
திருதராஷ்டிரனும் பாண்டுவும் ஜன.'57..120
திருஷ்டத்தியும்னன் பிறப்பு மே '57..36
துரோணரின் பெருமை மார்ச் '57..36
பகாசுர வதம் ஆக.'57..30
பாஞ்சாலி திருமணம் அக்.'57..36
பீமனும் துரியோதனனும் பிப்.'57..18

மூன்றாம் அட்டை

அபூர்வ விழா ஆக.'57
கணக்கும் கவிதையும் ஜூலை '57
குடிகாரன் கோலம் டிச.'57
குழந்தை செப்.'57
நமது பொதுமொழி—காஞ்சி காமகோடி பீடாதிபதிகள். அக்.'57
பாவச் சுமை ஜூன் '57
மூன்று எறும்புகள்—கலில் கிப்ரான் பிப்.'57
மூன்று பரிசுகள்—கலில் கிப்ரான் மார்ச் '57
யமன் தந்த வரம் நவ.'57

விஞ்ஞானம்

அணுக் கப்பலும் கடிகாரமும் ஏப்.'57..22

ஆகாயக் காவல் ஆக.'57..36
நிபுணர் கணக்கு நவ.'57..28
பனிக் காட்டில் பாதை ஜூன் '57..52
மின்சாரத் திருப்புளி ஜன.'57..55
ருஷியச் சந்திரன் நவ.'57..29

விழாக்கள்

கம்போடியாவில் யுகாதி மார்ச் '57..27
சர்வமங்களை நவ.'57..48
பட்டணப் பிரவேசம் ஜூன் '57..30
வாருணி நீராடல் நவ.'57..50
விரதம் நிறைந்த மாதம் டிச.'57..31

வைத்தியம்

அதிசய மூலிகைகள் ஜன.'57..44
உணவே மருந்து ஏப்.'57.. 8
குணம் தரும் கிராம்பு நவ.'57..39
தேன் மருந்து ஜன.'57..124
புதுப்பித்த இருதயம் பிப்.'57..9
போலிக் கண்ணீர் மார்ச் '57..25

ஜீவிய சரித்திரம்

அப்பா தேவதாஸ் செப்.'57..14
அன்பு விளக்கு செப்.'57.. 9
இரண்டு வீரப்பெண்கள் அக்.'57..41
இரண்டு வேதரிஷிகள் ஜூன் '57..15
ஒற்றுமை கண்ட ஆல்பரூனி செப்.'57..86
ஓமர் கய்யாம் ஜூலை '57..41
கன்னடப் பெண் கவிகள் மார்ச் '57..45
கீர்த்தனை பாடிய ஹரிதாசர் பிப்.'57..65
கும்வரசிம்மனின் தீரம் மார்ச் '57..86
சிசிலி காந்தி செப்.'57..29
சுபாஷ் சந்திர போஸ் செப்.'57..19
தாராவின் மனைவி ஆக.'57..63
பிரகாசத்தின் அருங்குணம் ஜூலை '57..51
பெஷி பாதிரியார் நவ.'57..25
மகாவீரர் ஜூன் '57.. 5
வேதநாயகம் பிள்ளை ஆக.'57..52
ஜான்ஸி ராணி ஆக.'57..41

EDITED PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

குடிகாரன் கோலம்

பன்னிரண்டாம் நூற்றூண்டில் பேரறிஞராக விளங்கிய ஹேமசந்திர ஸூரி, கூர்ஜர நாட்டு அரசனுன குமாரபாலனை ஜைனனுக மாற்றினுர். மன்னன் தன்னைப் பொறுத்தவரையில் மதுபானத்தை அறவே விட்டதோடு, தன் ஆட்சியிலிருந்த பதினெட்டு நாடுகளுல் மதுவிலக்கை அமலுக்குக் கொண்டுவந்தான்.

ஆசாரிய ஹேமசந்திர ஸூரி தமது யோக நூலில் மதுவிலக்குக்கு உரியகாரணங்களை விளக்கியிருக்கிருர். அவர் எழுதியுள்ள சுலோகங்களின் சாரம் இது:

'கள் குடிப்பதனுல் எல்லாக் குறைகளும் விளையும்; எல்லா விபத்துகளும் நேரும். நோயாளி தனக்கு ஆகாத பொருளை எப்படி விடவேண்டுமோ அப்படி மனிதன் மதுவை விலக்க வேண்டும். மது அருந்துவதனுல் உடல் தளரும்; பொறிகள் மெலிவுறும். அதனுல் மயக்கமும் மறதியும் உண்டாகும். எனவே, நஞ்சு போன்ற மதுவை விலக்கவேண்டும்.

'ஒரு பொறி நெருப்பினுல் வைக்கோற் போர் அழிவதுபோல, துளி மதுவைப் பருகினுலும் பகுத்தறிவு, கட்டுப்பாடு, ஞானம், உண்மை, தூய்மை, இரக்கம், பொறுமை ஆகிய நற்பண்புகள் யாவும் அழிந்துவிடும். எவ்வளவு கெட்டிக்காரனுயினும் மது பானம் செய்தால் அறிவை இழந்துவிடுவான்.

'குடியனுடைய அலங்கோலத்தை என்னவென்று சொல்வது! அவன் நாற்சந்தியில் அம்மணமாகக் கிடக்கிருன். தன்னை மறந்த நிலையில், ரகசியமான விஷயங்களை யெல்லாம் அம்பலப்படுத்துகிருன். அவன் பேய் போல் குதிக்கிருன், ஆடுகிருன்; எதையோ இழந்தவன் போலப் புலம்பிக் கீச்சிடுகிருன், தரையில் புரளுகிருன். அன்னைக்கும் மனைவிக்குமுள்ள வேற்றுமையை மறக்கிருன். சாக்கடையருகில் வாயைத் திறந்தபடி விழுந்து கிடக்கும் அவன் முகத்தைப் பொந்து என்று நினைத்து நாய் நீர் கழிக்கிறது.'

—'ஜீவன் ஸாஹித்ய'

Manjari - Dec. '57 **Regd. No. M. 4975**

(Regd. as a Newspaper in Ceylon)

மஞ்சரி

பொருளடக்கம்

ஹேவிளம்பி - மார்கழி **டிசம்பர் 1957**

ஊரும் உலகமும் ..	.. ..	1
புறம் கண்ட பொன்னுலகம் ..	ரா. ஸ்ரீ. தேசிகன்	3
மனிதனுக்கு உற்ற துணை ..	அமிர்த பஜார் பத்திரிகை	8
அர்ஜுனன் தீர்த்த யாத்திரை	.. ..	12
நேருவுடன் பேட்டி ..	.. தாட்	17
என்னைக் கேளுங்கள்	காப்டன் என். சேஷாத்திரிநாதன்	21
பாக்கியம் தரும் கற்கள் ..	.. ஜனப்ரகதி	26
திராவிட மொழிகள் ..	ஃப்ரீ இண்[illegible]யா	28
விரதம் நிறைந்த மாதம் ..	.. ப்ரஜாமத	3[illegible]
கம்யூனிஸ்ட் ராம்துரன் ..	.. சர்வோதயம்	33
பிசாசு ஜோஸ்யர் (கன்னடக் கதை)	'ஆனந்தா' - பாமா	35
ஜரிகை மாலை ..	.. [illegible] மெயில்	44
அழகு ராஜா (பிரெஞ்சு நாவல்)	.. மாபஸான்-அலி	[illegible]9
வெள்ளாட்டியும் வேந்தரும் ..	.. முஸ்லிம் முரசு	[illegible]
அலிகார் பூட்டு ..	.. மாத்ருபூமி	[illegible]1
மஞ்சரி பத்தாம் ஆண்டு அட்டவணை	.. ..	[illegible]4
குடிகாரன் கோலம் ..	.. (3-ஆம் அட்டை	